
HAPPY XMAS
KALKI
23-12-84
6-1-50
கல்கி

# தேர்தல் வேடிக்கைகள்!



● "சுயேச்சை வேட்பாளர்களிலேயே நீங்கதாங்க ஏமாளி!"

"ஏன்யா?"

"அவங்கவங்க ஊர்வலம் விடறதுக்கு வசதியா சைக்கிள், குடை, கோழி, ரோஜாப் பூன்னுச் சின்னம் தேர்ந்தெடுத்துக்கிட்டாங்க... நீங்க என்னடான்னு காண்டா மிருகத்தை எடுத்துக்கிட்டீங்களே!"



● "போனதரம் உங்களுக்குக் கட்சியிலே டிக்கெட் கொடுத்தாங்க; ஜெயிச்சு அமைச்சராக் கூட ஆனீங்க. ஆனா இந்தத் தடவை டிக்கெட் கொடுக்கலியே—ஏன்!"

"எல்லாம் என் திறமையைப் பார்த்துப் பொறாமை.... அதான் காரணம்!"

"கொஞ்சம் விளக்கமாச் சொல்லுங்களேன்!"

"சொந்தத்திலே எட்டு தியேட்டர் கட்டியிருக்கேன், முப்பத்தாறு பங்களா வாங்கிப் போட்டிருக்கேன், அரை டஜன் தொழில்களை ஆரம்பிச்சிருக்கேன்...!"



● "இந்த எலெக்சனைப் பொங்கலுக்கு முன்னாலே வச்சாங்களே புண்ணியவானுங்க...! அவங்க நல்லா இருக்கணும்!"

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"பொங்கலுக்குப் புதுப் புடவை, வேட்டி எடுக்க வேண்டிய செலவு நமக்கெல்லாம் இல்லே பாருங்க!"

கருத்து: தரஜா




● "அந்த ஹோட்டல்லே என்னங்க கலாட்டா?"

"சாப்பிட வந்த ஒருத்தரை, சர்வர்கள் எல்லோருமாச் சேர்ந்து அடிச்சுட்டாங்களாம்—அவமரியாதையாப் பேசினதுக்காக!"

"அப்படி என்ன பேசிட்டார் அந்த ஆளு?"

"என்னய்யா கூட்டு இது? சகிக்கல்லியே! வாயிலே வைக்கவே முடியல்லியே! தேர்தல் கூட்டு மாதிரி இருக்கே!'ன்னு சொன்னாராம்!"



● "போன தடவை நீங்க ஓட்டுக் கேட்க வந்த போது என் கையாலே உங்களுக்கு ஒரு டம்ளர் மோர் கொடுத்தேனுங்க நான்!"

"அட! நல்லா ஞாபகம் வச்சிருக்கீங்களே!"

"எப்படீங்க மறக்க முடியும்? அதான் மோர் டம்ளரைக் கூட நீங்க கையோடவே எடுத்துக்கிட்டுப் போயிட்டீங்களே!"



● "நம்ம அல்பக்குடி பஞ்சு பாகவதர் எலெக்ஷனுக்கு நிற்கிறதாச் சொல்லி நாமினேஷன் கூடப் போட்டாரே.. அப்புறம் ஏன் வாபஸ் வாங்கிட்டார்?"

"அவருக்குத் தேங்காமூடிச் சின்னம் கொடுக்கிறதாச் சொன்னாங்களாம்... அதனாலே கோபம் வந்துடுச்சு!"

# அமேதி முதல் அலகாபாத் வரை


**இந்திரா காங்கிரஸ் தேர்தல் வாக்குறுதிகளை ஓர் அழகான புத்தகமாக அச்சிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பார்த்துவிட்டுச் சொன்னார் ஒரு தலைவர்: "வண்ணமயமாக இருப்பது இந்தியாவின் எதிர்காலம் அல்ல; அட்டையிலுள்ள ராஜீவின் படம்தான்!"**



லக்னோவில் ராஜீவ்—எங்கே பேசினாலும் பலத்த பாதுகாப்பு

கிறிஸ்துமஸுக்கு முதல் நாள், 75 கோடி ரூபாய் செலவில் நடக்க இருக்கும் தேர்தல் திருவிழாவில், இந்தியாவை நிர்வகிக்கப் போகிறவர்களின் எதிர்காலம் நிச்சயிக்கப்படவிருக்கிறது. இந்தத் 'திருவிழா'வில் மூன்று கோடியே எண்பதுலட்சம் வாக்காளர்கள் பங்கு கொள்ள, 4,80,000 வோட்டுச் சாவடிகள்; 25,00,000 தேர்தல் அதிகாரிகள், ஊழியர்கள், 15,00,000 பாதுகாப்பு அதிகாரிகள்; காவலர்கள் உதவுவார்கள். வேட்பாளர்கள் செய்யும் செலவு இருநூறு கோடி ரூபாய்க்கு மேல் போகும் என்று ஒரு கணக்கு சொல்லுகிறது. இவை எல்லாம் இந்தத் தேர்தலின் பரிமாணத்தை ஓரளவு விளக்கத் தரப்படும் புள்ளி விவரங்கள்...

## அனுதாப அலை + அதிகார பலம் + அபரிமித பணம்



### மக்கள் என்ன சொல்லுகிறார்கள்?

"ராஜீவ் ஜெயிப்பாரா என்று கேட்கிறீர்கள்? 101 பர்சென்ட் வெற்றி அவருக்குத்தான்!" என்கிறார் நீண்ட நாள் டெல்லி வாசியான பணிக்கர். "மேனகாவுக்கு நிச்சயம் வெற்றி வாய்ப்பே இல்லை!"

ஐ. என். ஏ. வில் பணியாற்றிய முன்னாள் ராணுவத்தினரான எஸ். எம். சௌத்ரி என்ற 32 வருட லக்னோவாசி சொன்னார்:

"ராஜீவுக்கு இந்திராவின் மரணம் என்னும் அனுதாப அலை முதல் மூன்று நாட்களுக்குத்தான் உதவியாக இருந்தது. பிறகு, இப்போது அது ஓய்ந்து விட்டது. இப்போது மக்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். இதென்ன, ஒரே குடும்பத்தினர்தான் பரம்பரையாக ஆள வேண்டுமா என்று கேட்கிறார்கள்..."

"ராஜீவ் வருவாரா மாட்டாரா, அதைச் சொல்லுங்கள்!"

"ராஜீவ் வருவது நிச்சயம்தான்!" என்று ஒப்புக் கொண்டார் சௌத்ரி.

### லக்னோ பொதுக்கூட்டத்தில் ராஜீவ்


லக்னோவில், பேகம் ஹஸ்ரத் மஹல்



○ "நம்பிக்கையோடு இருக்கிறோம்" என்கிறார் ஏ. கே. அந்தோனி



○ "சாதகமாயில்லாத தொகுதியானாலும் கூட சரியாக மானேஜ் பண்ணினா ஜெயிக்கலாம்" என்கிறார் மூப்பனார்.




× "ஒவ்வொரு துளியும் இந்திய தேசத்தைக் காப்பதே இந்திராவின் இறுதி ஆசை! காங்கிரஸுக்கு வோட்டு போட்டு நாட்டைக் காப்பாற்றுங்கள்!"



✖ திருப்பதியில் பிரதமருக்குப் பொன்னாடை, பிரசாதம்



✖ புதுடெல்லியில் இந்திரா காங்கிரஸ் ஊர்வலம்

பூங்காவில் கூடிய பிரம்மாண்டமான (சுமார் இரண்டு லட்சம் பேர்) கூட்டத்தில், ஒரு மணி நேரம் தாமதமாக வந்தாலும் மேடையில் ஓடி வந்து ஏறினார் ராஜீவ். செக்யூரிட்டி கெடுபிடி எக்கச்சக்கம். காமிரா வைத்திருந்த பைகளை எல்லாம் குடைந்து குடைந்து நான்கு இடங்களில் பார்த்த பிறகு தான் பத்திரிகையாளர் பகுதிக்குள் அனுமதித்தார்கள்! ஆவேசமான பேச்சுக்கள். இளமையான பிரதமர், இளைஞரான பிரதமர்' என்றெல்லாம் நிமிஷத்துக்கு ஒரு முறை நினைவுபடுத்தினார்கள். மத்தியக்கல்வி அமைச்சரும், நேரு குடும்பத்தவருமான ஷீலா கௌல் அவர்களை ஆதரித்து அமைக்கப்பட்ட கூட்டம்.

முன்னாள் உத்தரப்பிரதேச முதல்வரும், இந்நாள் உத்தரப்பிரதேச காங்கிரஸ் (இ) தலைவருமான விசுவநாத் பிரதாப் சிங் அங்கேயே தேர்தல் முடிவுகளை அறிவித்து விட்டார்— கேட்டார் வி. பி. சிங்: ''நீங்கள் இ. காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஓட்டுப் போடுவீர்களா, எதிர்க்கட்சி அணியினருக்கா?''

கூட்டம்: ''இந்திரா காங்கிரஸுக்கு!''

''ராஜீவ்காந்தி பிரதமராக வேண்டுமா, வேண்டாமா?''

கூட்டம்: ''ராஜீவ் தான் பிரதமராக வேண்டும்!''

''ராஜீவ் பிரதமராக வேண்டும் என்றால் இங்கேயிருந்து ஷீலா கௌலைத் தேர்ந்து எடுப்பீர்களா, மாட்டீர்களா?''

கூட்டம்: ''ஷீலா கௌல்!''

வி. பி. சிங் அறிவித்தார்: ''தேர்தல் முடிந்தாயிற்று. ஷீலா கௌல் ஜெயித்து விட்டார். ராஜீவ்தான் பிரதமர்!''

கூட்டத்தில் ஒரே ஆரவாரம்:

ராஜீவ் 22 நிமிடங்கள் பேசினார். தயக்கமான இந்தி. குரலில் ஒரு மெருகு. அவருக்கு மிகப் பிடித்த நண்டு ஜோக்கை மறுபடி சொல்லி எதிர்க்கட்சியின் போக்கை விளக்கினார்: 'ஒரு ஆள் முன்னேறினால், நாலு பேர் அவரைப் பிடித்துக் கீழே தள்ளி விடுவார்கள். ...ஆனந்த்பூர் சாஹிப் தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் ஆதரிக்கின்றனவா? இல்லையா? 24-ம் தேதிக்குள் பதில் வெளிப்படையாகச் சொல்லட்டும்!' என்று எல்லா இடத்திலும், எல்லாப் பொதுக் கூட்டங்களிலும், அரைத்த மாவையே அரைத்தார். 'இந்திரா காங்கிரஸ் ஒன்றே தேசத்தைக் கட்டிக் காக்க முடியும்; இந்தியாவைப் பிளக்க எந்தச் சக்தி முற்பட்டாலும் அது நொறுக்கித் தள்ளப்படும்!' என்று பலத்த கைத்தட்டல்களுக்கு இடையே முழக்கம் செய்தார்.

கமலாபதி திரிபாதியின் மகன் மாயாபதி திரிபாதிக்கு டிக்கட் கொடுக்காமல் ஷீலாவுக்குக் கொடுத்து விட்டதால், அவர் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார். அவருக்காகக் காங்கிரஸ்காரர்களே வோட்டுச் சேகரிக்கிறார்கள் என்று அங்கே சொன்னார்கள். மாயாபதி திரிபாதி கொஞ்சம் காங்கிரஸ் ஓட்டுக்களைப் பிரித்தாலும்கூட, ஷீலா கௌல் வெற்றி பெறுவார் என்று பலரும் தெரிவித்தார்கள்.


### "85-ல் 68 நிச்சயம்"

உத்தரப்பிரதேசத்தின் இந்திராகாங்கிரஸ் பார்வையாளரான முரளிதர் பண்டாரி 85 இடங்களில் 68 இடங்களை இ. காங்கிரஸ் கைப்பற்றும் என்றார்.

''எப்படி?''

கணக்குச் சொன்னார் பண்டாரி: ''மொத்தம் 85-ல், 1980-ல் பிடித்த 51 இடங்கள் அப்படியே எங்களுக்குக் கிடைத்துவிடும். பாக்கி 34. அதில் பாதி நிச்சயம் எங்களுக்குத்தான். ஸோ, 51 + 17 = 68. ''இப்படிக் கூட ஒரு கணக்கு உண்டா என்று

✖ மேனகாவுக்கு சைக்கிள் சின்னம்



யோசிக்க வைத்தது இந்தக் கணக்கு. இன்னொரு காரணமும் சொன்னார் பண்டாரி. ''இந்த நாலு வருஷங்களில் ராஜீவ் மிஸ்டர் க்ளீன் என்று சொல்லும் அளவுக்குத் திகழ்ந்திருக்கிறார். அது மட்டுமல்ல; இந்திரா மறைவைத் தொடர்ந்து நடந்த கலவரங்களைச் சாமர்த்தியமாகச் சமாளித்து விட்டதில் அசாத்தியப் புகழ் ராஜீவுக்கு!''

## அமேதிக்கு வழி எங்கே?

''எங்கே இருக்கிறது அமேதி?'' என்றால் யாருக்குத் தெரியும் என்று புதுதில்லியில் இ. காங்கிரஸ் தலைமைச் செயலகத்திலேயே, விழிவிழியென்று விழிக்கிறார்கள். 'யார் போயிருக்கிறார்கள் அங்கேயெல்லாம்?' என்று கேட்டார் ஒருவர்!

லக்னோவிலிருந்து ராய்பரேலிக்கு பஸ்ஸில் புறப்பட்ட போது, இரண்டு மணி நேரப் பயணத்தை 3 மணி நேரத்துக்கு இழுத்தார் கண்டக்டர். பச்ராவ், கங்கா கஞ்ச் ஆகிய இரண்டே கிராமங்கள் தான் கொஞ்சம் ஆட்கள் நடமாடுகிற இடங்களாகத் தெரிந்தன. மற்றபடி ஒரே வயல் வெளி. ராய் பரேலியில் (சத்யஜித் ராயை சத்யஜித்ரே என்கிற மாதிரி, ராய் பரேலியை ரே பரேலி என்றுதான் நமக்குக் கேட்டுப் பழக்கம்!) அருண் நேருவும் சவிதா அம்பேத்கரும் மோதுகிறார்கள். ராஜீவ் படங்களோடு அருண் நேருவின் கவரொட்டிகளும், இ.காங்கிரஸ் தோரணங்களும்தான் எங்கே பார்த்தாலும். அருண் நேருவின் தேர்தல் அலுவலகத்திற்குப் போன போது, வாசலில் ஒரு டஜன் புத்தம் புதிய ஜீப்புகளும், ஒரு டஜன் கார்களும் காங்கிரஸ் கொடி அலங்காரத்துடன் அணிவகுத்து நின்று கொண்டிருந்தன. அவரது செயலர் குருஜி, சுற்றியிருந்தவர்களுடன் விவாதித்துக் கொண்டிருந்தார். ஆனால் நேர்மாறாக, காங்கிரஸ் அலுவலகம் ஆளே இல்லாமல் தூங்கி வழிந்து கொண்டிருந்தது. அருண் நேரு இங்கே அதிகம் விஜயம் செய்யா விட்டாலும், வெற்றிபெறுவது உறுதி என்று பஸ் ஸ்டாண்டு முனையில் இருந்த ஒருவர் சொன்னார்.

## அமேதி—ஒரு வி. வி. ஐ. பி. தொகுதி

ராய் பரேலி மாவட்டத்திலுள்ள இலோய், சலோன்; சுல்தான்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த அமேதி, கௌரிகஞ்ச், ஜக்திஸ்பூர்— இந்த ஐந்து அசெம்பிளி பகுதிகளே அமேதி தொகுதி. 7,80,000 வோட்டர்கள். ராய் பரேலி போகும் வழியெல்லாம் ராஜீவ் போஸ்டர், ராஜீவ் ஸ்லோகன்கள்தாம்:

'அமேதி என்றால் மலர்ச்சி;
மலர்ச்சி என்றால் ராஜீவ்!'

வழியெல்லாம் பார்த்தால், புதிதாகச் சுவரை எழுப்பிக்கூட இந்த வாசகங்களை எழுதியிருப்பார்கள் போலிருந்தது!

லக்னோவில் கூட்டம் முடிந்த கையோடு, ராஜீவ் தமது அமேதி தொகுதிக்குப் பயணமானார். போகிற வழியெங்கும் மக்கள் காத்து நின்று அவருக்கு மலர்ச் செண்டுகள் அளித்தார்கள். ஸோனியாவும்



ராஜீவும் அவர்களுடன் சகஜமாக உரையாடினார்கள். அமேதி கூட்டத்தில் ராஜீவ் சொன்னார்: ''அமேதியின் வளர்ச்சிக்கு இந்த நான்கு வருடங்களாக அஸ்திவாரம்போடப் பட்டது. இனி இதன் மேல் எழுப்பப்படும் தொழிற்கூடங்களை நிர்மாணத்திட்டங்களை இனி நீங்கள் விரைவில் பார்க்கப் போகிறீர்கள். (1700 கோடி ரூபாய் முதலீடுசெய்து தூங்கிக் கொண்டிருக்கும் அமேதி தொகுதி கிராமங்களில், பொதுத் துறை நிறுவனங்கள் துவங்கப்பட இருக்கின்றன. 40 கோடி ரூபாய் பாரத் ஹெவி எலெக்டிரிகல்ஸ்; 50 கோடி ரூபாய் ஹிந்துஸ்தான் விமான தொழிற்கூடம்; 600 கோடி ரூபாய் செலவில் சுல்தான்பூர் மாவட்டத்தில் உரத் தொழிற்சாலை; பத்துக் கோடி ரூபாய்-500 படுக்கைகள் கொண்ட சஞ்சய் நினைவு மருத்துவமனை; 100 கோடி முதலீட்டில் சிறிய — பெரிய தொழிற்சாலைகள் சில...)

''எனக்கு அமேதிக்கு வந்தாலே சொந்த வீட்டுக்கு வந்தது போல் இருக்கிறது. நீங்களும் டெல்லிக்கு வந்தால் என்னை எப்போது வேண்டுமானாலும் வந்து பாருங்கள்!' என்றார் ராஜீவ்.

நன்றாகப் பேசத் தெரிந்து கொண்டுவிட்டார் இந்த பிராண்ட் நியூ அரசியல்வாதி!

## ஒரு குறுக்கீடு

டிசம்பர் பத்தாம் தேதி, டில்லியில் சரண் சிங் கட்சி அலுவலகத்தில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில், சரண்சிங் விடுத்த செய்தியை அளித்தார்கள்.

'அமேதியில் காங்கிரஸ்காரர்கள் பிரசாரத்தில் மேனகா ஒரு சீக்கியப் பெண். அவளுக்கா உங்கள் ஓட்டு? என்று கேட்கிறார்களாம். இது அருவருக்கத்தக்க பேச்சு. மிகமிக மோசமான பிரசார உத்தி.''

## ராஜீவ் Vs மேனகா:

திரட்டிய தகவல்களை வைத்துப் பார்க்கிற போது, 27 வயது மேனகா, 40 வயது ராஜீவ் காந்திக்கு அவ்வளவு சுலபத்தில் விட்டுக் கொடுத்து விட மாட்டார் என்று தெரிந்தது. ஆனாலும் பின்னவருக்கு வெற்றி உறுதி என்பது பலரின் மதிப்பீடு. சொன்னார் ஒரு பத்திரிகையாளர்: ''ராஜீவுடன் நேருக்கு நேர் மோதும் அமேதி போரில் மேனகாவுக்கு வெற்றி வாய்ப்பில்லை''! மேனகாவுக்கும் கூட்டம் நிறையவே வருகிறது. அவர் இந்திராவின் துன்புறுத்தப்பட்ட நாட்டுப் பெண் என்ற பரிவு மட்டுமே அவர்களிடம் தெரிகிறது. அனுதாபம் மேனகாவுக்கும், வோட்டுக்கள் ராஜீவுக்கும் கிடைக்கும்!

ராஜீவும் ஸோனியாவும் அவ்வப்போது வந்து மருந்துகளும், பண உதவியும், உல

லன் போர்வையும் (தேர்தல் போனஸ்) கொடுத்து வந்தார்கள் என்றும் தெரிவித்தார்கள்.

**மறுபடி டில்லி...**

டிசம்பர் 10—ஆம் தேதி மாலை ஐந்து மணிக்கு, பாரதிய ஜனதாக் கட்சி அலுவலகத்தில் வாஜ்பாயி பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசுவார் என்று காத்திருந்தோம். 5 மணிக்கு வந்தார்!

அத்வானி:

''வாஜ்பாயிக்கு 102 டிகிரி காய்ச்சல்; கை, கணுக்காலில் எலும்பு முறிவு காரணமாக. அதனால் AIIMS டாக்டர்கள் அவர் ஓய்வு எடுக்கத்தான் வேண்டும் என்று கட்டளையிட்டு விட்டார்கள். அவர் மருத்துவமனையில் இருப்பது எங்களுக்குக் கை ஒடிந்த மாதிரி இருக்கிறது. இப்போதே மூன்று நாள் வீணாகப் போய் விட்டது. ஒருநாளைக்கு 6 கூட்டங்கள் நஷ்டம். 10 நாட்கள் அசையக் கூடாது என்று உத்தரவு போட்டு விட்டார்கள் டாக்டர்கள்'' என்றார் அவர்.

வெளிநாட்டு நிருபர்களும், பெண் நிருபர்களும் (எத்தனை பேர்!) ஆக நல்ல கூட்டம்.

''இ. காங்கிரஸைச் சேர்ந்த 'குண்டர்கள்' தாம் இதற்குக் காரணம்'' என்றார் அத்வானி.

''எப்படிச் சொல்லுகிறீர்கள்?'' என்றார் ஒரு நிருபர்.

''தாக்கியவர்கள் என்று கைது செய்யப்பட்ட ஐந்து பேருக்கு ஜாமீன் எடுத்து வெளியே கொண்டு வந்தார்கள் — இந்திரா காங்கிரஸ்காரர்கள். போதுமா?'' என்றார் அத்வானி.

வாஜ்பாயியின் உரையை விநியோகித்தார்கள்:

''வன்முறையை ஊக்குவிக்கும் ஆட்சியாளர்கள், ஏற்கெனவே அதற்கான மிகப் பெரிய விலையைச் சமீபத்தில் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மக்கள் உணர வேண்டும். அரசியல் வன்முறை தேச ஒற்றுமைக்கு உலை வைக்கும்!''

மறுநாள். காய்ச்சல் விட்டுவிட்டது என்று, கையிலும், காலிலும் கட்டுப் போட்ட வாஜ்பாயி, மருத்துவமனையிலிருந்து வெளியேறி, இந்தோருக்குப் புறப்பட்டுப் போய் விட்டார்!

**தலைநகர் நிலவரம்**

தலைநகர் டில்லியில் எங்கே பார்த்தாலும் ராஜீவ், கைச்சின்னம் — போஸ்டர்கள் தாம். காங்கிரஸ் கொடி கட்டிய பிரசார வண்டிகள் ஏராளம், ஏராளம். பாரதிய ஜனதாவைச் சேர்ந்த விஜய்குமார் மல்ஹோத்ராவை, இ.காங்கிரஸ் லலித்மோகன் மோதுகிறார். எச். கே. எல். பகத் (இ.கா.) கைக் கிஷோர்லால் (ஜனதா)வும், பிரம்ம பிரகாஷ் (சுயேச்சை) யும் எதிர்க்கிறார்கள். பா. ஜ. வைச் சேர்ந்த கன்வர்லால் குப்தாவை கே. வி. பந்த் மோதுகிறார். இ. காங்கிரஸ் ஜெயப்பிரகாஷ் அகர்வாலை சிக்கந்தர் பக்த் (பா. ஜ.) எதிர்க்கிறார்.

எப்படி இருக்கும் டில்லி முடிவுகள்?

''அப்படிக் கலபமான வெற்றி இ. காங்கிரஸுக்குக் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. நாங்கள் கடுமையான போட்டியில் ஈடுபட்டிருக்கிறோம்!'' என்றனர் பாரதிய ஜனதா. ''அது மட்டுமல்ல, சீக்கியர்களின் ஓட்டுக்கள் முற்றிலுமாக இந்திரா காங்கிரசுக்குப் போகாது!'' (அன்று மாலையே அகில இந்திய சீக்கியர் சங்கம் (ஷிரோமணி

அகாலிதள் — மாஸ்டர் தாராசிங் பிரிவு) கூட்டம் கூடி, மதச்சார்பின்மையைக் கட்டிக் காக்கும் ராஜீவுக்கே தங்கள் ஓட்டு என்று அறிவித்தனர்)

டில்லியில் பல பேரிடம் விசாரித்ததில், 'கை'யையே ஆதரிப்பது தெரிந்தது.

''ஏன்?''

''குழப்பமான எதிர்க்கட்சிகளின் சிதறல்—ஒற்றுமையின்மை — கையாலாகாத்தனம்...'' என்று பதில்கள் வந்தன.

இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் பப்ளிக் ஒபீனியன் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில், 56 சதவிகிதம் காங்கிரசுக்கும், 23 சதவீதம் பாரதீய ஜனதாவுக்கும் ஆதரவு இருப்பதாகத் தெரிந்தது. சரண்சிங், சந்திரசேகர், மேனகா எல்லாம் 2 சதவிகிதம் 5 சதவிகிதம்தான்!

ஆள் படை, ஆட்டோக்கள், ஜீப்புக்கள், கார்கள் எல்லாம் கைச்சின்னக் காரர்களுக்கு கணக்கு வழக்கு இல்லாமல் இருக்கிறது. எதிர்க்கட்சிகளுக்கு இதில் 100—ல் ஒரு பங்கு கூட இல்லை. டில்லியில் விசாரித்த நபர்கள் எல்லாம் இ. கா.வுக்கு ஆதரவாகவே சொன்னார்கள் காரணம்: 1. நாங்கள் எப்போதுமே 'கை'க்குத்தான் போடுவோம். 2. எதிர்க்கட்சிகள் எங்கே ஒன்று சேர்ந்திருக்கின்றன? 3. ராஜீவ் இளைஞர்; திறமைசாலி. இந்தியாவைக் கட்டிக்காக்கும் திறன் அவரிடம் தான் இருக்கிறது.

அஜீத்சிங் என்ற ஆட்டோ டிரைவரைக் கேட்ட போது, ''எங்கள் தகப்பனார் காலத்திலிருந்து நாங்கள் காங்கிரஸ்காரர்கள் தாம். ஆனால் இந்தக் கலவரத்துக்குப்பிறகு என் வோட் யாருக்கு என்று நான் இன்னும் தீர்மானிக்கவில்லை!''

## ஆக்ரா

ஆக்ராவுக்குப் போன போது, வழியில் கண்ணில் தென்பட்ட இடங்களில் எல்லாம் இந்திரா காங்கிரஸ் பிரசார சுவரொட்டிகளும் தோரணங்களுமே. ஆனால் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின்மை எப்படி இருக்கிறது என்று சாம்பிள் பார்க்க, ஆக்ரா தொகுதி ஒன்று போதும். பாருங்களேன், காங்கிரசைச் சேர்ந்த நிஹால் சிங் ஜெயினை எதிர்த்து, பாரதீய ஜனதா, சஞ்சய்மஞ்ச், சரத்பவார் காங்கிரஸ், ஜாஜீவன் காங்கிரஸ், ரிபப்ளிகன் பார்ட்டி, தூர்தர்ஷி பார்ட்டி, பாரதீய தலித் பாந்தர்ஸ் என்று சுமார் ஒரு டஜன் கட்சிகள் ஆட்களை நிறுத்தியிருக்கின்றன!

### நமது வோட்டு சிரிப்புக்கே!

''என்ன கன்னியப்பா! அந்தாளு உங்கிட்ட வந்து ஏதோ கான்டிராக்ட் அது இதுன்னு பேசிட்டுப் போறாரே—என்ன விசயம்?''

''அவர்தான் நம்ம வட்டச் செயலாளர்... எதிர்க் கட்சிப் போஸ்டர்கள் மேலே அடிக்கறதுக்கு நிறைய சாணி தேவைப்படுதாம்... அந்த காண்ட்ராக்ட் பத்திப் பேச வந்தாரு!''



## ''அமிதாப் ஒரு பச்சா!''

அலகாபாத் இன்னொரு நட்சத்திரத் தொகுதி. அமிதாப் பச்சனும் பஹுகுணாவும் இங்கே மோதுகிறார்கள். 'அமிதாபுக்கு இது வேறு விதமான ஸ்டண்ட் பயிற்சி' என்றார் ஒருவர். மேஜா, கர்ச்சனா, பாரா, அலகாபாத் வடக்கு, அலகாபாத் கிழக்கு என்று ஐந்து அசெம்பிளித் தொகுதிகளில், கிட்டத்தட்ட எட்டு லட்சம் வாக்காளர்கள் அமிதாபா பஹுகுணாவா, என்று தீர்மானிக்கப் போகிறார்கள். (ஒரு காலத்தில் லால் பஹதூர் சாஸ்திரியைத் தேர்ந்தெடுத்து அனுப்பியது அலகாபாத்!)

அமிதாபின் புகழ் காரணமாக, அவருக்கு மக்களை நேரில் சென்று சந்திப்பதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. தாம் தங்கியிருக்கும் சர்க்யூட் ஹவுஸில் அறுபது எழுபது போலீஸ்காரர்களின் பந்தோபஸ்துடன் தேர்தல் வேலைகளைக் கவனிக்கிறார் அமிதாப். பம்பாயிலிருந்து அவருடைய தேர்தல் வேலைகளுக்காக ஐம்பதுக்கு மேற்பட்ட ஜீப்புகள் வந்து குவிந்திருக்கின்றன.

''எனக்கு அரசியல் புதிது. எனக்கு அரசியலே தெரியாது. ஆனாலும் அருமைத் தாயாரை இழந்த ராஜீவுக்குத் துணையாக இருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகத் தான் இந்தத் தேர்தலில் குதித்தேன்!'' என்று வெளிப்படையாக, நேரிடையாக, மக்கள் மனதை உணர்ந்து சொல்லிவிடுகிறார் அமிதாப். ஜனங்களுக்குக் கேட்க வேண்டுமா? ரசிகர் மன்றம் என்ற அமைப்பு ஏதும் இல்லாமலேயே உற்சாகமாக உழைக்கிறார்கள்.

கைதேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான பகுகுணாவின் கை எப்படி இருக்கிறது?

தமக்கு எதிராக நிற்பவர் திடீரென்று பிரபலமானவர் அல்ல என்றாலும், ஏற்கெனவே பிரபலமாகி, திடீரென்று தேர்தலில் குதிக்கும் நட்சத்திரம் என்பதை உணர்ந்தே வேலை செய்கிறார் பகுகுணா. முஸ்லிம் அநுதாபியான இவருக்கு முஸ்லிம் ஓட்டுக்கள் முழுக்க முழுக்கக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். டில்லி இமாம் வேறு இவருக்குச் சாதகமாகப் பேசுகிறார். இருந்தாலும்—

அமிதாப் வெற்றியை ஏற்கெனவே உறுதிப்படுத்தி விட்ட மாதிரி, அவர் அடுத்த தகவல்—ஒலிபரப்பு அமைச்சர் என்ற பேச்சுக்கூட காங்கிரஸ் வட்டாரத்தில் அடிபடுகிறது!

—சாருகேசி

புகைப்படங்கள்: யோகா



வீரம் என்பது போர்க்களத்தில் மட்டுமல்ல
அன்றாட வாழ்க்கையிலும் தான்...
கல்கி
ஜனவரி 13உ
பொங்கல், கிரிக்கெட்
சிறப்பிதழில் ஆரம்பம்!
பி.வி.ஆர்
எழுதும்
தொடர்கதை
ஆகாச
கங்கை
அதிகபக்கங்கள் • இலவச இணைப்பு • அதே விலை.

# தமிழகத்தில் ஆட்சி ?



(மந்திரிகள் முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் போட்டியிடும் தொகுதிகளைச் சுற்றிப்பார்த்த நமது நிருபர்கள் எழுதுகிறார்கள்)

பட்டுக் கோட்டையிலிருந்து பேராவூரணிக்கு பஸ்ஸில் சென்று கொண்டிருந்த போது, அருகில் அமர்ந்திருந்த விவசாயி ஒருவரிடம், ''அப்ப, இந்த முறையும் உங்கள் ஓட்டு 'இரட்டை இலை'க்கு தானே?'' என்று நான் கேட்டதும், என்னை ஒரு மாதிரி பார்த்தார். அக்கம் பக்கத்தில் ஒருமுறை பார்த்து விட்டு, கேட்டார்.

''எம்.ஜி.ஆர் வந்துடுவாரா...?'

''நிச்சயமாக; நல்ல உடல் நலம் பெற்று திரும்பி வருவார்'' என்று கூறியதும் மென்னச் சிரித்தார் அந்த விவசாயி. ''என் பேரை போட்டுத்தாதிக; இங்கன யாரும் அவரு திரும்பி வருவாக என்று நெனைக்கலே. அதனாலேதான் ஓட்டு மாறிப்போடுவாங்கன்னு நம்ம ஊருல பேசிக்கிறாங்க. கீழுக்கு (சட்ட மன்றத்துக்கு) உதயசூரியனிலும், மேலுக்கு 'கை'லேயும் போடுவாங்கன்னு நெனைக்கிறேன்!''

இந்தப் பட்டுக்கோட்டை விவசாயி மட்டும் இதுபோலப்பேசவில்லை, அறந்தாங்கியிலிருந்து தஞ்சாவூர் வரையிலும், பிறகு, மதுரையிலிருந்து ஆத்தூர், ஆண்டிப்பட்டி, சேடப்பட்டி வழியாக, மதுரை வந்த போதிலும் மக்களின் எண்ணங்கள் மேற்கண்ட ரீதியில்தான் இருந்தன.



'வெற்றி நமதே' - ஜெயலலிதா.

-எம்.ஜி.ஆர். நலமாகத்திரும்பிவந்தாலும் அவர் முதல்வராகச்செயல்பட முடியாது.

-தற்போதைய சூழ்நிலையில் மத்தியில் இந்திரா காங்கிரஸ் ஆட்சி இருப்பது நல்லது.

தேர்தல் நெருங்க, மக்களின் எண்ணத்தை மாற்ற அ.இ.அ.தி.மு.க. மிக்க முயற்சி செய்கிறது. ஆனால் மாறுவார்களா என்பது கேள்விக்குறி.

இந்தத் தேர்தலில் மற்றொரு விசேஷம்: போட்டியிடுகிற வேட்பாளர் உள்ளூரைச் சேர்ந்தவரா என்பதைப் பார்க்கிறார்கள். ஆத்தூரில் நெடுஞ்செழியனுக்கு எதிராகப் புறப்பட்டுள்ள வாதங்களில் இதுவும் ஒன்று.

**அறந்தாங்கி**

மந்திரி திருநாவுக்கரசு போட்டியிடும் தொகுதி. அவர் சார்பில் பலமான பிரசாரம். இந்தத் தொகுதியில் வெற்றி-தோல்வியை நிர்ணயிப்பது 25000 வாக்காளர்களைக்கொண்ட முஸ்லிம் சமூகம்தான். இவர்கள் மிகப்பெரும்பாலோர் தி.மு.க. பக்கம். தேர்தல்சமயத்தில் அ.இ.அ.தி.மு.க.வில் முக்கியப் புள்ளிகளான துரை அரசன், மணலூர் ராமனாதன் போன்ற அ.தி.மு.க. பிரமுகர்கள் தி.மு.க.வுக்குச் சென்று விட்டார்கள். போதாக்குறைக்கு அ.தி.மு.க.வில் மிக முக்கிய வீரமான புள்ளி ஒருவர் இவரைத் தோற்கடிக்கச் சூழ்ச்சி செய்கிறார்.

இதைத்தடுத்துவிட்டால் மிகக் குறைந்த வோட்டு வித்தியாசத்தில் திருநாவுக்கரசு வெற்றி பெற வாய்ப்பு இருக்கிறது.

**பேராவூரணி**

மந்திரி கோவேந்தனை எதிர்ப்பவர் வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஏ.எம். கோபு. கோபு தொகுதிக்குப் புதியவர். மூன்றாவதாக செல்லையா என்பவர் போட்டியிடுகிறார். இவர் அ.தி.மு.க.வில் இருந்து விலகியவர். கோவேந்தன் மக்களிடம் கெட்ட பெயர் வாங்கியிருக்கிறார். செல்லையா, 1971லேயே சுயேச்சையாக நின்று ஜெயித்தவர். கோவேந்தனும், செல்லையாவும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இதனால் அந்த சமூகத்தின் ஓட்டுக்கள் பிரிய வாய்ப்பிருக்கிறது. தி.மு.க.வினர் ஏ.எம்.கோபுவை வெற்றிபெறச் செய்வதில் மும்முரமாக இறங்கியிருக்கிறார்கள். பொது மக்களிடம் பேசினால் 'கோவேந்தன் என்று நாம் ஆரம்பித்தவுடன், 'நம்மை தடுத்து, கோவேந்தனைச் சாடுகிறார்கள். ஆக, உண்மைப் போட்டி செல்லையாவுக்கும் கோபுவுக்கும் தான்.



⌘ திருநாவுக்கரசுக்கு வெற்றித்திலகமா?



⌘ எம். ஜி. ஆர். கட்டவுட்டுடன் மந்திரி வீராசாமி ஓட்டுவேட்டை

## பட்டுக்கோட்டை

அ.தி.மு.க.விலிருந்து பிரிந்த பிறகு, எஸ்.டி.எஸ். போட்டியிடும் முதல் தேர்தல். அவரை எதிர்த்து தி.மு.க.வின் சார்பில் ஏ.வி. சுப்பிரமணியமும், அ.தி.மு.க.வின் சார்பில் பி.என். ராமச்சந்திரனும் போட்டியிடுகிறார்கள். எஸ்.டி.எஸ். மந்திரியாக இருந்ததால் பல நன்மைகளைத் தொகுதிக்குச் செய்திருக்கிறார். இதுவரை (12-12-'84) தொகுதிக்கு வந்து எஸ்.டி.எஸ். வாக்கு

# மாறுமா?



⌘ வெற்றியின் விளிம்பில்...

கேட்கவில்லை. போட்டி தி.மு.க.வுக்கும், எஸ்.டி.எஸ்.ஸுக்கும்தான். மதுக்கூர் சுற்றுப்புறங்களில் தி.மு.க.வுக்கு நல்ல ஆதரவு இருக்கிறது. 'தங்களது சின்னம் தராசு' என்பதை வேட்பாளர்கள் மனத்தில் பதியவைப்பதற்கு எஸ்.டி.எஸ். கட்சியினர் சற்றுக் கடுமையாக உழைக்கவேண்டும்; இல்லையேல், ஓட்டுக்கள் 'இரட்டை இலை'யில் விழுந்துவிடும்.

## ஒரத்த நாடு

மந்திரி வீராச்சாமி போட்டியிடுகிறார். எதிர்த்துப் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் எல். கணேசன். எஸ்.டி.எஸ். கட்சியின் சார்பில் அழகு திருநாவுக்கரசு போட்டி. வீராச்சாமி எஸ்.டி.எஸ்ஸால் அரசியலில் வளர்க்கப்பட்டார். எஸ்.டி.எஸ் பிரிந்த போது, இவர் பிரியாதது மட்டும் அல்ல; அதற்குப்பரிசாக மந்திரி பதவியைப்பெற்றது இங்குள்ள எஸ்.டி.எஸ். ஆதரவாளர்களுக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அ.தி.மு.க.வின் ஓட்டுக்களை எஸ்.டி.எஸ். கட்சி வேட்பாளர் பிரித்து விடுவார். ஒரத்தநாடு பஜாரில் மந்திரி வீராச்சாமி ஓட்டுக் கேட்பதை கண்டபோது, அவர் எவ்வளவு தூரம் செல்வாக்கு இழந்திருக்கிறார் என்பதைக்காண முடிந்தது. தெருவில், யாரும் கண்டு கொள்ளாத சூழ்நிலையில் ஜீப்பிலிருந்த மந்திரி கை கூப்பிக் கொண்டு சென்றது வேடிக்கையாக இருந்தது. பல கிராமங்களில் மந்திரி நுழையவேமுடியவில்லையாம். கணேசன் கணிசமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என்பதில் சந்தேகமில்லை.

## ஆத்தூர்

இந்தத் தொகுதியில் மந்திரி நெடுஞ்செழியனை எதிர்த்துப் போட்டியிடுகிறார் தி.மு.க.வேட்பாளர் டாக்டர் திருமதி ராஜாம்பாள். ராஜாம்பாள் இந்தத் தொகுதியைச் சேர்ந்தவர். சென்றமுறை அ.தி.மு.க.வில் தேர்ந்தெடுக்கப்பட்ட வெள்ளைச்சாமி

தொகுதி பக்கமே தலைகாட்டாததால், மக்கள் அ.தி.மு.க.வினர் மீது மிகவும் வெறுப்புற்றிருக்கிறார்கள். நெடுஞ்செழியனைத் தேர்ந்தெடுத்தால், சென்னையில் இருக்கும் அவரை எப்படி பார்ப்பது என்று கேள்வி கேட்கிறார்கள். தேர்தலில் அ.தி.மு.க. பெரும்பாலான இடத்தைப் பெற்று மந்திரிசபை அமைக்க நேர்ந்தால், எம்.ஜி.ஆர். செயல்பட முடியாத சூழ்நிலையில், ஸீனியரான நெடுஞ்செழியனுக்குத்தானே வாய்ப்பு? இதை நெடுஞ்செழியனே பல இடங்களில் பேசியிருக்கிறார். இதைத் தடுப்பதற்கு, நெடுஞ்செழியனையே தோற்கடித்தால்தான் சரி என்று 'வீர'மான அமைச்சர் இங்குள்ள அ.தி.மு.க.வினருக்குப் பணத்தைக் கொடுத்து எதிர்த்து வேலை செய்யச் சொல்லியிருக்கிறாராம். பிரச்சினைகளை வெற்றிகரமாக சமாளித்தால், நெடுஞ்செழியன் வெற்றி பெற வாய்ப்புண்டு. யார் வெற்றி பெற்றாலும் வாக்கு வித்தியாசம் சற்றுக் குறைவாகவே இருக்கும்.

### மதுரை கிழக்கு

மந்திரி காளிமுத்துவை எதிர்த்து நிற்பவர் இடது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர் பி.எம்.குமார். சிவகாசியிலிருந்து. திருப்பரங்குன்றம் வந்து இந்தத்தடவை மதுரை கிழக்கு தொகுதிக்கு மாறியிருக்கும் காளிமுத்து சற்றுக் கடுமையான போட்டியினை எதிர்நோக்கியிருக்கிறார். ''சமீபத்தில் பல வங்கிகளில் கடன் வாங்கி, திருப்பிக் கட்டாமல், சுமார் ஒரு கோடி ரூபாய் வரையிலும் மோசடி செய்த காளிமுத்து' என்று எதிர்கட்சியினர் பிரச்சாரம் செய்கிறார்கள். இந்த நகர்ப்புற தொகுதியில் 1,20,000 வாக்குகள் உள்ளன. பெரும்பாலோர் சௌராஷ்ட்ரா சமூகத்தைச் சேர்ந்தவர்கள். நெசவு வேலை செய்பவர்கள். பி.எம்.குமாரும் ஒரு நெசவாளர் தான். நெசவாளர் போராட்டத்தில் இறங்கி சிறை சென்றவர். தொகுதியில் நன்கு அறிமுகமானவர். 57000 பெண் வாக்காளர்கள் இருக்கிறார்கள். வழக்கமாக 'இரட்டை இலை'யில் ஓட்டுப் போடும் இவர்கள் சற்று மாறி ஓட்டுப் போட்டால் காளிமுத்துவின் கதி அதோ கதிதான். 1977. 1980 தேர்தலில் இந்தத் தொகுதியில் இடது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சங்கரையா நின்று வெற்றி பெற்றிருக்கிறார். அந்தக் கட்சியின் சார்பில் முறையான அமைப்புகள் இருக்கின்றன. தொண்டர்கள் தேனி போல் சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறார்கள்.

### ஆண்டிப்பட்டி

முதல்வர் போட்டியிடுகிற தொகுதியாயிற்றே, சற்று பரபரப்பாக இருக்கும் என்று எதிர்பார்த்துச் சென்றால், 'சப்'. விவசாயிகள் தான் தக்காளி கூடைகளைச்சுமந்த வண்ணம் பரபரப்பாகச் சென்று கொண்டிருந்தார்கள். முதல்வரை எதிர்த்து நிற்பவர் தமிழ்நாடு பார்வர்டு பிளாக் வேட்பாளர் வல்லரசு. சென்ற முறை அ.தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்ட எஸ்.எஸ்.ஆர். மிக அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அதைக் காட்டிலும் அதிகமான வித்தியாசத்தில் முதல்வர் வெற்றி பெறுவார் என்பதில் சந்தேகமில்லை. இந்த தொகுதியில் அ.தி.மு.க. பிரச்சாரபணிக்கு தலைமையேற்று இருப்பவர் சற்று பணத்தை செலவழித்தால்தான் என்ன? அ.தி.மு.க. கொடிகளையும், தோரணங்களையும் தேட வேண்டியதாக உள்ளதே!

### சென்னையில் எப்படி...?

மத்திய சென்னையில் டாக்டர் கலாநிதிக்குப் பிரச்சினை இருக்காது எனலாம். தென் சென்

---

## அடுத்த வாரம்:

# லஞ்சம் ஒழியாதா? கொஞ்சமும் குறையாதா?



'லஞ்சாபகேசன்'' நாடகம் தூண்டிய



✕ லஞ்சாபகேசனாக
ஒய். ஜி. மகேந்திரா

# விவாத அரங்கு

உயர்நீதிமன்ற நீதிபதி நடராஜன்; சென்னை மாநகர கமிஷனர் ஸ்ரீபால், ஏ.வி.எம் குமரன், வழக்கறிஞர் ரங்கராஜன், நல்லி குப்புசாமி முதலிய பலர் பங்கேற்கிறார்கள்

ணையில் கடும் போட்டி! ''வைஜயந்திமாலாவைவிட, செழியன் பல விதங்களிலும் சிறந்தவர், படித்த நடுத்தர மக்கள் மிகுந்த — தென்சென்னையில் வெற்றி செழியனுக்குத்தான்'' என்று அடித்துச் சொன்னார் ஒருவர். மாலா கூட்டங்களில் பேசும்போது, அவர் அரசியலில் எல்.கே.ஜி.தான் என்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கிறார். ஏற்கெனவே வெங்கட்ராமன், அண்ணா போன்ற தலைவர்களைத் தேர்ந்தெடுத்தது இந்தத் தொகுதி.

முடிவு ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் தொகுதி ஆயிரம்விளக்கு. கே.ஏ.கே.வும், மு.க. ஸ்டாலினும் மோதுகிறார்கள். கடும் போட்டி. புரசைவாக்கத்தில் முந்நாள் அ.தி.மு.க்காரர் நாஞ்சில் மனோகரன், தி.மு.க.விலும், முந்நாள் தி.மு.க.காரர் கப்பு அ.தி.மு.க.விலும் நிற்கிறார்கள். தி.நகரில் காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் சௌரிராஜனை கே. சிவிவரதன் (ஜனதா) ஜஜு.கிருஷ்ணமூர்த்தி (பாரதிய ஜனதா) தவிர, சௌரிராஜனின் சகோதரர் பறக்கும்படை சீனிவாசனும் எதிர்த்துப் போட்டியிடுகிறார். சௌரிராஜனின் ஓட்டுகளை, சீனிவாசன் பிரித்துவிடுவார் என்றாலும், தொகுதி மக்களிடையே நல்ல பெயர் பெற்றிருப்பதால் சௌரிராஜன் வருவதற்குச் சான்ஸ் அதிகம். அண்ணாநகரில் தி.மு.க.வுக்குப் பிரச்சினை இருக்காது என்று அ.தி.மு.ககாரர் ஒருவர் கஷ்டப்பட்டு ஒப்புக்கொண்டார். தி.மு.க.பொருளாளர் அன்பழகனுக்கு பூங்கா நகரில் வெற்றிக்குத் கடையில்லை. திருவல்லிக்கேணியில் சென்றமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட ஷெரீப் தொகுதி பக்கம் தலை காட்டாதது பற்றி மக்கள் குமுறுகிறார்கள். சமது வெற்றி பெறுவது உறுதி என்று தி.மு.க.வினர் கூறுகிறார்கள். சேப்பாக்கத்தில் ரகுமான்கானுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்று சொல்லப்படுகிறது. மற்றபடி சைதை, ராயபுரம் எல்லாம் தி.மு.கவின் கோட்டை. பல்வேறு கட்சித் தலைவர்கள் வேட்பாளர்கள், தொண்டர்கள், பொது மக்கள் சந்தித்துப் பேசியதில், தி.மு.க.வுக்கு 12-ல் ஆறு முதல் எட்டு இடங்களாவது கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சேலம் மாவட்டம்

அ.தி.மு.கழகத்தின் கோட்டையெனக் கருதப்படும் சேலம் மாவட்டம் இந்தப் பொதுத்தேர்தலில், கோட்டையின் வாசலைத் திறந்து மற்றவர்களுக்கு வழிவிடத் தயாராகிவிட்டது.

கோஷ்டிப் புயல் அ.தி.மு.கழகத்தைக் கிழக்கு மேற்காகவும், தெற்குவடக்காகவும் தாக்கியுள்ளதை உணரமுடிகிறது. 1980-ல் வீசிய 'சூறாவளிக் காற்றில்' காணாமல் போன தி.மு.கழகம் 84, டிசம்பர் 24-ல் பெய்யவிருக்கும் 'ஓட்டு மழையில்' பலமான அஸ்திவாரத்தை அமைக்கும் என்றே தோன்றுகிறது.

## திருச்செங் கோடு

அமைச்சர் பொன்னையனைத் தோற்கடிப்பதில் தி. மு. க. காட்டும் ஆர்வத்தை விட அ. தி. மு. கழகத்தின் ஒரு அணியினர் காட்டும் ஆர்வமே அதிகமாய் இருக்கிறது. சோடாபாட்டில் மற்றும் கல்லெறிதல், இங்கு அன்றாட வழிபாடாகி விட்டது.

ஆனால், தொகுதி மக்களின் தேவைகளும் அவசரங்களும், அமைச்சரால் உடனடியாகக் கவனிக்கப்பட்டதாலும், தொகுதியை மறவாது அடிக்கடி தொகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டதாலும், பொன்னையனின் 'இரட்டை இலை' வலுப்பெற்றே காணப்படுகிறது. வீடியோ பட விழாக்கள் இத்தொகுதியில் திடீரென முற்றுகையிட்டுள்ளன. இது அவரின் வெற்றியை உறுதிப்படுத்தும் என்றே தோன்றுகிறது.

## பனைமரத்துப்பட்டி

எந்தப் பதவியில் இருந்தாலும், தொகுதியை மறவாது இருப்பவர்களைத்தான், மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதற்குப் பாடமாக இத்தொகுதி அமையும்.

தொகுதியின் பல ஊர்களில் சபாநாயகர் இராசாராமின் பெயரைச் சொன்னாலே 'தர்ம அடி' விழும் போலிருக்கிறது. சில நாட்களுக்கு முன்பு கப்பு ஆறுமுகம் குழுவினர் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியின் போது ''நல்லவர் இராசாராம்''—எனப்பேச ஆரம்பித்ததும், அதுவரை பொறுமையாக



## எங்கள் வோட்டு சிரிப்புக்கே!

''அந்தக் கட்சியிலே ஆரம்பத்திலேருந்து பொருளாளரா இருந்திருக்கீங்க.... இல்லையா?''

''ஆமாம்.''

''கட்சியை வளர்க்க ரொம்பப் பாடு பட்டிருக்கீங்க...?''

''நிச்சயமா.''

''ஆனா இப்ப உங்களுக்குத் தேர்தல்லே நிக்க டிக்கட் கொடுக்கல்லே...''

''உண்மைதான்.''

''அதுமட்டுமில்லே. உங்களைக் கட்சியிலிருந்தே விலக்கிட்டாங்க...''

''வாஸ்தவம்தான்.''

''அப்படி இருந்தும் கட்சித் தலைமைக்கு நன்றி தெரிவிச்சு அறிக்கை விட்டிருக்கீங்களே — அது எதுக்காக?''

''நான்கட்சிப் பணத்திலே முப்பது லட்ச ரூபாய் கையாடல் பண்ணியிருந்தும் என்னைப் போலீஸ்லே ஒப்படைக்காமல் விட்டதுக்காக!''

இருந்த கூட்டம், வெறுப்புடன் ஆவேசக் கூச்சல் எழுப்ப, நிகழ்ச்சியைப் பாதியிலேயே நிறுத்தித் திரும்பியுள்ளார்.

பாராளுமன்ற வேட்பாளரான இரங்கராஜன் குமாரமங்கலம் தனியாக வந்தால் தான் ஊரின் உள்ளே விடுவோம் என்று சொல்கிற அளவிற்கு நிலைமை மோசமாகி உள்ளது. சமீபத்தில் பாப்பாரப்பட்டியில் நடந்த சுப்ரமண்ய சிவா விழாவில் நல்லாட்சி அமையும். எந்த ஆட்சி அமைந்தாலும் அதில் நான் இருப்பேன்'', என்று கே. இராசாராம் பேசியது அ.தி.மு.கழகத் தொண்டர்களிடையே ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

எம். ஜி. ஆர் மன்றப் பொறுப்பாளரும் சுயேச்சை வேட்பாளருமான கந்தசாமிக்குத் தான் அ.தி.மு.க. தொண்டர்கள் முழு மூச்சாக வேலை செய்து வருகிறார்கள். ராஜாராம் வெற்றி வாய்ப்பினைப் பெறுவார் என்று தோன்றவில்லை. மீறி வந்தால் அது தலைதப்பிய கதைதான்.

## நாமக்கல் (ரிசர்வ் தொகுதி)

காற்றில் ஆடிய ஊசல் போல சங்ககிரிக்கும், நாமக்கல்லுக்கும் ஆடி, நாமக்கல்லிற்கே வந்திருக்கிறார் அமைச்சர் அருணாசலம். சென்ற இருமுறையும் தோற்ற வேலுசாமி தான் இப்போதும் தி.மு.க. வேட்பாளர்.

---

**மேலட்டை:**

வண்ணப்படம்: **யோகா**

---

மோகனூரிலிருந்து தண்ணீர் கொண்டு வர உடனடி நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லி 80 பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற அமைச்சர் இதுவரை அதற்கான அடிக்கல்லைக் கூட நாட்டவில்லை என்பது அவரது வெற்றியைப் பெரிதும் பாதிக்கிறது.

மாவட்டச் செயலர் சண்முகத்தின் ஆளான பாவலர் முத்துசாமியும் நகரப் பொருளாளரான பாஷாவும் அமைச்சருக்கு எதிராக வெளிப்படையாகவே வேலை செய்கின்றனர்.

## கோவை மாவட்டம்

இம்மாவட்ட அ. தி. மு. கழகத்தைப் பொறுத்து எதிரி தி.மு.க. அல்ல. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்போடும் சிரத்தையோடும் சேர்த்து வைத்த' வெறுப்பு தான் முதல் எதிரி.

புதிய எழுச்சியுடன் போராடும் தி. மு. கழகத்தைச் சந்திக்க அ. தி. மு. கழகத்தால் முடியவில்லை. தொண்டர் பலம் இருந்தும் சோர்வாக இருக்கிறது. 'வீடியோ டேப்' நிலைமையை மாற்றுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

## கிணத்துக்கடவு

நெகமம் கந்தசாமி அ.தி.மு.கழக வேட்பாளர். முன்னாள் அமைச்சரான கண்ணப்பன் தி.மு.க. வேட்பாளர். வன்முறை உச்சக் கட்டத்திற்கே சென்று போலீசார் துப்பாக்கி சூடு நடத்தி — ஒருவர் உயிரிழக்கும் அளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளது. திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட இந்த வன்முறை நிகழ்ச்சியில் ஒரு அப்பாவித் தொண்டனின் உயிர் அநியாயமாய்ப் பலி ஆகியுள்ளது.

கோவையைச் சேர்ந்த மூத்த நிருபர் ஒருவர் சொன்னார். ''கந்தசாமி விருப்பப்படிதான் அந்தத் தொகுதியில் மழை கூட பெய்யும். அவர் நெகமம் நெப்போலியன். அவரன்றி ஓரணுவும் அசையாது. குறுநில மன்னன். அவரை எதிர்த்தவன் ஒழிந்தான்.''

அந்தக் காலத்து ராஜ பரம்பரையைக் காட்டும் தோரணை. அதிகார பலம் — பணபலம் — இவையிரண்டும் கந்தசாமிக்குக் கிடைக்கும் வெற்றிக்கு உறுதுணை என்றே சொல்லலாம்.

## தொண்டாமுத்தூர்

அமைச்சர் அரங்கநாயகம் தொகுதிமாறி இங்கே போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து வலது கம்யூனிஸ்டு வேட்பாளர் வெள்ளியங்கிரி.

அமைச்சரைச் சந்திக்கவே முடியவில்லை. எப்பொழுது கேட்டாலும், தொகுதிக்குச் சென்றிருக்கிறார் என்ற பதிலே கிடைக்கிறது. தி. மு. க. வோட்டுக்களை நம்பி நிற்கிறார் வெள்ளியங்கிரி.

நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் போது மிகக் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் அரங்கநாயகம் தேறுவார் என்று தெரிகிறது.

## பொதுவாக

இந்தத் தேர்தல் தமிழகத்தைப் பொறுத்தவரை, ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும் தேர்தல் என்று அரசியலை ஆழ்ந்து கவனிப்பவர்கள் கூறுகிறார்கள். காரணம், அ. தி. மு. க. — இ. காங்கிரஸ் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்ட கோளாறுகளும், அந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்களே எதிரிடையாக வேலை செய்வதும் ஆகும். மக்களைப் பொறுத்த மட்டில், ஒரு மாற்றத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள்.

**—நமது நிருபர்கள்**
**படங்கள்: முரளி**




புதிய

# பால் அடங்கிய
# ஃபாரெக்ஸ்
# திட உணவு

இரண்டு டின்கள் வாங்கும்போது

புதிய ஃபாரெக்ஸ் அதிக சுவையானது
புதிய ஃபாரெக்ஸ் அதிக முழுமையானது


நீங்கள் பாசத்துடன் ஊட்டும் ஒவ்வொரு கவளமும்
உங்கள் பாப்பாவின் வளர்ச்சிக்குச் சிறந்ததாகும்.




இவ்வாய்ப்பு தேர்ந்தெடுத்த சில ஊர்களில் மட்டும்
விசேஷ டின்களின்மீது ஸ்டாக் உள்ளவரை வழங்கப்படும்.

உடல் நலத்தின் உறைவிடம்—கிளாக்ஸோ

CLARION/B/GX/5/203 TML



பேச்சுவார்த்தை நடத்தலாமா?
அடக்குமுறை
ஈழத் தமிழர்
தேர்தல் பிரச்சாரம் வன்முறையின்றி அமைதியாக நடக்கிறது —
தேர்தல் கமிஷன்
திமுகவுக்கே ஓட்டளியுங்கள்!
வோட்டு
1984 டிசம்பரில் வாக்காளர்!
1985 ஜனவரியில் வாக்காளர்!

கல்கி



1984 டிசம்பர் 23
மலர் : 43 இதழ் : 21
ரக்தாக்ஷி மார்கழி 8



சிந்தித்துச் செயல்படுவோம்—4.

# நமது வோட்டு யாருக்கு?

செயல்பட வேண்டிய தருணம் நெருங்கி விட்டது. சிந்தித்ததில் என்ன கண்டோம்? அனுதாப அலை, ஸ்திரத்தன்மை போன்ற வாதங்கள் அபத்தமானவை; ஒரு தனி மனிதனின் பிரபையையோ, சினிமா பிராபல்யத்தையோ, கட்சியின் சின்னத்தையோ கருதி வோட்டுப் போடுவது அசட்டுத்தனம்; கட்சியின் கொள்கைகளைக் கவனித்து வோட்டுப் போடுவதே சரி; ஜனநாயகம் நன்கு செயல்பட அதுவே வழி. அப்படிப் பார்க்கும் போது 35 வருஷங்களுக்கு மேல் நாட்டை ஆண்டு (அதில் 16 ஆண்டுகள் இந்திரா ஆட்சி) வந்த கட்சியின் கொள்கைகள் நற்பலன் தரவில்லை என்பதையும் மாறாக நாட்டை நாசப்படுத்தி வருகின்றன என்பதையும் விரிவாகத் தெளிவாக உணர்ந்தோம். இ. காங்கிரஸின் பொருளாதாரக் கொள்கைகள் மாறாத வரையில் 'லஞ்ச ஊழலை ஒழிப்பேன்' என்ற ராஜீவின் தேர்தல் வாக்குறுதியும் நிறைவேறவே முடியாது. விலைவாசிகள் ஸ்திரப்படாது, வேலையில்லாத் திண்டாட்டமும் தீராது.

இதற்கு மறுபுறமாக எதிர்க்கட்சிகளிடம் மாறுதலான நல்ல பொருளாதாரக் கொள்கைகளும் செயல் முறைத் திட்டங்களும் உள்ளன. இவற்றுக்கு ஒரு வாய்ப்புத் தருவதே நல்லது. ஆனால் எதிர்க்கட்சியினர் ஒருங்கிணையாமல் பிளவுபட்டு நிற்கின்றனரே, இவர்கள் வென்றாலும் கூட்டணி அரசு தானே அமையும் என்ற கேள்வி எழும். கூட்டணி அரசு குற்றமல்ல. மேற்கு ஜெர்மனியில் கூட்டணி அரசு நெடுங்காலம் பதவியில் இருந்து திறம்பட இயங்கியுள்ளது. மேற்கு ஜெர்மனிக்கு அது சரி. ஆனால் இங்கு நமது அனுபவம் வேறாயிற்றே? ஜனதா அரசு அவிழ்ந்த நெல்லிக்காய் மூட்டையாகச் சிதறக் கண்டோமே? உண்மைதான். ஆனால் அதே தவற்றை மறுபடி செய்ய மாட்டார்கள். 'முன்பு இந்திராவை மன்னித்து மறுவாய்ப்புத் தந்தது போல் இப்போது நம்மை மன்னித்து மக்கள் பதவியில் அமர்த்தியுள்ளார்கள் அந்த நம்பிக்கையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்' என்ற எண்ணம் இருக்கும். (இது தி.மு.கவுக்கும் பொருந்தும், மாநில அளவில்.) நமது இந்த எதிர்பார்ப்பு பொய்த்துச் சில காலம் சென்று மத்தியில் ஆட்சி கவிழ்ந்தாலும் குற்றமில்லை. ஏனெனில் அதற்குள் இ. காங்கிரஸ் ஒரு பாடம் கற்றிருக்கும். 'அனுதாப அலை' இருந்தும் நாம் வெற்றி பெற முடியவில்லை எனில் நமது கொள்கைகளை மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்றுதானே அர்த்தம்' என்ற ஞானோதயம் ஏற்பட்டுக் கொள்கைகளை மறுபரிசீலனை செய்யும். ஒருவேளை இ. காங்கிரஸே இந்தத் தேர்தலிலும் வென்று மறுபடி பதவிக்கு வருகிறது என்று வைத்துக் கொண்டாலும், ஆட்சி அமைக்கத் தேவையான குறைந்தபட்ச ஸ்தானங்களை மட்டுமே நாடாளுமன்றத்தில் பெறுமானால் அதற்கு ஒரு பயம் இருக்கும். ஓர் ஆத்ம பரிசோதனைக்கு வழி பிறக்கும். தவறுகளைத் திருத்திக் கொள்ள அக்கட்சி முன்வரும். மக்களை மட்டுமின்றி எதிர்க்கட்சிகளையும் மதித்து நடந்து கொள்ளும்.

ஆக, எப்படிப் பார்த்தாலும் இன்றைய சூழலில் இ. காங்கிரஸ்—அ. தி. மு. க. ஆகிய ஆளும் கட்சி அணிக்கு வோட்டுப்போடாமல் எதிர்க்கட்சி அணிக்கே நம் வோட்டைப் போடுவது அத்யாவசியமாகிறது. ஆனால் ஒன்று. ஒரு வேட்பாளர் நேர்மையாளர், திறமைசாலி என்பது உங்களுக்கு மிக உறுதியாக, நம்பகமாகத் தெரியுமானால் அவருக்கு ஆதரவு அளியுங்கள். அத்தகையவர் எந்தக் கட்சியில் இருந்தாலும் நாட்டுக்கு நல்லது செய்வார்.

சிந்தித்துச் செயல்படாமல் வோட்டை வீணடிப்பது தேசத் துரோகம். மறவாதிருப்போம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

# வட்டமேஜை

● மூதறிஞர் ராஜாஜியின் கருத்துக்களை உரிய நேரத்தில் வெளியிட்டு, வாக்காளன் தெளிந்த சிந்தனையோடு வாக்குச்சீட்டைக் கையில் எடுக்க வழிவகுத்த, 'கல்கி'க்கு நன்றி!
சென்னை—29, ஆர். ராமசுவாமி.

● 'அமேதி முதல் ஆண்டிப்பட்டி வரை' தேர்தல் கண்ணோட்டம் தெளிவாகவும், சிறப்பாகவும் அமைந்திருந்தது.
நெல்லிக்குப்பம், ரா. ஜோதிராமன்

● வருவாய் பெருகுவதற்கு வாசகர்கள் கொடுத்த யோசனைகள் ஒவ்வொன்றும் மணிசன். நிச்சயம் நடுத்தரவகுப்பினர்களுக்கு உபயோகமாயிருக்கும்.
சென்னை—4, தி.சு. ஸ்ரீராம்.

● முதல்வர் எம்.ஜி.ஆர்.' உடல்நிலை குறித்து, அமெரிக்காவிலிருந்து ஒருஅறிக்கை என்ற தலைப்பில் நம்பகமான தகவலைத் தந்ததற்கு நன்றி!
கவுந்தப்பாடி, பாரதிநாகராஜன்.

● தோற்றவரையும் வாழ்த்திய பெருந்தகையாம் கல்கி' அவர்களைப் பற்றி நினைவு கூர்ந்த விஷயம் ஸிம்ப்ளி ஸுபெர்ப்!'
அயன்பரம், த. சத்தியநாராயணன்.

ரசித்தேன். சேம்பர்ஸ் ஆங்கில அகராதிப் படி guerrilla என்பதை கெரில்லா என உச்சரிக்கவேண்டும். அது guerrilla என்ற ஸ்பானிஷ் வார்த்தையிலிருந்து வந்ததாகும். சிறிய யுத்தம் என்று அர்த்தம்.
சென்னை—17, கே.எஸ். கணபதி

சொல்லுக்கு அர்த்தம் கூறுவது வேறு. அந்தச் சொல் உருவான விதத்தை ஆராய்வது வேறு. Che Guera என்ற நபரின் பெயரிலிருந்து அந்தச் சொல் உருவாயிற்று என்பது சரியே என்கிறார் மேஜர் ஜெனரல் மகாதேவன்.

● பதினைந்து வயதிற்குட்பட்ட மாணவ—மாணவிகளுக்கு கர்நாடக சங்கீதத்தில் ஆர்வம் ஏற்பட ஸ்ரீ காஞ்சி ஆசார்ய ஸ்வாமிகள் அனுமதியுடன் ஒரு போட்டி நடத்த இருக்கிறோம். ஸ்ரீதியாகப் பிரும்ம கீர்த்தனைகளில் இருபத்தைந்து கீர்த்தனைகளை ஸ்வரம் சுத்தமாக பாடுகிற ஒவ்வொருவருக்கும் ஒரு சிறிய தங்க மெடல் அளிக்கஇருக்கிறோம். இது விஷயமாக விவரம் தெரிந்து கொள்ள கீழ்கண்ட விலாசத்துடன்தொடர்பு கொள்ளலாம்.
மானேஜிங் டிரஸ்டி,
ஸ்ரீகாஞ்சி காமகோடி கர்நாடக சங்கீத சேவா டிரஸ்டு,
1, சாலைத்தெரு, காஞ்சிபுரம் —631502.

## அங்குமா சில்லறைப் பஞ்சம்?


● 18-11-'84 கல்கி' இதழ் அட்டைப்பட விளக்கத்தில் 'நந்திதாண்டவம்' என்று கொடுத்திருக்கிறீர்கள். மேலைக் கடம்பூரி லுள்ள பாலா நடராசர் சோழர் காலத் திருமேனியல்ல. அது வங்காளத்தைச் சேர்ந்த சிலைப்படைப்பு. இவ்வகை நடராசரை நர்த்தேசுவரர்' என்று வங்காளத்தில் அழைக்கிறார்கள். காட்டுமன்னார்குடிக்கு அருகிலுள்ள மேலைக்கடம்பூர் அருள்மிகு அமிர்தகடேசுவரர் கோயிலில் இருக்கும் பாலா நடராசர் என்னும் அற்புதப் படிமத்தைப் பற்றி ஆய்வுக் கட்டுரை எழுதியிருக்கிறேன் நான்.
திருச்சி, டாக்டர். ஆர். கலைக்கோவன்

(சிற்பத்துக்கு விளக்கம் அளித்த நடனக் கலைஞர், மேற்படி சிற்பம் வங்கத்தை, கிழக்கிந்தியப் பகுதியைச் சேர்ந்தது என்றுதான் கூறியிருக்கிறார். இச்சிற்பம் முதலாம் ராசேந்திர சோழன் காலத்தில் அங்கிருந்து கொண்டு வரப்பட்டிருப்பதை நடனக் கலைஞர் ஒப்புக் கொள்வதோடு, டாக்டர் சிவராம மூர்த்தியின் நூலில் உள்ளதையும் சுட்டிக் காட்டுகிறார். சிற்பம், பால நடராசர் மாதிரி அப்பட்டமாக இல்லை என்பதை ஒப்புக் கொள்ளும் நடனமணி, அந்த இன்ஸ்பிரேஷனில் சிற்பி உருவாக்கியிருக்கலாம் என்று கூறுகிறார்.
—ஆசிரியர்.)

● மேஜர் ஜெனரல் மகாதேவன் கொரில்லாப் போர்' பற்றி கூறியிருப்பதைப் படித்து

● பி.ஏ. பரீட்சைக்காகச் சென்று கொண்டிருந்தேன். கோடம்பாக்கத்துக்கு ஒரு டிக்கெட் கேட்டு இரண்டு ரூபாயை நீட்டினேன். 'ஒரு ரூபாயாகக் கொடு சில்லறை இல்லை' என்று கூறிவிட்டார். என்னிடமோ சில்லறையாக 75 பைசாதான் இருந்தது. என்நிலைமையைப் புரிந்துகொண்டு, ஒரு பெண்மணி 25 பைசாகொடுத்து டிக்கெட் எடுக்க உதவி செய்தார். இல்லையேல் அன்று நான் பரீட்சை எழுதியிருக்க முடியாது அல்லது டிக்கெட் இல்லாத பயணம்தான் செய்திருக்கவேண்டும். மத்திய அரசாங்க இலாக்காவான தபால் மற்றும் ரயில்வேயிலேயே சில்லறை இல்லை என்று கூறுவது ரொம்பக் கொடுமை.
சென்னை—82, ஆ. வெங்கடேஷ்.

(கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)



# சிறிதே சாதுர்யம் தேவை, கேசம் பெறுகிறது இளமை!





வாழ்க்கையின் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் கேசம் நரைக்கத் துவங்குகிறது. இளமை அத்துடன் முடிவடைந்துவிட்டதாக நீங்களும் எண்ணி விடுகிறீர்கள். அது வெறும் பிரமைதான். சிறிதே சாதுர்யமாக செயல்பட்டால் இத்தகைய தவறான பிரமை விலகிவிடும்.

**கேள்வி:** கேசத்திற்கு ஹேர் டை எப்போது உபயோகிக்கத் துவங்கலாம்?

**பதில்** : கேசம் நரைப்பதற்கு குறிப்பிட்ட வயது என்று எதுவும் கிடையாது. அதனால், நரைக்கும் அறிகுறி தோன்றியதுமே கேசத்துக்கு ஹேர் டை உபயோகிக்கலாம்.

**கேள்வி:** ஆனால் ஹேர் டை செய்வது என்பது பெரும் தொல்லையும், மிகுந்த நேரம் தேவைப்படும் விஷயமும் அன்றோ?

**பதில்** : நீங்கள் கண்டகண்ட ஹேர் டைகளை வாங்கி உபயோகித்தால் அப்படி நேரக்கூடும். ஆனால் கோத்ரெஜ் ஹேர் டை உபயோகிப்பது மிகவும் எளிது. காரணம் இது தானாகவே பரவி விடுகிறது.

**கேள்வி:** அடிக்கடி ஹேர் டை உபயோகித்தால் கேசத்திற்குக் கெடுதல் ஏற்படக்கூடுமா?

**பதில்** : உயர்தரக ஹேர் டையாக இருந்தால் சிறிதும் கெடுதல் இல்லை. அதாவது, கோத்ரெஜ் ஹேர்டை கேசத்துக்குக் கருமை பூட்டுவது மட்டுமல்லாது, அதை அழகுறச் செய்து பளபளப்பும் அளிக்கிறது.

**கேள்வி:** கோத்ரெஜ் ஹேர் டையினால் துணிகள், தலையணைகள் இவற்றில் கறைகள் ஏற்படுகின்றனவா?

**பதில்** : கோத்ரெஜ் ஹேர் டையினால் அப்படி ஏற்படாது. காரணம்; அது மற்ற ஹேர் டைகளைப்போல் கேசத்தின் மேற்பகுதியில் தங்கி விடாமல் கீழ்ப்பகுதிவரை ஊடுருவிச் செயல்புரிகிறது.

**கேள்வி:** கோத்ரெஜ் ஹேர் டை எவ்வளவு நாட்களுக்கு செயல் திறனை நீடித்து வைக்கின்றது?

**பதில்** : குறைந்த பட்சம் மூன்று-நான்கு வாரங்களுக்கு.

**கேள்வி:** கோத்ரெஜ் ஹேர் டையின் மூலம் கேசத்தை டை செய்தபின் வழக்கம்போல் தலையை அலசிக்கொள்ள முடியுமல்லவா?

**பதில்** : ஆம். கேசத்தை நல்ல ஷாம்பூ போட்டு அலசவும். பிறகு அதன்மீது ஹேர் ஆயில் அல்லது க்ரீம் போட்டுக் கொள்ளலாம்.

**கேள்வி:** ஹேர் டையினால் ஒருவித துர்நாற்றம் வீசுகிறது என்கிறார்களே?

**பதில்** : வேறு ஹேர் டைகளைப் பொறுத்தவரை இவ்விதமாக இருக்கக்கூடும். ஆனால் கோத்ரெஜ் ஹேர் டையில் நல்ல நறுமணம் உண்டு. தவிர இதில் கண்டிஷனரும் உள்ளது.

**கேள்வி:** கோத்ரெஜ் ஹேர் டை பற்றி வேறு ஏதேனும் கூற முடியுமா?

**பதில்** : கோத்ரெஜ் லிக்விட் ஹேர் டை 20 மிலி மற்றும் 40 மிலி. பாட்டில்களில் கிடைக்கிறது. இரண்டு ஷேடுகளில், டார்க் ப்ரௌன் மற்றும் நேச்சுரல் ப்ளாக். உங்கள் கேசத்தின் இயற்கையான வண்ணத்துக்கேற்றதைத் தேர்ந்தெடுங்கள்.




Godrej

**கோத்ரெஜ்
பர்மனென்ட் லிக்விட்
ஹேர்டை**

தெரிந்தவர்களுக்கு மட்டுமல்ல
உபயோகிக்க விரும்பும் புதியவர்களுக்கும்

கோத்ரெஜ் தயாரிப்பு.

CLARION/B/GS/22/203 TML



## 8

அழைப்பு மணி அடிக்க கம்பிக் கதவு கேட்தான். ஆனால் இந்தக் கடவை போன முறை மாதிரி இல்லாமல் அவனால் சூழ்நிலையை ரசிக்க முடிந்தது. மனத்திற்குள் சீட்டியடிக்க வேண்டும்போன்ற இச்சை தளும்பிக் கொண்டிருந்தது. காலிங் பெல்லை ஒற்றை விரலால் தட்டினான்.

'டிடிங்' என்று சந்தோஷமாய் உள்ளே மணியடித்தது.

அகலக் கண் கஸ்தூரிதான் இன்றைக்கும் கதவைத் திறந்தாள்.

''அப்பா இருக்காரா?'' என்று குரலில் சர்க்கரையைச் சேர்த்துக் கொண்டான்.

பளீரென்று திரும்பிக் கஸ்தூரி உள்ளே ஓடிற்று.

ராதா இந்த வயதுக்கு இன்னும் எப்படியெல்லாம் ஆட்டம் போடப் போகிறதோ? என்று எண்ணிக்கொண்டான்.

''வா தம்பி....'' என்றாள் கௌரி குரலில் சற்றும் உயிரில்லாமல். கூடவே, நாகரிகம் கருதி, ''தங்கச்சி கல்யாணமெல்லாம் நல்லபடியா நடந்திச்சா?'' என்று கேட்டாள்.

''நல்லா நடந்ததுங்க'' என்றான் பாலா உள்ளே நுழைந்து. சோஃபாவில் முதுகு சாயாமல் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

அனுவோட அப்பா இல்லீங்களா?''என்று கேட்டான் பாலா.

''என்ன விஷயம் தம்பி?'' கௌரியின் குரலில் சற்றே எரிச்சல் பூசியிருந்தது.

''அவர்கிட்டக் கொஞ்சம் பேசணும்... அனுவோட கல்யாணம் பத்தி.''

''அதுக்கென்ன இப்ப? என்ன பேசணுங்கற?''

''வெவரமாப் பேசலாம்மா...அவர் இருந்தாக் கூப்பிடுங்களேன்.''

சற்று யோசனையுடன் அவர்கள் திரையைத் தள்ளிக்கொண்டு மறைந்தார்கள்.

கண்களில் ஏராளமான கேள்விகளுடன் வீரராகவன் அறைக்குள் நுழைந்தார்.

பாலா மரியாதைக்கு எழுந்து கொண்டான்.

''என்ன விஷயம் தம்பி... என்னைப் பார்க்கணும்னியாமே... உக்காரு... பேரு என்ன சொன்னே?''

''பாலாங்க.''

எப்படி ஆரம்பிப்பது? எங்கேயிருந்து?

''அனுவோட பேசிட்டிருந்தேங்க... கல்யாணம் நின்னு போச்சன்னு....'' என்று அவருடைய கண்களின் பிரதிபலிப்பைப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

''ம்'' என்றார் நழுவலாய்.

''உங்க பொண்ணுக்கு இப்ப இருவத்தாறு வயது ஆயிடுச்சு. நீங்களும் ரொம்ப நாளா ஒரு நல்ல மாப்பிள்ளையாத் தேடிட்டிருக்கீங்க... செவ்வா தோஷம்னு ஒதுங்

கறது கொஞ்சம். நட்சத்திரம் சரியில்லன்னு ஓடிப்போறது கொஞ்சம். எல்லாம் ஒத்துக்கிட்டாக்கூட ஒடம்புல கோளாறுன்னு வேணுன்னு ஓடறது மீதிப் பேரு... இல்லியா?''

''ஒரு நாள்ல ஜாதகம் பார்த்து முடியற விஷயமில்லேயே தம்பி இது?''

''பாலான்னே கூப்பிடுங்க.... ஜோசியம், ஜாதகம்லாம் நானும் நம்பறேன். இல்லேங்கலே... நமக்கு நல்லது நடக்கும்னு போட்டிருந்தா அந்த நெனைப்பிலே நாம சுறுசுறுப்பா வேலைங்களைச் செய்யறோம். பலன் கெடைக்கறது. கெட்ட காலம்னு சொல்லிட்டா அவ்வளவுதான். அதை நெனைச்சு நெனைச்சே வேலைங்க கெட்டுப் போவுது... நம்பளை ஒன்னுக்கும் ஒதவாதவனு மூலைல வச்சிடுது... இந்த ஜோசியம் நமக்கு எதுக்குங்க? ஜோசியம் பாத்து, ஜாதகம் பாத்து பத்துப் பொருத்தமும் இருக்கு. இவங்க மன்மதனும் ரதியும் போல வாழ்வாங்கன்னு பெரியவங்க நடத்தி வச்ச எத்தனை ஜோடி மனசால ஒத்துப் போவாம தெனம் சண்டை போட்டுக்கிட்டு இருக்காங்க தெரியுமா?''

''கதை சொல்றியா தம்பி?''

''இல்லீங்க... என் மனசுக்குப் பட்டதை எடுத்துச் சொல்றேன். கொஞ்சம் நிதானமா யோசிக்கப் பாருங்க... இந்த ஜோசியம் பாத்து அனுவுக்குக் கல்யாணம் நடக்கும்னு நம்பறீங்களா?''

''அதெல்லாம் நம்ப கையிலயா இருக்கு?''

''அவ தலையில என்ன எழுதியிருக்குதுன்னு உங்களால படிக்க முடியலே. ஜோசியக்காரனாலயும் முடியல... அந்த ஆம்பிளையா நான் இருக்கலாம் இல்லீங்களா?''

''அதெப்படி? உங்க ஜாதி என்ன? எங்க ஜாதி என்ன?''

''சொல்லுங்க... நீங்க ஒசந்த ஜாதியா? நான் ஒசந்த ஜாதியா?''

''இப்ப எதுக்கு அந்த வம்பெல்லாம்? அனுசூயாவை வேற ஜாதியில கொடுக்கிறதா இல்ல தம்பி'' என்றாள் கௌரி புடவைத் தலைப்பை முடிந்து கொண்டே.

''ஒங்க ஜாதில எவனும் வரமாட்டான். வரவனெல்லாம் இது ஜாதகத்தில கோளாறு, நட்சத்திரம் சரியில்லே, காம்பன்சேஷனு ஐம்பது பவுன் குடு, நூறு பவுன் குடுன்னு கேட்டுட்டு வரான். நீங்களும் அதுக்கு ஏத்த மாதிரி குடுத்துக் கல்யாணம் பண்ணி வக்கிறீங்க... நாளைக்கு என்ன ஆவும்?''

''என்ன ஆயிடுங்கறே?''

''கல்யாணத்துக்குப் பிறகு அந்தக் குறைங்களாம் அவன் கண் முன்னாலேயே தொங்கிட்டிருக்கும். நான் தியாகம் செஞ்சுதான் ஒன்னைக் கட்டிக்கிட்டேங்கற நெனைப்பு எப்பவும் இருக்கும். அனுவை அவன் சந்தோஷமா வெச்சுப்பான்னு நெனைக்கிறீங்களா?''

''இப்ப என்ன தம்பி சொல்ல வரே?... அப்படியே நீ சொல்ற மாதிரி வேற ஜாதிப் பையனுக்கு அனுவைப் பண்ணி வச்சுட்டா



# நிலவே நீயும் விலகாதே

சுபா

பாக்கி இருக்கிற ரெண்டுங்களையும் எவன் பொண் எடுப்பான்?''

''அனுவோட கல்யாணம் ஆனாத்தான் அடுத்ததுங்களுக்குன்னு வேற சொல்றீங்க... அனுவுக்கு எப்படியும் ஒரு கல்யாணம் ஆனப் புறம்தானே இவங்க பிரச்னை?''

''அப்படிச் சட்டுப் புட்டுன்னு முடிவு எடுக்கற விஷயமில்ல தம்பி இது'' என்றார் வீரராகவன் கண்களை மூடி யோசித்தபடிக்கு.

பாலாவுக்கு ஜில்லென்று காற்றில் மிதக்கிறமாதிரி இருந்தது. ஒரேயடியாய் மறுத்து மறுத்துப் பேசிக் கொண்டிருந்தவர் இந்த அளவுக்கு இறங்கி வந்ததே திருப்தியான சந்தோஷம் தந்தது.

''இத பாருங்க... இந்த மாதிரி சொழப்ப மெல்லாம் வரும்னு தெரிஞ்சோ தெரியாமலோ நானும் அனுவும் பழகிட்டோம். பழகறப்ப ஜாதி, ஜாதகம்னு எங்க மனசைப் போட்டுக் சொழப்பிக்கலே... ஒருத்தர ஒருத்தர் பரிஞ்சுக்கிட்டோம். இதை சந்தோஷமா வச்சுக்கணும். வச்சிக்க முடியும். அதும் ஹார்ட் டிரபிள் ஒண்ணுமில்லாத விஷயம். அதைப் பத்தி எனக்குக கவலையே இல்லே. உங்களுக்கு அனு சந்தோஷத்தில எவ்வளவு அக்கறை இருக்குதோ, அதுக்கு மேலே எனக்கும் இருக்குது...''

''நீ சொல்றதெல்லாம் நியாயம்தான் தம்பி. ஆனா நடைமுறைக்கு ஒத்து வராது'' என்றாள் கௌரி அவளுககே சந்தேகமான குரலில்.

''நடைமொறைங்கறது நம்ப கையில இருக்கு'' என்றான் பாலா விடாமல்.

''இவ்வளவு பேசறியே, இப்ப ஒன் தங்கச்சியை வேற ஜாதியில கட்டிக் கொடுக்க ஒத்துக்கிட்டிருப்பியா நீ?''

''அவசியம் வந்திருந்தா கட்டாயம் செஞ்சிருப்பேங்க. நீங்க அனுவைக் கூப்புடுங்க... அதையும் ஒரு வார்த்தை கேட்டுக்குங்க.''

''நாங்க யோசிக்கணும் தம்பி. சொந்தக்காரங்க நாளைக்கி தள்ளி வெச்சிடக் கூடாது. நாலு பேர் நாலு விதமாப் பேசக் கூடாது பாரு.''

''கல்யாணம் நின்னுபோச்சின்னபோது அந்தச் சொந்தக்காரங்க ஒங்களுக்கு என்ன செஞ்சாங்க? மொட்டைக் கடிதாசி எழுதினதும் ஒங்க சொந்தக்காரங்கதானே?''

பளீரென்று இந்தக் கேள்வி வீரராகவனைத் தாக்கிற்று. முகம் கொஞ்சம் தெளிந்த மாதிரி ஆயிற்று. பாலா நிறுத்தாமல் தொடர்ந்தான்.

''நீங்க சரின்னு சொல்லுங்க... அடுத்த நிமிஷமே அனு கழுத்தில தாலி கட்டறதுக்கு நான் தயாரா யிருக்கேன். ரெண்டு பேரையும் பிரிச்சி வச்சி, ரெண்டு பேர் சந்தோஷத்தையும் எதுக்குங்க கெடுக்கணும்? சரின்னு சொல்லுங்க.''

''நாங்க சரின்னு சொல்லிட்டா போதுமா? ஒங்க வீட்ல இதுக்கு ஒத்துக்க வேணுமா?''

''அப்பா கிட்டச் சொல்லி இந்தக் கல்யாணத்தை நடத்தி வைக்கறதுக்கு அவரை ஒத்துக்க வைக்கிறதுக்கு என்னால முடியும். சின்னத் தங்கச்சிக்கு இது பத்தி அபிப்ராயம் சொல்ற அளவுக்கு வயசாகலே! அதனால எஙக வீட்டைப் பத்தின கவலையை விடுங்க.''

''கௌரி, கொஞ்சம் உள்ளே வா'' என்று வீரராகவன் எழுந்து போனார். பாலா காத்திருந்தான்.

பதினைந்து நிமிடங்கள் கழித்து வீரராகவன் வெளியே வந்தார். ''தம்பி, எதுக்கும் ஒங்கப் பாவையும் கலந்துக்கிட்டுத்தான் நாங்க சரின்னு சொல்ல முடியும். அப்பாவை எப்ப அனுப்பப்போறே சொல்லு.''

''நாளைக்கே வரச் சொல்றேங்க'' என்று எழுந்து சொண்டான்.

**''என்ன** பாலா நீ?'' என்றார் அப்பா அதிர்ந்து போன குரலில்.

பாலா பதில் சொல்லாமல் வெண்டைக் காயைப் பொடிப் பொடியாய் நறுக்குவதில் ஈடுபட்டிருந்தான்.

''ஒன்னை நம்பிட்டு நாம் பாட்டுக்கு விழுப்புரத்துக்கு லெட்டர் எழுதிட்டேன். இப்ப திடீர்னு வந்து கதையையே மாத்தறே?''

''தபால்ல போஸ்ட் பண்ணிட்டீங்களா?''

''இன்னும் இல்ல... ஒங்கிட்ட காமிச்சிட்டுப் போடலாம்னு வெச்சிருக்கேன்...''

''தவிர்க்க முடியாத காரணங்களால் எங்களால் மேற்கொண்டு தொடர முடியவில்லே'ன்னு எழுதிப் போட்டுடுங்கப்பா.''

''என்ன பாலா நீ?'' என்றார் அப்பா மறுபடியும்.

''நீங்க ஒத்துக்காட்டிக் கூட நான் அனுவைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்... அப்புறம் ஒங்க இஷ்டம்..''

அப்பா அதிர்ந்து போய் அவனைப் பார்த்தார்.

**வ**டபழனி கோவில். அலுவலக அறையில் பாலா நுழைந்ததும் ''என்ன வேணும்?'' என்றார் ஒருவர் கீழ்ப் பார்வையாய் இவனைப் பார்த்து.


''இங்கே கல்யாணம் பண்றதுக்கு என்ன பணம் கட்டணும், என்னென்ன புரொஸீஜர் அப்படிங்கறதெல்லாம்...'' என்றான் பாலா மொட்டையாக.

''பெரியவங்க பாத்து வச்சிப் பண்றது தானே?'' என்றார் இளக்காரமாய்.

---

**நமது வோட்டு சிரிப்புக்கே!**

''நல்லவர்களுக்கு — நேர்மையானவர்களுக்கு — கறை படாத கரங்களின் சொந்தக்காரர்களுக்கே — ஓட்டுப் போடுங்க'ன்னு உங்களை யாருங்க அறிக்கை விடச் சொன்னது? பாருங்க, நம்ம கட்சி ஆசாமிங்க அத்தனை பேரும் தோத்துப் போயிட்டாங்க!''



"ஆமாம்... ஆமாம்..." என்று அவர் முடிக்கு முன் முந்திச் சொன்னான்.

"பொண்ணு பக்கத்திலேருந்து ரெண்டு சொந்தக்காரங்க, பையன் பக்கத்திலேர்ந்து ரெண்டு சொந்தக்காரங்க... அப்புறம்..." என்று விடாமல் அவர் ஐந்து நிமிஷம் பேசினதைக் கேட்டுக் கொண்டான்.

"முகூர்த்தத்துக்கு நாள் குறிச்சிட்டீங்களா?" என்றார் கடைசியாய்.

"இல்லீங்க..."

"மொதல்ல அதையும் முடிச்சிட்டு வாங்க. அப்புறம் பணம் கட்டலாம்" என்றார். வந்ததற்குப் பிராகாரத்தை ஒரு சுற்றுச்சுற்றி விட்டுச் சிரிக்கும் முருகனை சின்னதாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு, மணக்கும் திருநீறை வாயில் போட்டுக் கொண்டு வெளியில் வந்தான் பாலா.

மறுநாள் காலையில் ஆஃபீஸில் நுழைந்ததும் நுழையாததுமாக ஃபோன் ஒலித்தது.

"நான்தான் பாலா" என்றாள் அனுசூயா.

"ஹாய் டார்லிங்" என்றான் கிசுகிசுப்பாய். "நானே ஆஃபீஸ் முடிஞ்சு வரணும்னு இருந்தேன் அனும்மா... நேத்திக்கு கூட பழனி கோயிலுக்குப் போயிருந்தேன். எல்லாம் விசாரிச்சிட்டேன். தேதி பாத்துச் சொல்ல வேண்டியதுதான் பாக்கி...அப்புறம் நாம்ப எப்ப ஷாப்பிங் போறோம்?"

"எதுக்கு?" — மறுபடியும் அந்த பழைய கொஞ்சல்.

"நமக்கு டிரெஸ் வாங்கணும்... இன்விடேஷன் அடிக்கணும்... எவ்வளவு வேலை இருக்கு?"

"நான் எங்கயாவது வெளியே கௌம்பினா பாலாவைப் பாக்கவா, பாலாவோட பேசவான்னு கேள்வி கேக்கறாங்க... நாங்களே கல்யாணம் பண்ணி வக்கறோம்மா. அவசரப்பட்டு ஓடிப்போயிடாதேன்னு சொல்றாங்க."

"கலாட்டாப் பண்ணத்தான் சொல்லு வாங்க அனு."

"கலாட்டா இல்லே பாலா..சீரியஸாவே அந்த மாதிரி சொல்றாங்க. அதனாலதான் எனக்குப் பயமா இருக்கு. எந்தச் சமயத்தில அவங்க புத்தி பெரண்டுடுமோ, மனசு மாறிப்போயிடுமோன்னு ஒரே பயமாருக்கு பாலா..."

"கவலையைவுடு. நான் எப்பஉங்க வீட்டுக்கு வரலாம் சொல்லு."

"என்ன கேள்வி பாலா... எப்ப வேணும்னாலும் வரலாம்."

"நாளைக்கு சாயங்காலம் வரேன்... இன்விடேஷன் ஆர்டர் குடுத்துட்டு வந்துருவோம்.... அப்படியே ரெண்டு மூணு வார்த்தை உங்க அப்பா கிட்டயும் பேசிடறேன். அடிக்கடி வந்து போனாத்தான் அவங்களுக்கும் மனசு மாறும் இருக்கும்."

"இன்னிக்கு சாயங்காலம் என்னவாம்?"

"பம்மல் ஜோசியர் வரேன்னு சொல்லிவிருக்காருடா... முகூர்த்தத்துக்கு ரெண்டு மூணு தேதி பார்த்துச் சொல்லுவாரு. அதையும் தெரிஞ்சுக்கிட்டு வந்து சொல்லிட்டா அந்தப்பக்க ஏற்பாடெல்லாம்நடக்குமில்ல?"

நமது வோட்டு சிரிப்புக்கே!




"சரி, வச்சிடவா?"

"பாலா உனக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கோம். வா...வா..."

வீட்டுக்குள் நுழையறபோதே அப்பாவின் குரல் எதிர்கொண்டது. கூடத்து ஜமக்காளத்தில், அப்பாவும் இன்னொருவரும். அந்த மனிதருக்கு அறுபதை எட்டுகிற வயது.

"பம்மல் சாம்பசிவம். ரேகை ஜாதகமெல்லாம் அத்துபடி" என்றார் அப்பா அறிமுக தோரணையில்.

"நமஸ்காரம்" என்று செருப்பைக் கழற்றிவிட்டுக் கைகூப்பினான்.

"செப்டம்பர் பதினஞ்சு ஒனக்கு சௌகரியமா பாலா?"

அனுசூயாவுக்கு குருமூர்த்தியுடன் நிச்சயமாகியிருந்த அதே நாள்! பாலாவுக்கு லேசான ஆச்சரியம் கூட மூண்டது. இப்படியும் அமையுமா என்ன?

"இன்னும் மூணு வாரம் இருக்குதே... அந்த நாளுதான் நல்லா இருக்குதாமா?"

"முன்னால எதுவும் தோதுப்பட்டு வரலே பாலா. அந்தத் தேதியை வுட்டா அக்டோபர் பத்துதான் சிலாக்கியமான நாளாம்."

"சரிப்பா... செப்டம்பர் பதினஞ்சே வெச்சிடுவோம்... நாளைக்கு அவங்க வீட்லயும் சொல்லிடலாமில்லேயாப்பா?"

"சொல்லிடலாம் பாலா."

"அப்ப நான் உத்தரவு வாங்கிக்கட்டுங்களா?"

"இருங்ககாப்பிசாப்பிட்டுட்டுப்போலாம்" என்று சொல்லிவிட்டு அர்த்தபுஷ்டியாய்ப் பாலாவைப் பார்த்தார்.

பாலா எழுந்து சமையலறைக்குப் போக, வழி நடத்திப் போகிறவர் மாதிரி அப்பா கூடவே வந்தார்.

"பாலா... பம்மல்லேர்ந்து அவர் வந்து போறதுக்கு நாலு ரூபா சார்ஜும் நான் பாத்துக் குடுத்ததுக்கு தட்சிணையா பதினொரு ரூபாயும் கொடுக்கணும்பா..."

பர்ஸ்லேருந்து எடுத்துக்குங்கப்பா.." என்று சொல்லிவிட்டு காஸைத் திறந்து பற்றவைத்தான் பாலா. (தொடரும்)

# குடில்

ஜோ எல்லாவற்றையும் முன்கூட்டியே திட்டமிட்டாயிற்று. டிசம்பர் முதல் வாரத்திலேயேதான். எதை எதையெல்லாம் இந்த மாதம்விட்டுவிட்டால் காசு சேரும் என்பதையும் கூட. எப்படியும் ஐம்பது ரூபாயாவது சேர்த்தால்தான் எல்லாவற்றுக்கும் போதுமானதாக இருக்கும். சின்ன சுரூப செட் வாங்கி, ஸீரியல் செட் பல்ப் வாங்கி இவைகளில மின்னுகிற அழகான குடிலை (டோமினிக் வீட்டில் அவர்கள் வைப்பது போலவே) ஜோ தன் மனத்தில் ஏற்கனவே குடிலை ஜோடித்தாகி விட்டது.

வினியிடம் இந்த வருஷத்தில் குடில் ஜோடனைக்கான விஷயங்களை, சர்ச்சிற்கு அவளைக் கூட்டிப் போகும்போது விவரமாகச் சொன்னான். வினி உடனே ஒப்புக்கொண்டாள். ஜோவின் விவரிப்புக்களில் அவள் மிகவும் பிரமித்து விட்டாள்தான். ஜோ பூசை உதவி செய்ய ஆரம்பித்த நாளிலிருந்து, அந்தச் சின்ன வெண் அங்கியை பாதரைப் போலவே அணிந்து, கையில் ஜெப புத்தகங்களுடன் ஆல்டரில் பாதர் தோமையுடன் பார்த்த நேரத்தில் இருந்து தன் அண்ணை மேல் மிகவும் மதிப்பு வந்திருந்தது வினிக்கு. தவிரவும் மற்ற அண்ணாக்கள் போலில்லே ஜோ. தன் தங்கையின் பேரில் நேசமுள்ளவன். சர்ச்சிற்குப் போகிற வழியில் சிறு கால்வாய்க்கு அப்புறம் வேலிச் செடிகளினூடே பூத்துக் கிடக்கிற சின்ன பட்டன் ரோஸாக்களைக் கேட்டால், பம்லாவிடம் அவள் அண்ணா திட்டுவதைப் போலத் திட்டமாட்டான். மாறாகப் பறித்தே கொடுத்திருக்கிறான். இன்னும் தன் சக தோழிகள் தத்தம் அண்ணாக்கள் மேல் சொல்கிற புகார்கள் எல்லாம் வினி தன் விஷயத்தில் அறியாதவைதாம். அன்பான அண்ணாதான் ஜோ. எனவே அவன் சொல்வது எதுவும் சரியாகவே இருக்கக் கூடும். அவனுக்காக, குடில் ஜோடிப்பு செலவுகளுக்காக கம்மர் கட்டு, ஐஸ் சமாசாரங்களைத்தியாகம் செய்யச் சம்மதப்பட்டாள். வீட்டுக்கு வரும் உறவினர் தரும் காசுகளையும் கூட செலவு செய்யாமல் தர நினைத்திருந்தாள்.

பாதர் தோமைக்கு ஜோ குடில் ஜோடிக்கத் திட்டியிருந்த திட்டங்கள் மற்ற ஆல்டர் பாய்ஸ் மூலமாகவோ என்னவோ அவருக்குத் தெரிந்திருந்தது. ஒரு நாள் ஜோவிடமும் கேட்டே விட்டார். பாதர் தோமையிடம் ஜோவிற்கு எப்பவும் தனி மரியாதையும் கவர்ச்சியும் இருந்தது. மிகவும் உயரமாயிருக்கிற அவர் பிரசங்க மேடையின் முன்பு கைகளை ஆட்டி ஆட்டி உணர்ச்சி பூர்வமாய்ச் செய்கிற பிரசங்கங்கள் அவனுக்குப் புரிவதில்லைதான். ஆனாலும் பிடித்திருந்தது. புதிது புதிதாகவே அவர் நிறைய சொல்லுகிறார். அவரைப் புரட்சிக்காரச் சாமியார் என்றுதான் அப்பாவும் அம்மாவும் பேசிக் கொள்கிறார்கள். இளைஞர்களிடம் அவருக்கு இருந்த செல்வாக்கு ஜோவுக்கு அவர்மேல் பிரமிப்பு வர ஒரு காரணமாயிருந்தது. எவ்வளவு அன்பு மிக்கவர் பாதர். பல பாதர்கள் போலின்றி, சிறுவன் என்றும் பாராது அவனிடம் சரி சமமாகப் பேசுபவர் அவர். பாதர் கேட்டதும்தான் இந்தத் தடவை ஜோடிக்க நினைத்திருக்கிற விவரங்களைச் சொன்னதும் அவர் எதுவும் பேசாமல் சிரித்தார். ஆனால் ஜோவுக்கு அவர் ஏதாவது சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்குமென்று பட்டது. அவருக்கு இது பிடிக்கவில்லையோ? அவனின் கேள்விகளுக்கு அன்று மாலை பூஜை முடிந்ததும் பதில் கிடைத்தது தற்செயலாக.

பூசை உடுப்பு மாற்றிக் கொண்டு, அவர் அறைக்குப் போனபொழுது ஜோவும் அவருடனேயே போயிருந்தான். சிலர் நின்றிருந்தார்கள் அறை வாசலில். சர்ச்சில் குடில் ஜோடிப்பது பற்றிப் பேச்சு வந்தது.

''எனக்குத் தோன்றியதைச் சொல்றேன். உங்களை யெல்லாம் டிஸ்கரேஜ் பண்றேன்னு நெனைச்சுக்காதீங்க. உங்களைன்னு இல்லே. பொதுவாக நாம எல்லாருமே குடில் விஷயத்தில் தப்பு செய்துக்கிட்டுத்தான் இருக்கோம். எதுக்கு நாம குடில் வைக்கிறோம்? யேசு சாமி இந்த உலகத்துக்கு வந்து நம்மை யெல்லாம் மீட்டுக் கொண்ட ஒரு நிகழ்ச்சியோட நினைவுகூரலாத்தான். இல்லையா? அவர் பிறந்தப்ப அவரே எந்த அளவுக்கு எளிமையை விரும்பி இருந்தா மாட்டுத் தொழுவத்தில் பிறந்திருப்பாரு. ஆனா அந்த 'எளிமை விரும்பியோட' பிறந்த நாளை நாம அநாவசியச் செலவுகளோட ஆடம்பரமாக் கொண்டாடணும்னு நினைக்கிறோம். அன்னிக்குதான் நம்ம ஜனங்களுக்கு சினிமா போவணும், தண்ணி அடிக்கணும், கறி திங்கணும். நிஜமான குழந்தை ஏசுவையே கந்தல், பழைய துணிலதான் சுத்தி, வைக்கோல் புல் மேலே கிடந்த முன்னையிலே மாதா முன்னை வச்சாங்க. ஆனா நாம என்னன்னு சேசு சுரூபத்துக்குக் கூட ஸாட்டின் துணி போட்டு, ஸில்க் துணி போட்டு அழகு பாக்கறோம்.

—கார்த்திகா ராஜ்குமார்—



அவர் பொறந்த நாள்ல அவருக்குப் புடிச்சதைச் செய்யறதை வுட்டுட்டு, அவர் பேரை வச்சிக்கிட்டு, நமக்குப் பிடிச்சதை நமக்குச் சந்தோஷமானதைத்தான் செய்யறோம். இப்படிச் செய்யறது அவருக்குப் புடிக்குமா, புடிக்காதா ஊஹூம்... அதைப் பத்தி நமக்கென்ன? ஸீரியல் செட் பல்ப் போட்டு, கலர் கலர் சமாச்சாரங்கள் மத்தியில் அவரைத் திணிச்சிடறோமே. அவர் அங்கே முழிச்சு எழுந்திருச்சு வந்திடக் கூடாதேங்கிற மாதிரி ஆராரோ ஆரீராரோ பாடித் தூங்க வைக்கிறது வேறே. நிஜமான குழந்தை மறுபடி பிறப்பார்ன்னு வைச்சா, அவர் நிச்சயம் நம்ம சர்ச்கள்ல வைக்கிற க்ரிப்கள்ல பிறக்க மாட்டார். தன்னை நேசிக்கிற அந்த ஏழைஇடைய குடிசை மாதிரி உள்ளவங்களைத்தான் தேடிட்டுப்போயிடுவார்...''

ஜோவுக்குக் கொஞ்சமும் பாதர் தோமை சொன்னது பிடிக்கவே இல்லை. ஆனால் அதற்கென்று அவர் சொன்னது ஒன்றும் சரியில்லை என்றும் கூடச் சொல்லவே முடியவில்லை. பாதர் தோமையிடம் இதுதான் விசேஷம். அவர் சொல்வதை ஒப்புக்கொள்ளவும் முடியாது. அதே நேரம் அவர் சொன்னது தவறு என்றும் சொல்ல இயலாது. குடில் அழகாய் ஜோடித்தால்என்னவாம்? கிறிஸ்துமஸ் அன்று ஒரு நாள் சந்தோஷமாக இருந்தால்தான் என்ன? என்ன கெட்டுவிடும்?

மனத்தில் குமைந்த கேள்விகளையெல்லாம் வினியிடம் (இப்பொழுதெல்லாம் அடிக்கடி ராத்திரிச் சாப்பாட்டை முடித்த பிறகு குடில் ஜோடிப்பு ஏற்பாடுகள் பற்றி புத்தகங்களை விரித்து வைத்துக் கொண்டு படிக்கிற தோரணையில் ரகசிய ஆலோசனை செய்து வருவதுண்டு ஜோவும் வினியும்) அப்போதுதான் சொன்னான்.

''நீ சொல்றதும் சரிதான்ணா. கிறிஸ்துமஸ் டைம்தான் நாம புதுத் துணி எல்லாம் போட்டு ஜாலியா இருக்க முடியும். குடில் வெறுமனே இருந்தாபார்க்க நல்லாவா இருக்கும்? ஆனா பாதருக்கு சேசு சாமி பத்தி நல்லாத் தெரியுமே. நம்மளைவிட. சாமிக்கு இந்தத் தடபுடல் சமாசாரங்கள் புடிக்காதோ என்னவோ.

''அதைவுடு. சாமி பொறந்த அந்தக்காலத்தில கரண்டே இல்லையே. ஒரு சமயம் கரெண்ட் இருந்திருந்தா அந்த மாட்டுக் கொட்டாய்லயும் கண்டிப்பா பல்ப் எரிஞ்சிருக்கும்தானே, என் அண்ணா?''

ஜோவுக்கு இதற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

கிறிஸ்துமஸுக்கு முந்தின வாரம் திடுமென்று ஜோ ராபியின் வீட்டுக்குப் போக வேண்டியதாயிற்று. ராபி நாலைந்து நாட்களாகவே பூசை உதவிக்கு வரவில்லை. அவனின் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று கேள்விப்பட்டிருந்தான். குடில் ஜோடிப்பு விவகாரங்களில ஜோ மலைபோல் நம்பியிருந்தது ராபியைத்தான். அவனைப் போல எட்டாவதுதான் ராபியும் படித்தாலும் அவனுக்கு இந்தக் காரியங்களில் மிகுந்த தேர்ச்சியும் அனுபவமும் இருந்தது.

ராபி, ஜோ வீட்டில் — குடில் விஷயத்தில் முழுப் பொறுப்பும் ஏற்றுக் கொள்வதாகவும் அதற்குப் பதிலாக அவனுக்கு வராத கணக்குப் பாடங்களையும், மற்றும் விளையாட்டுக்களில் சில சலுகைகளை ஜோ தரவேண்டும் என்றும் அவர்களிடையே ரகசிய ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது. பணம் சேர்ந்திருந்தது ஐம்பது ரூபாயைத் தாண்டியாகி விட்டது.

பக்கத்தில் இல்லை ராபியின் வீடு. டவுனை விட்டு தூரம்தான். ஸ்கூல் விட்டு வந்ததுமே, பணத்தையும் எடுத்துக்கொண்டு (ராபியைக் கையோடு அழைத்துக்கொண்டு வந்து குரூப செட், ஸீரியல் செட், ஒயர்கள் எல்லாம் வாங்கிவிட வேண்டும்.) ராபி வீட்டிற்குப் போனான். அங்கே அவனுக்குக் கொஞ்சமும் எதிர்பாராத விஷயங்களிருந்தன. ராபி முன் அறையிலேயே எங்கோ வெறித்தபடி உட்கார்ந்து அழுது கொண்டிருந்தான். ஜோவிற்கு அதிர்ச்சி.

''என்னடா ராபி''என்றுசேட்கத்தன்அன்பு நண்பனின் தொடுதலில் கேவல்களுடன் உடைந்து போனான் ராபி. அழுகையினூடே விஷயத்தைச் சொன்னான்.

போன வாரம் முழுக்க ராபியின் அம்மாவுக்கு உடம்பு சரியில்லாது போயிருக்கிறது. கடந்த இரண்டு நாட்களாக ஜூரம் மிகவும் அதிகமாகி டாக்டரைப் பக்கத்து வீட்டுக்காரர்கள் கூட்டிக் கொண்டு வர, அவர் ஊசி போட்டு, மருந்துகளை எழுதிக் கொடுத்து விட்டுப் போனாராம். அவன் அப்பாவோ ஊரில் இல்லை. மருந்துகளை எப்படி வாங்குவது? சொந்தக்காரர்களுக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறது உதவிக்காக. யாரும் இன்னும் வரவில்லை.

புலம்பிவிட்டு முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டான் ராபி. ஜோ அவலையே பார்த்துக் கொண்டிருந்தான். ராபியின் அழுகையில் அவனுமே கண் கலங்கித்தானிருந்தான்.

''ராபி, இந்தாடா ரூபா. உடனே போய் உங்கம்மாவுக்கு மருந்தோ, என்னவெல்லாம் வேணுமோ அதை வாங்கிக்க. நான் குடிலுக்காகவே சேர்த்து வச்சது. பரவாயில்லடா வச்சுக்க.''

ராபிக்கு அரும்பின கண்ணீர் சரசரவென்று வழிய ஆரம்பிக்க ரூபாய்த் தாள்களை நீட்டிக் கொண்டிருந்த ஜோவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நமது வோட்டு சிரிப்புக்கே!






வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த ஜோவுக்கு ஒரு நல்ல காரியத்தைச் செய்த பெருமிதமிருந்தாலும் மனத்திற்குள் குறு குறுவென்று வருத்தமாகக் கூடவும் இருந்தது. எப்படியெல்லாம் ஐஸ், சினிமா, ஸ்டிக்கர் எல்லாம் தியாகம் செய்து சேர்த்த பணம். லீனி கூட எத்தனை சேர்த்துக் கொடுத்தாள். மிக அழகான குடில் ஜோடித்ததாய்க் கனவுகளில் கூட பல தடவை வந்ததே. எல்லாம் போயிற்று. வழியில் எதிர்ப்பட்டான் டோமினிக். அவன் கையில் பெரிய பார்சல் இருந்தது. முகமெல்லாம் சிரிப்பும் பரவசமும் வழிய ஜோவைப் பார்த்ததும் நின்முன். குடில் ஜோடிக்கத்தான் எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டிருப்பதாகச் சொன்னுன். இந்தத் தடவை சிறிதாய் பெத்லேஹேமையே வைக்க உத்தேசமாம். அன்றிரவு—ரொம்பவும் யோசனைக்குப் பிறகு லீனியிடம் எதையுமே சொல்லவில்லை.

பாதர் தோமை அடுத்த நாள் பூசை முடித்து, உடுப்பைக் கழற்றி வைத்துக் கொண்டிருக்கும்பொழுது,

''என்ன ஜோ, குடில் ஜோடிப்பு எல்லாம் எவ்வளவு தூரத்திலயிருக்கு?''

அதற்குப் பிறகும் ஜோவால் அடக்க முடியவில்லை. கொட்டித் தீர்த்தான்.

''ஏன், கொடுத்துட்டது வருத்தமாயிருக்கா ஜோ?''

''இல்ல பாதர். வருத்தம்னுட்டு இல்ல. ஆனு குடில் எப்படி வைக்கிறது பாதர்? நான் இன்னும் லீனிட்ட கூட விஷயத்தைச் சொல்லலே.''

''ஜோ! குடில் நாம எதுக்கு வைக்கறோம்? சேசு சாமியோட பிறப்பை நினைச்சுக்கறதுக்கு—அதைக் கொண்டாட நாம செய்யற ஒரு நிகழ்ச்சி. அதாவது நாம வைக்கிற குடில்ல அவர் வந்து பொறக்கணும். அந்த மாதிரி விருப்பம், நம்பிக்கை. இல்லேயா?''

''ஆமா, பாதர்.''

''அப்பன்னு இந்த வருஷ கிறிஸ்துமஸ்ஸை உண்மையாலுமே கொண்டாடப் போறது நீதான். நீதான் அவர் பொறந்ததைச் சரியான விதத்தில நினைவுகூர்ந்து, உன்னைத் தகுதிப்படுத்திக்கிட்டே. அதனால நீ சந்தோஷப்படணும் ஜோ.''

பாதர் தோமை ஆச்சரியமாகப் பார்த்தான் ஜோ.

''ஒரு சின்னக் கதை சொல்றேன் கேள். ஒரு புக்ல படிச்சது. இந்த மாதிரிதான் கிறிஸ்துமஸ் சமயத்தில ராத்திரி பூஜைக்குப் போய் பொறக்கற குழந்தை சேசு சாமியைப் பார்க்கணும்னு ஒரு வீட்ல ஏளம்பறாங்க. சீக்கிரமா பூசைக்குப் போகணும்னு சாயங்காலத்திலேருந்து ஒருத்தருக்கு ஒருத்தர் சண்டை. திட்டிக்கிறது, கத்தறது எல்லாம். கடைசியா ஒரு வழியாப் புறப்பட்டப்போ பக்கத்து வீட்டுக்காரர் வரார். அவுங்க வீட்டுப் பாப்பாவுக்கு உடம்பு சரியில்ல. உதவி பண்ண வாங்கன்னு கேக்கறூர். இந்த ஐயா சொல்லிடறூர், 'இல்லிங்க. நாங்கவேற ஒரு பாப்பாவை சர்ச்ல போய்ப் பார்க்கணும். உங்களுக்கு உதவ முடியாத நிலைல இருக்கோம்'னு. வழில ரெண்டு பேர் பரிதாபமா, அவசரமா உதவி கேக்கறப்ப ஐயா அதையும் மூர்க்கமா ஒதுக்கிட்டு சர்ச்சுக்குப் போறூர். அங்கே வாசலுக்குக் கொஞ்சம் முன்னல குளிர்ல நடுங்கியபடி ஒரு பிச்சைக்காரன். இவர் அவனைத் திட்டி மிரட்டிட்டு, கேலிகூட பண்ணிட்டு விட்டோட சர்ச்சுக்குப் போறூர். அங்க போனு..''

''போனு... அப்புறம் என்ன பாதர்?''

''அங்கே அவங்களால குழந்தை சேசுவைப் பார்க்க முடியறதில்லே. அவர் அன்பில்லாதவங்க நடுவுல பிறக்க மாட்டார் ஜோ. தன் மேலே அன்பு வைத்து தனக்குப் பிடித்தமானதைச் செய்றவர்கள் நடுவில்தான் அவர் பிறப்பார். ஒருவேளை அன்னிக்கு சர்ச்சுக்கு வந்தவங்க எல்லாம் சக மனித அன்பில்லாதவங்க போலிருக்கு. அதான் அங்க பொறக்கலே. ஏன் ஜோ. உங்கப் பாவை, இல்லே உனக்குப் பிரியமானவங்களை சந்தோஷப்படுத்த ஏதாவது செய்யணும்னு நீ என்ன செய்லே, அவங்க சொல்றதை, அவங்களுக்குப் பிடித்தமானதைத் தான் இல்லேயா?''

அதற்குள் பாதரின் அறைக்கு வந்துவிட, தோமை கதவைத் திறந்து கொண்டு உள்ளே போய் ஒரு அழகான சின்னக் குடில் படத்தை எடுத்து ஜோவிடம் கொடுத்தார்.

''இதான் இந்த வருஷ குடில் உனக்கு. பார், நிச்சயம் உங்க வீட்லதான் சேசு சாமி வந்து பொறக்கப் போறூர். ஏன்னு அவருக்குப் பிடிச்சதைச் செய்தது நீதான். அவருக்குப் பிடிக்காதது எல்லாம் செய்துவிட்டு அட்டகாசமா டெக்ரேட் பண்ணிட்டா வந்து பொறந்துடுவாரா... என்ன?'' என்று சிரித்தார் பாதர் தோமை.

அவர் சொன்னது உண்மையாகி விட்டது என்பதைப் போலவோ, அல்லது என்னவென்று தெரியாத காரணங்களாலோ, ஜோ, லீனி அவர்கள் வீட்டில் எல்லோருக்குமே அந்தக் கிறிஸ்துமஸ் சந்தோஷமாய் இருந்ததைப் போல அதற்கு முன் எப்பவுமே இருந்ததில்லை.


வெற்றி எட்டு திக்கும்
எட்ட கொட்டு முரசே...
4 லட்சம் டிக்கெட்டுகளில் மட்டுமே
ஆந்திர லஷ்மி
டீலக்ஸ் பம்பர்
ரூ 9 கோடி

# ஒவ்வொரு டிக்கெட்டிலும்

# 21 வெற்றி வாய்ப்புகள்

குலுக்கல் 21-1-85

டிக்கெட் ரூ. 500/-

**மொத்தப் பரிசு**

40 முதல் பரிசுகள்: ரூ. 10 லட்சம் வீதம்
(குலுக்கல் கடைசி 4 எண்களில்)

40 இரண்டாவது பரிசுகள்: ரூ. 1 லட்சம் வீதம்
(குலுக்கல் கடைசி 4 எண்களில்)

400 மூன்றாவது பரிசுகள்: 10 ஆயிரம் வீதம்
(குலுக்கல் கடைசி 3 எண்களில்)

4000 நாலாவது பரிசுகள்: 1000/- வீதம்
(குலுக்கல் கடைசி 2 எண்களில்)

40,000 ஐந்தாவது பரிசுகள்: 500/- வீதம்
(குலுக்கல் கடைசி ஒரு எண்ணில்)

**மினி குலுக்கல்**

20 முதல் பரிசுகள்
ரூ. 5 லட்சம் வீதம்
(குலுக்கலுக்கு ஒரு பரிசு வீதம்)
8000 இரண்டாவது பரிசுகள்
ரூ. 1000/- வீதம்
(குலுக்கலுக்கு 400 பரிசுகள் வீதம்)

**MINI DRAWS:**
1st on 18.12.84, 2nd on 19.12.84,
3rd on 20.12.84, 4th on 21.12.84,
5th on 25.12.84, 6th on 26.12.84,
7th on 27.12.84, 8th on 28.12.84,
9th on 1.1.85, 10th on 2.1.85,
11th on 3.1.85, 12th on 4.1.85,
13th on 8.1.85, 14th on 9.1.85,
15th on 10.1.85, 16th on 11.1.85,
17th on 15.1.85, 18th on 16.1.85,
19th on 17.1.85, 20th on 18.1.85

SUSAK ADS: 2003/84

விற்பனையாளர்கள், ஏஜெண்ட்டுகள், ஸ்டாக்கிஸ்டுகளுக்கு வியக்கத்தக்க அதிருஷ்ட பரிசு- 30 அம்பாஸிடர் கார்
டிக்கெட்டுகள் எல்லா பெரிய லாட்டரி விற்பனையாளர்களிடம் கிடைக்கும்.



Convenor Raffle Committee D.D Hosp. Hyderabad in aid of developing Dr. C.D. Deshmukhi Cardio Vascular Institute and Research Centre.

ஆர்கனைசிங் ஏஜெண்ட்:
சந்திரா ஏஜென்ஸிஸ்
17, கான்டிநெண்டல் அனெக்ஸ் சிகல் பில்டிங்,
புதுடில்லி-110 001 போன்: 311351, 311201

CHANDRA AGENCIES FOR PROSPERITY

ஸூப்பர் ஸ்டாக்கிஸ்ட்: மெஸர்ஸ் கே. ஏஜென்சிஸ்,
ரூம் நெ. 204 & 205, குப்தா மார்க்கெட், கே. ஜி. சர்க்கிள், பெங்களூர்-560 009



# இயற்கையும் செயற்கையும் இழையும் நகரம்

## 9

இரண்டாவது உலகப் போரில் எண்பத்தைந்து சதவிகிதம் அழிந்து போய்விட்டாலும் இன்றைய பெர்லினும் அதன் சுற்றுப்புறங்களும் இயற்கை அழகும் செயற்கை அழகும் இணைந்து பொலிகின்றன. பெர்லினைச் சுற்றிப் பல அழகு மிக்க ஏரிகளும் நீர் நிலைகளும் உள்ளன. பசுமை கொஞ்சும் மரம் செடி கொடிகளும் தோட்டங்களும் இருக்கின்றன. பெர்லின் நகருக்கு அழகூட்டும் 'டிரயர் கார்டன்' (Trier Garden) அவற்றில் முக்கியமானது. நகரின் முக்கிய பகுதிகளை அரவணைத்துச் செல்லும் பெரிய மரக் கூட்டங்களைக் கொண்டது டிரயர் கார்டன். தோட்டங்களைப் போலவே அழகிய ஏரிகளும்; நீர்நிலைகளும் பெர்லினைச் சுற்றி உள்ளன. இவ்வளவு அரசியல் கெடுபிடிகள் எல்லைப் புறத் தகராறுகள் சுவர்கள் முள்வேலிகளுக்கு நடுவேயும் இயற்கை சுதந்திரமாக வளர்வதை யாராலும் தடுத்து விட முடியவில்லை. நகர வளர்ச்சியும் புதுப்புதுக் கட்டிடங்களும் பசுமையையும் மரம் செடி கொடிகளையும் பாதித்து விடாமல் வைத்திருக்க இவர்களால் எப்படித்தான் முடிகிறதோ என்று எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

பெர்லின்டெகல் விமான நிலையப் பகுதியில் ஹம்போல்ட் அரண்மனை (Humboldt palace) என்றோர் மாளிகை. அதைச் சுற்றிலுமுள்ள தோட்டப் பகுதி கண் கொள்ளாக் காட்சி. எத்தனை அழகாகவும் எவ்வளவு ஒழுங்காகவும் இந்த மரங்களை வளர்த்திருக்கிறார்கள்! நம்மையறியாமலே வியந்து நிற்கிறோம் நாம். செயற்கை அழகுகள் என்ற வகையில் சில கட்டிடங்கள் நம் நினைவை விட்டு அகலாமல் நிற்கின்றன.

1936–ல் பெர்லினில் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நடைபெற்ற போது (இட்லர்காலம்) கட்டப் பெற்ற பிரம்மாண்டமான ஒலிம்பிக் ஸ்டேடியம் இன்று பார்த்தாலும் புத்தம் புதியதாகக் காட்சியளித்து நம்மை மருட்டுகிறது. இத்தனை நவீன வசதிகள் உள்ள ஒரு பெரிய ஸ்டேடியத்தை நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பே கட்டக் கூடிய சாமர்த்தியமுள்ளவர்களாகப் பெர்லின் வாசிகள் இருந்திருப்பது தெரிகிறது. புத்துயிர் பெற்ற பெர்லினில் கட்டப்பட்ட காங்கிரஸ் ஹால் (Congress Centrum). எங்கே எந்த மூலையில் எந்த உயரத்தில் அமர்ந்தாலும் அரங்கில் வாசிக்கும் இசைக் குழுவைக் காணவும் கேட்கவும் தோதாகக் கட்டப்பட்ட கெம்பர் சதுக்கத்திலுள்ள பில்ஹார்மனிக் அரங்கு (Philharmonic Hall), ஒரே இடத்தில் ஐம்பதினாயிரம் பேர்களைச் சகல வசதிகளுடனும் குடியமர்த்தியுள்ள பிரெண்டன்பர்க் குவார்ட்டர்ஸ் (Brendenburg Quarters.) ஆகியவை பெர்லினில் கட்டாயமாகப் பார்க்க வேண்டியவை. ஒளிபரப்பு வசதிகளுக்கு மிகவும் இசைவாகக் கட்டப்பட்டிருக்கும் பெர்லின் டெலிவிஷன் நிலையம், ஃபெடரல் பிரஸிடென்டின் பெர்லின் வாசஸ்தலமான பெல்லெவு கோட்டை (Bellevue Castle) ஆகியவையும் பார்க்க வேண்டியவை.

நாங்கள் பெர்லினுக்கு வந்த இரண்டாம் நாள் காலை ஹோட்டல் ஹாம்பர்க் லவுஞ்சில் எதிர்பாராத விதமாக ஒரு தமிழன்



✕ ஜெர்மன் பெடரல் தலைவரின் பெர்லின் வாசஸ்தலம்

பவரைச் சந்திக்க நேர்ந்தது. மேற்கு ஜெர்மனிக்கு வந்து தமிழோசையே கேட்காமல் சுமார் பத்து நாட்கள் கழித்து விட்டபின் திடீரென்று ''நீங்கள் சென்னையிலிருந்து வந்திருக்கிறீர்களா?'' — என்ற குரலைக் கேட்டு ஒரே வியப்பு. ''ஆமாம்! நீங்கள் யாரென்று சொல்லவில்லையே?'' — என்று நான் பதிலுக்கு ஆரம்பித்ததும் ''என் பெயர் ஆனந்தம். அமெரிக்காவில் ஃப்ளோரிடாவில் இருக்கிறேன். நான் பணிபுரிகிற கம்பெனி வேலையாகப் பெர்லின் வந்திருக்கிறேன். காலஞ்சென்ற கா. திரவியம் ஐ. ஏ. எஸ். அவர்களின் ஷட்டகர் நான்'' — என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார் தமிழ்க் குரலுக்குரியவர். இருவரும் கால் மணி நேரத்திற்கு மேல் தமிழ்நாட்டையும் இந்தியாவையும் பற்றிப் பல விஷயங்களைப் பரிமாறிக் கொண்டோம்.

ஆனந்தத்தைப் பார்த்த ஆனந்தத்தோடு ஸுவோலாக் கார்ட்டன் ( Zoolog Garten) என்ற மேற்கு பெர்லினின் பாதாள ரயில் நிலையத்தைக் காணப் புறப்பட்டேன். ஏற்கெனவே மாஸ்கோ லண்டன் பாரிஸ் பாதாள ரயில்களின் நிலையங்களைக் கண்டறிந்திருந்த ஆர்வத்தில் துண்டிக்கப்பட்ட பெருநகராகிய மேற்கு பெர்லினில் அந்த சப்வே ரயில் போக்குவரத்து எவ்வாறு இருக்கிறது என்பதைப் பார்த்து விட வேண்டும் என்ற ஆர்வம் என்னுள் இருந்தது. ஸுவோலாக் கார்ட்டன் பாதாள ரயில் நிலையம் சுத்தமாகவும் பளிச்சென்றும் இருந்தது. அதிகக் கூட்டமோ நெரிசலோ இல்லை. தரைக்கு மேல் ஓடும் ரயில்களை எஸ். பான் (S. Bahn)




✕ பாதாள ரயில் நிலையம்

என்றும் பாதாள ரயிலை யூ.பான் (U. Bahn) என்றும் கூறுகிறார்கள். வெளியூர் ரயில் நிலையம் பான் ஹாஃப் என அழைக்கப்படுகிறது.

மேற்கு ஜெர்மனி — பிரதான நிலப்பகுதியிலிருந்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுத் தனியே இருக்கும் பெர்லின் தன்னுடைய மின்சாரப் பிரச்னைகளை எப்படிச் சமாளிக்கிறது என்று அறிவதற்காகப் புறப்பட்டோம். தனியாகத் துண்டிக்கப்பட்டிருப்பதால் ஹாம்

## ஏழு நாடுகளில் எட்டு வாரங்கள்

## நா. பார்த்தசாரதி

பார்க் முதலிய மற்ற நகரங்களில் இருப்பது போல் பெர்லினில் மின்சார சப்ளை திருப்தி கரமாக இராதோ என்ற சந்தேகம் எங்களுக்கு இருந்தது. மேற்கு பெர்லினின் மின்சார சப்ளை — தயாரிப்பை — பெவாக்(Bewag) என்ற கம்பெனி கவனித்துக் கொள்கிறது. நம்மூரிலுள்ள பப்ளிக் லிமிடெட் கம்பெனி போன்ற ஒரு தனியார் நிறுவனம் இது. இதன் மூலதனம் பொது மக்களிடமிருந்து தலைக்கு 50 மார்க்குகளாக ஷேர்கள் சேர்க்கப்பட்டு உருவாகியிருக்கிறது. இவ்வாறு சுமார் முப்பதாயிரத்திலிருந்து நாற்பதாயிரம் மேற்கு பெர்லின் வாசிகள் வரை இதில் பங்குதாரர்களாக இருக்கின்றனர். ''1950 வரை பிரதான நிலப்பகுதி மின்சாரத்தைக் கொண்டு எப்படியோ சமாளிக்க முடிந்தது. அதன்பின் நாங்கள் சகல விதத்திலும் துண்டிக்கப்பட்டுவிட்டதால் நாங்களே பெர்லினுக்கான சொந்த மின்சார ஏற்பாட்டைச் செய்து கொள்ள வேண்டியதாயிற்று. மேற்கு பெர்லின் இரண்டு மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட ஜில்லாக்கள் என்றழைக்கப்படும் பன்னிரண்டு உட்பிரிவுகளைக் கொண்டது. கிழக்கு பெர்லின் ஒரு மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட 8 ஜில்லாக்களைக் கொண்டது. இவற்றில் மேற்கு பெர்லினுக்கான மின்சாரம் சென்ட்ரல் ஹீட்டிங் ஆகியவற்றைச் சுமார் எட்டுக்கு மேற்பட்ட தெர்மல் பவர் ஸ்டேஷன்களைக்கொண்டு குறைவின்றிச் சமாளித்து வருகிறோம்''— என்றார் 'பெவாக்' நிர்வாக அதிகாரி.

நிலக்கரி, பழுப்பு நிலக்கரி சிறிய அளவில் பெட்ரோலியம் ஆகியவற்றால் இந்த எட்டு நிலையங்களும் இயங்குகின்றனவாம்.

''நிலக்கரியையும் பழுப்பு நிலக்கரியையும் உபயோகிப்பதாகச் சொல்கிறீர்களே? அவற்றால் சுற்றுப்புறத் தூய்மை கெட்டு விடாதா?''

''எங்கள் மேற்கு பெர்லினில் எங்களுடைய பவர் ஸ்டேஷன்களாலும், தொழிற்சாலைகளாலும் ஏற்படுகிற பாதிப்பை விடக் கிழக்கு பெர்லின் தொழிற்சாலைகளும் புகைக் கூண்டுகளும் அனுப்புகிற பாதிப்புக்களே அதிகம். பாஸ்போர்ட்டும் விசாவும், அந்நியச் செலாவணி போன்ற சிரமங்களும் இன்றி அவர்கள் இங்கு கவர் கடந்து அனுப்பி வைப்பது அந்தப்புகையைத்தான்.''

'பெவாக்'கிலிருந்து நேரே சர்வதேசப் பத்திரிகையாளர் பயிற்சி நிலையத்திற்குச் (International Institute of Journalism) சென்றோம். அதைச் சார்ந்திருந்த 'பத்திரிகையாளர் கிளப்'பில் எங்கள் பகல் விருந்திற்கு ஏற்பாடாகி இருந்தது. விருந்து முடிந்த பின் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்து விட்டு ஹோட்டலுக்குத் திரும்பும்போது எங்கள் ஜெர்மன் உதவியாளர் திடீர் என்று ஒரு புதிர் போட்டார்.

''நாளைய தினம் உங்கள் புரோகிராம் என்ன தெரியுமா?''

''நாளைக்கு ஏதோ ஒரு புரோகிராம் இருக்கிறதென்று மட்டும் தெரியும்''—

''காலையிலே புறப்படும் போது மறந்து விடாமல் பாஸ்போர்ட்டைக் கையோடு எடுத்துக் கொள்ளுங்கள். நாளைக்குக் காலையில் மேற்கு பெர்லினில் சில இடங்களைச் சுற்றிப் பார்த்து விட்டு அப்படியே பிற்பகலில் உங்களைக் கிழக்கு பெர்லினுக்கு அனுப்பப் போகிறோம். கிழக்கு பெர்லினுக்குள் போகும் போது இங்கிருந்து புத்தகங்கள், பத்திரிகைகள், பிரசுரங்கள் எதையும் எடுத்துச் செல்லாதீர்கள். மேற்கத்திய நாணயங்கள் உங்களிடம் எவ்வளவு இருந்தாலும் பரவாயில்லை. கிழக்கத்திய (ஈஸ்டர்ன் பிளாக்—) கரென்ஸி ஏதாவது இருந்தாலும் எடுத்துப் போகக் கூடாது. கிழக்கு பெர்லினில் மிலிடரி செக் போஸ்ட், தொழிற்சாலைகள், இராணுவப் பகுதிகள் எதையும் புகைப்படம் எடுக்கமுயலக்கூடாது. ஒரு சிறிய கைப்பைக்கு மேல் அதிகமாக எந்த லக்கேஜும் உடன் இருக்கலாகாது. ஜாக்கிரதை. கிழக்கே செக் போஸ்டிலும்— உள்ளேயும் கெடுபிடிகள் அதிகம்.''

''எங்களோடு கூட நீங்கள் வருவீர்கள் அல்லவா?'' — என்று எங்களது வழக்கமான ஜெர்மன் உதவியாளரைக் கேட்டோம்.

அவர் சிரித்தபடி பதில் சொன்னார்: ''நாங்கள் வர முடியாது! கிழக்கு பெர்லின் விதி முறைகள் அதற்கு அனுமதிப்பதில்லை. நீங்கள் கிழக்கு பெர்லினுக்குள் நுழைந்ததும் உங்களோடு உங்கள் வாகனத்திலேயே கிழக்கு ஜெர்மன் அரசின் ஆங்கிலம்தெரிந்த வழிகாட்டி ஒருவர் ஏறிக் கொள்வார். அவர் எல்லாவற்றையும் விளக்கிச் சொல்வார். எங்கேயும் வழிதவறிப் போய் விடாதீர்கள். உங்கள் கூட்டத்தோடு சேர்ந்தே இருங்கள். உங்கள் 'சோர்' உங்களை கிழக்கு பெர்லினிலேயே விட்டுவிட்டுத் திரும்ப நேரிடுமானால் வீண் வம்பில் மாட்டிக்கொள்வீர்கள். ஏனெனில் உங்கள் கிழக்கு பெர்லின் விசா இரவு பன்னிரண்டு மணியோடு முடிந்து விடும்!''—

(தொடரும்)

நமது வோட்டு சிரிப்புக்கே!





ஜலதோஷம் பிடித்தால் குழந்தையின் உறக்கம் நாசம்

# விக்ஸ் வேப்போரப்பினால் இரவோடிரவாக சுகம்

(அவ் வேலையைச் செய்வது அன்னையின் பாசம்)

ஜலதோஷம்—அதனால் பாதிக்கப்பட்டவரே அதன் தொல்லையை அறியமுடியும். உறங்க முடியாது... மூக்கடைப்பு...சளி...இருமல்...உடல் முழுவதும் வலி...இவ்வளவையும் பாவம் குழந்தை தாங்க முடியுமா?

மாதாவின் மந்திரக்கரம் அறியுமே ஜலதோஷத்தின் நிவாரணத்தை. அப்பாசக்கரம் தொடுவது விக்ஸ்... அதை குழந்தையின் மூக்கு, தொண்டை, நெஞ்சு ஆகியவற்றில் அன்புடன் இதமாகத் தடவுகிறார் அன்னை...அதிலும் முக்கியமாய் முதுகிலே! அப்படித் தடவாவிட்டால் அம்முயற்சி முழுதும் அரைகுறையாகிவிடும். தாயின் பாசம் குழைத்துத் தடவப்படும் விக்ஸ், இரட்டைச் செயல் புரிகிறது: ஒன்று, மருந்து கலந்த (மெடிக்கேட்டட்) இதன் ஆவி மூக்கடைப்பை நீக்குகிறது. இரண்டு, சருமத்தில் தடவப்படுவதால் உடல் வலியைப் போக்குகிறது. அன்பும் பாசமும் இணைந்த அன்னையின் விக்ஸ் சிகிச்சையால், குழந்தை அயர்ந்து உறங்குகிறது. விடியும்வரை...முன் போலவே குழந்தை ஆரோக்கியமும் சுறுசுறுப்பையும் அடைகிறது!







**விக்ஸ்**
வேப்போரப்

**சுவாச நிவாரணம் அளிக்கிறது**
**நிவாரண அனுபவத்தை**
**உணரவைக்கிறது.**

RHL/VR-6 TAM R





## இனிய நண்பர்கள்

மூன்று தலைமுறையாக வீட்டுப் பரணிலும் அலமாரியிலும் சேர்ந்து போயிருந்த புத்தகங்களை யெல்லாம் தூசி தட்டி எடுத்து அடுக்கி நூலகம் ஆரம்பித்துள்ளேன். வெளியே போகாமல் ஒரு காசு செலவில்லாமல் வருவாய் மட்டும் கிடைக்கிறது. இந்த இனிய நண்பர்களால்.

**கே. சந்திரா, அருப்புக்கோட்டை**

## வருமானம் தரும் கழுநீர்

ஏழை விதவை யொருத்தி சுற்று வட்டாரத்தில் உள்ள வீடுகளுக்கெல்லாம் சென்று அவர்கள் அரிசி கழுவும் கழுநீரைச் சேகரித்துக் கொண்டு போய், மாட்டுப் பண்ணைக்கு வழங்குவாள். அங்கிருந்து பதிலுக்குச் சாணத்தை எடுத்துக் கொண்டு போய், வரட்டி தட்டி விற்பாள்.

**ஏ. சாந்தி, புதுக்கோட்டை**

## கல்யாண ஜமக்காளங்கள்

வீட்டு வேலைகளை முடித்துவிட்டு ஜமக்காளங்களில் பெயர் தைக்கும் தொழிலைச் செய்து வருகிறாள் என் தோழி. ஆங்கிலம், தமிழ், ஹிந்தி மொழிகளில் இந்த நூல் வேலைப்பாட்டை அவள் செய்வாள். முதலீடு குறைவு. வருவாய் கிடைக்கிறது.

**எஸ். ரமணி பேபி, தளவாய்ப்பேட்டை**

## தோழிக்கு நன்றி


என் சிநேகிதி வந்திருந்தபோது என் வீட்டு உபயோகத்துக்காகச் செய்திருந்த ஊறுகாயை மாதிரிக்குக் கொடுத்தேன். அவளுக்கு ரொம்பப் பிடித்துப் போய்த் தனக்கென்று தனியாக ஒரு பாட்டில் பண்ணித் தரும்படி கேட்டாள். பணமும் கொடுத்து விட்டாள். இப்படிச் சின்னதாக ஆரம்பித்த வியாபாரம் இன்று கிளை கிளையாக வளர்ந்து விட்டது.

**மங்களா சேஷாத்ரி, சென்னை-50**

## வாய் பேசினாலும் கை இயங்கும்

சங்கரன் கோவிலில் என் நண்பன் வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கிருந்த பெண்கள் என்னை வரவேற்றுப் பேசியபோது அவர்கள் கைகள் என்னவோ சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டே யிருந்தன. ராட்டைகளில் நூல் நூற்பதை இடைவிடாமல் செய்கின்றனர் இங்குள்ள பெண்கள். நூல் தறிக்கு அனுப்பப்படுகிறது. கணிசமான தொகையைப் பெற்றுத் தருகிறது.

**ஆர். ராகவன், சென்னை-15**



## தையல் தெரிந்த தையல்

எங்கள் வீட்டுக்குப் பூ விற்க வரும் பெண் வாடிக்கையாளர்களிடம், தனக்குத் தையல் தெரியும் என்று சொல்லி அவர்கள் தரும் துணிகளை வாங்கிப் போய்த் தைத்துத் தருகிறாள். ஒரே நாளில் இரண்டு விதத் தொழில்கள் நடைபெறுகின்றன அவளுக்கு.

**ஜே. கமலா சேலம்**

## நாய் விற்ற காசு...

அக்ரஹாரத்தில் ஒரே எதிர்ப்பு — 'பிராமண பெண் கோழி வளர்ப்பதா!' என்று. வீட்டுக் கஷ்டத்தை வெளியில் சொல்லவா முடியும்? எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் நாய் விற்ற காசு குரைக்காது என்ற தைரியத்தில் தொழில் ஆரம்பித்தாள் அப்பெண். இன்று சுற்று வட்டாரத்தில் பல பண்ணைகளிலிருந்தும் முட்டைகளை வாங்கி வியாபாரம் செய்யும் அளவுக்குத் தொழில் வளர்ந்து விட்டது.

**இரா. செல்வ சுப்ரமணியன், நாகர்கோவில்**

# வாசகர் பங்கு

### நாற்காலி பின்னுதல்

பக்கத்தில் மேஜை நாற்காலி போன்றவை செய்து விற்கும் கடை இருக்கிறது. அங்கிருந்து நாற்காலியின் சட்டங்களை மட்டும் வாங்கி வந்து பிளாஸ்டிக் ஒயரால் பின்னித் திருப்பித் தருகிறேன். ஒரு நாற்காலியின் சாய்மானச் சட்டம் பின்ன ஏழு ரூபாய் கூலி. ஒரு நாளைக்கு இரண்டு சட்டங்களை நிரப்ப முடிகிறது. பேசிக்கொண்டே செய்யக் கூடிய வேலை.

**திருமதி சுகந்தாராம், சென்னை-59**

### ரேடியோ அக்கா

பள்ளிப் பருவத்திலிருந்தே எலக்ட்ரானிக்ஸில் ஆர்வம் காட்டிய என் தோழி ஷ்யாமளா பி.எஸ்ஸி. பௌதிகம் படித்துவிட்டு ரேடியோ சர்வீஸிங்கும் கற்றுக் கொண்டாள். இப்போது ரிப்பேர் வேலைகள் செய்து நல்ல பெயர் வாங்கியிருக்கிறாள். சீக்கிரமே டி. வி. சர்வீஸிங்கும் ஆரம்பிக்கப் போகிறாள். ஆசைக்காகக் கற்றுக் கொண்டது நல்ல வருவாயைப் பெற்றுத் தருகிறது.

**ஜி. அம்சவல்லி, கும்பகோணம்**

### பெட்டிக் கடை

குடும்பமோ பெரிது - ஐந்து குழந்தைகள். கணவனுக்கு உடல்நிலை சரியில்லாததால் வேலைக்குப் போக இயலாத நிலை. தவித்துக் கொண்டிருந்த என் தோழிக்கு நான் யோசனை கூறினேன். அதன்படி வங்கிக் கடன் பெற்று வீட்டின் முன் பகுதியில் ரிப்பன், வளையல் போன்றவை விற்கும் ஒரு சின்னக் கடை வைத்தாள். மாலை நேரத்தில் மட்டுமே வியாபாரம் செய்கிறாள். அதற்கே மாதம் 250 ரூபாய் லாபம் வருகிறது.

**ஜே. கலைச்செல்வி, மரவனேரி, சேலம்**



### கண் பார்த்தது கை செய்தது

வீட்டு வாசலில் மைதானம். வலைப் பந்துப் போட்டி நடந்து கொண்டிருந்தது. திடீரென்று ஆட்டத்தில் பயன்படும் வலை அறுந்து போக அதைச் சரிப்படுத்தினார் என் தாயார். எப்படி வலை பின்னியிருக்கிறது என்றும் கவனித்துக் கொண்டார். அதுவே தொழிலாகி விட்டது. பம்பாயிலிருந்து பிளாஸ்டிக் ஒயர் வரவழைத்துப் பின்னி பல இடங்களுக்கு 'சப்ளை' செய்கிறார். 63 வயதாகியும் இன்னும் சளைக்கவில்லை. மாதம் 250 முதல் 300 ரூபாய் வரை வருகிறதே.

**ஜயா ராமகிருஷ்ணன், திருச்சி-14**

### வீட்டிலே தயாராகும் பல்பொடி

பானுமதிக்குப் பல்பொடி தயாரிப்பில் மாசம் 350 ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கிறது. எங்கள் வீட்டிற்கு எதிரே உள்ள சிறிய சந்தில் வசிக்கும் இவள் தன் இல்லத்திலேயே பல் பொடியைத் தயாரித்து வருகிறாள்.

**ஆர். உஷா, பவானி**

### மொத்தமாக வாங்கி....

மொத்தமாகக் கற்பூரம் வாங்கி அதைச் சிறு துண்டுகளாகச் செய்து பிளாஸ்டிக் பேப்பரில் சின்ன கவர் செய்து அதில் 'பாக்' செய்து விற்று வருகிறார் எனக்குத் தெரிந்த பெண். பாக்கெட் ஒன்றின் விலை அளவைப் பொறுத்து 10 முதல் 25 பைசா வரை இருக்கும். அவள் கணவர் பொட்டலங்களைக் கடைகளுக்குக் கொண்டு போய்க் கொடுத்து உதவுகிறார்.

**ஆர். ஜானகி, திருச்சி-6**

### 'கலை'யின் கைவண்ணம்

நிலவொளியில் சிறிய குடிசை, ஊஞ்சலாடும் பெண், அழகிய இயற்கைக் காட்சிகள்





—இவை எல்லாம் என் கைவண்ணத்தில் வீட்டிலேயே உருவாகின்றன. இதைச் செய்யத் தேவை — மிக எளிய பொருட்களான சோதுமையின் காய்ந்த புல், இனிஞ் சல்கள், அட்டை, வண்ண பேப்பர் போன்றவையே. கலைப் பொருட்களை உருவாக்கிய மன நிறைவும் கிடைக்கிறது. கைச்செலவுக்குச் சணிசமான பணமும் கிடைக்கிறது.

யூ. கலா, அருவன்காடு

**காலத்தை ஒட்டி வேலை செய்பவர்**

வெய்யில் காலத்தில் பழங்களை வாங்கி வீட்டிலேயே ஜூஸ் செய்து விற்கும் என் தோழி குளிர்காலத்தில் ஸ்வெட்டர் பின்னும் வகுப்புகள் நடத்துகிறாள். பல கம்பளி ஆடைகள் செய்து விற்கிறாள்.

திருமதி எஸ்.பிரேமா, ஜம்ஷெட்பூர்

**கையில் ஒரு தொழிலுடையவளாகி...**

திருமணமானபின் அலுவலகத்துக்குச் சென்று வேலை பார்க்க நான் விரும்பவில்லை. கற்ற கைத்தொழில் வீணாகிறதே என்றும் இருந்தது. யோசித்தேன். டிப்ளமோ படிப்பை வீணாக்காமல் வீட்டிலிருந்தவாறே ஒரு தனியார் கம்பெனிக்கு Printed Board Soldering செய்து அனுப்பி வருகிறேன்.

நிர்மலா ஜெயராமன், பெங்களூர்-3

**சீட்டு சேர்க்க கமிஷன்**

இலவசமாக ஜாதகப் பரிவர்த்தனை செய்வித்துப் பல கல்யாணங்களை நிச்சயித்திருக்கிறேன். எனவே பல பேரிடம் பரிச்சயம் உண்டு. இப்படி நாள்தோறும் உருவாகும் நண்பர்களை ஒரு பெரிய சீட்டுக் கம்பெனியில் சீட்டுப் போடும்படி கேட்டுக் கொள்வேன். கம்பெனியில் எனக்குக் கமிஷன் தருகிறார்கள்.

திருமதி சிந்தாமணி ராஜகோபலன், சென்னை-33

---

**நமது வோட்டு சிரிப்புக்கே!**

''என்ன இருந்தாலும் நம்ம வாக்காளர்கள் விவரம் தெரிஞ்சவங்க தான்!''

''எதை வச்சுச் சொல்றீங்க?''

''நான் கட்டாயம் தோத்துப் போயிடுவேன்னு தெரிஞ்சுட்டு, வோட்டுப் பெட்டியிலேயே நிறைய அனுதாபக் கடிதங்களைப் போட்டிருக்காங்களே!''



**வருவாய் தரும் பொழுதுபோக்கு**

வீட்டின் பின்புறத்தில் உள்ள இடத்தில் செயற்கைத் தேன் கூடுகள் நிறையவைத்து தேனீக்கள் வளர்க்கிறேன். இது எனக்கு மிக சுவாரஸ்யமான பொழுது போக்காகத் தோன்றுகிறது. நல்ல வருமானத்தையும் கொடுக்கிறது.

வித்யா நந்தகுமார், ஏரல்

**மாங்கொட்டையிலிருந்து நீலச்சாயம்**

மாம்பழ சீசன் ஆரம்பித்து விட்டால் போதும். என் தோழி சகாயமான விலையில் ஏராளமாக மாங்கொட்டைகள் வாங்கி அவற்றிலிருந்து நீலச் சாயம் தயார்த்து விடுவாள். துணிக்குப் போடும் நீலப் பொடி தயாரிப்பாளர்கள் இதனை வாங்கிப் பயன்படுத்துகின்றனர்.

திருமதி தேவகுதன், மதுரை-3

**புத்தக பைண்டிங்**

இயந்திரம் எதுவும் உபயோகிக்காமல் வெறும் அட்டை, Calico துணி, கோந்து, வண்ணத்தாள் இவற்றைக் கொண்டு கையாலேயே புத்தக பைண்டிங் செய்து வருகிறாள் என் தோழி. அனேகமாகப் பள்ளி குழந்தைகளுடைய புத்தகங்கள், வாசகர்கள் வாரப் பத்திரிகையிலிருந்து சேர்த்துத் தரும் தொடர்கதைகள் போன்றவற்றையே பைண்ட் செய்பவள் வெளி ஆட்களைக் காட்டிலும் குறைந்த கூலியே கேட்கிறாள்.

லட்சுமி நடராஜன், திருப்பூர்-1

**மெஹந்திவாலி**

கல்யாண சீசனில் இவளுக்கு ஏக கிராக்கி. பின், கல்யாணப் பெண்ணின் கையை முதலில் பிடிப்பது இவள்தானே! ஆமாம் மருதாணியில் விதவிதமாய்க் கோலம் போடுகிறாள் கையிலும் காலிலும். இந்தக் கலையைப் பலருக்கு சொல்லிக் கொடுப்பதன் மூலம் பணம் சம்பாதிக்கிறாள்.

ராதா நரசிம்மன், பம்பாய்-22

**புன்னை எண்ணெய்**

புன்னை மரக் கொட்டையிலிருந்து ஒரு வித எண்ணெய் தயாராகிறது. இதற்காகப் புன்னைக் கொட்டைகளை உடைத்துப் பருப்பை எடுத்துத் தரும் வேலையைச் செய்கிறார் எனக்குத் தெரிந்தவர். இதைச்செய்ய எண்ணெய் தயாரிப்பாளர் கூலி தருகிறார். பருப்பின் மேல் ஓட்டையும் உடைப்பவருக்குத் தந்து விடுவார். அது அடுப்பு எரிக்க உதவுகிறது.

வி. மனோன்மணி, அறந்தாங்கி

ராகமாலிகா வழங்கும் பட்டுப் புடவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

**ஆர். உஷா,**
34, வெண்டர் நரசய்யர் தெரு,
பவானி—638 301.

# தலைவலி பலவகை உண்டு



# சிகிச்சை ஒன்றே ஒன்று !

# அனஸின்

## இதில் அதிக அளவில் வலி-நிவாரணி அடங்கியுள்ளது

துரித நிவாரணம் அளிக்க, உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும், வலி-நிவாரணி மருந்து அதிக அளவில் கொண்டது—அனஸின்.

தலைவலி, ஜலதோஷம், ஃப்ளூ, முதுகு வலி, தசை வலி, பல் வலி ஆகியவற்றிற்கு நல்ல பலனளிக்கிறது.

அனஸின் மீது மட்டுமே நம்பிக்கை வையுங்கள்.

இப்போது பாதுகாப்பான ஃபாயில் உறையில்.



சக்தி வாய்ந்த, நம்பகமான
மேனர்ஸ்
அனஸின்*

இந்தியாவின் நம்பர் 1 வலி-நிவாரணி மருந்து.

* Licensed user of T.M. : Geoffrey Manners & Co.Ltd.

GM-2-84-TM-R

# 10

## நிஜமோ நாட்கமோ?

அத்தனை ஜொலிப்பு. மினுப்புகளைப் பார்த்த வர்மனின் கண்கள் திக்பிரமையுடன் நிற்க அவன் மீது விழுந்த முதல் ஜோடிக் கண்கள் செஞ்சுலட்சுமியுடையவை.

அம்பு வீச்சுப் போல் அவன் விழிக்குள் விழுந்து உள்ளே புகுந்து சொல்லொணா இன்ப லாகிரியை எழுப்பிவிட்டு மனத்தின் ஏதோ ஒரு மறைவில் ஊமை வலியாய்த் தைத்துக் கொண்டது.

சிறுமி என்று நினைக்கப் போக, பருவக் கண்கள் அல்லவா அவளிடம் இருந்தன.

அடுத்தகணம் அன்னிய இடத்தில் இருக்கிறோம் என்பதை உணர்ந்து தன் பார்வையைத் திரும்ப வாங்கிக் கொள்ள அடுத்த ஜோடிக் கண்கள் அவனை மிருதுவாக ஈர்த்தன.

ஆழம் இயலா சாகரத்தில் நழுவியது போல இருந்தது. எங்கும் அமிர்தக் கடல்திவலைகள் அவனை சூழ்க அடித்தன. முந்திய பார்வையில் அவனது 'தன்' நினைவு நிலைத்திருந்தது. இந்தப் பார்வையில்அதுகரைந்து அமிர்தத்தோடு அமிர்தமாய்க்கலந்து விட்டது.

இந்த முறை பார்வையை முதலில் வாங்கிக் கொண்டவள் சிந்து.

அலட்சியமாய் அவள் முகத்தைத் திருப்ப, ஒரு துயர வலி அவன் நெஞ்சின் மீது இறங்கி அழுத்தியது.

சீக்கிரம் குறவஞ்சி நாடகம் ஆரம்பித்தது.

மிருதங்கம் இடி முழவங்கள் போல் அதிர, வீணைகள் மின்னல் இழைகளை இழைக்க கின்னரக் குரலுடன் இரு பெண்கள் கீதமிசைக்க, சொப்பனம் போல நால்வர் வந்து நடனமிட்டார்கள்.

வர்மனின் மனம் பறந்தது.

அந்தச் சூழலும், அதன் நேர்த்தியும் ரம்யமும் அவன் மனத்தை வெகுவாகத் தொட்டிருந்தன.

என்ன அழகான பெண்கள் இவர்கள். என்ன அழகாக நடமிடுகிறார்கள்? இந்தக் கீதம் தான் மனத்தை எப்படி நிறைக்கிறது? சொந்த துக்கத்தைக் கூட மறப்பது போல் தோன்றியதே!

அனுபவம் தான் புத்தம் புதிதாய் என்ன சுகமாய்ப் பரவசப்படுத்துகிறது!

முதல் பாட்டு முடிந்ததும் கரகோஷ ஒலி எழுந்தது. வர்மனும் சேர்ந்து கொண்டான். அப்போது தான் ஆசனங்களில் நிறைய பேர் இருந்தது புலனாகியது.

பின்னர் குறத்தி வர நாடகம் ஆரம்பமாகியது. விருத்தம், காவடிச் சிந்து, நொண்டிச் சிந்துகளில் பரவசமான பாட்டுக்கள் கூடத்தில் குதித்து விளையாடின.

கதாநாயகி உருவத்தில் செஞ்சுலட்சுமி வந்த போது ஆச்சரியமாக இருந்தது.

செஞ்சுலட்சுமி காதல் வசமாதல் குறத்தி குறி சொல்லுதல் எல்லாம் வரிசை நிகழ்ச்சிகளாக வந்தன.

வர்மனின் கண் மாறவில்லை. செஞ்சுவோடு ஒன்றியிருந்தது. அவள் முகம், பாவனை, முத்திரை, அபிநயம் எல்லாம் வெகுவாக அவனைக் கவர்ந்தன. இமையை அசைக்கக் கூட விடவில்லை. மேடையில் அவள் போகுமிடமெல்லாம் கண்ணை இழுத்துக் கொண்டு போனாள்.

ஆச்சரியம்! ஒருவித அதிசய பாவனை அவனுக்குத் தோன்றியிருந்தது.

மேடையில் அவளுக்குத் தோன்றும் உணர்ச்சி அவனுக்கும் தோன்றியிருந்தது. சோகமானாலும் சரி, மோகமானாலும் சரி, சுகமானாலும் சரி அந்த அந்த உணர்வுகள் அவனையும் உடனே ஆட்கொண்டன.

இனி கதாநாயகன் வரும் கட்டம்.

அப்போது கர்ஜனையான ஒலங்கள் எங்கும் கேட்க, பரங்கியர் வேடம் போட்ட இருவர் வந்து செஞ்சுவைக் கைப்பிடிக்கிறார்கள். இழுக்கிறார்கள். நவாபு வேடம் போட்ட இருவர் அவர்கள் பின்னால் வந்து சும்மா நிற்கிறார்கள்.

வர்மனுக்கு உட்கார முடியவில்லை.

''ஐயோ! என்னைக் காப்பாற்றுங்களேன்! காப்பாற்றுங்களேன்!'' என்று மனம் உருகக் கதறுகிறாள்.

சபையினர் முகம் எல்லாம் இறுக்கமாகிறது.

வர்மன் கொந்தளிக்கிறான்.

ஒரு பரங்கி வேடக்காரன் செஞ்சுவை முத்தமிடப் போய் விட்டான்.

''ஏய்! ஏய்!'' என்று சபையில் கூக்குரல்!

வர்மன் துள்ளி எழுந்தான். கையில் கத்தி உருவி வந்தது. மேடைக்கு ஒரு தாவலில் வந்தான். 'ஆ' என்று எங்கும் குரல்! அவன் பார்வை அந்தப் பரங்கியர் மீது விழ அந்த வேடதாரிகள் பாதம் வரை நடுங்கினார்கள்.

மறுதாவல்! அவன் பரங்கியர் பக்கம் மிதித்து நின்றான்.

கையை ஓங்கி இருப்பான். அதற்குள் சபையிலிருந்து வந்த இருவர் அவன் கையை இறுகப் பிடித்தார்கள்.

''இதென்ன வீரரே! இது வெறும் நாடகம்தானே! இதைப்போய் ஏன் தடுக்கிறீர்கள்?''

வலுவாக அவனைப் பிடித்து ஆசனத்துக்கு இழுத்தார்கள்.

வர்மன் அடங்கவில்லை. ஏயால் கூச்சல் போட்டான். பலர் அடக்கியும் திமிறப் பார்த்தான். அவனை ஒரு வெறி ஆட்கொண்டிருந்தது.

இப்போது பல காவலர்களும் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். விடாப்பிடியாக அவனைக் கட்டிப் பிடித்து அவன் இருப்பிடத்தில் கொண்டு போய் விட்டார்கள்.

காலையில் எழுந்த போதும் அந்தக் கலக்கம் அவனிடம் அப்படியே இருந்தது.

செஞ்சுக ஆடியது, பாடியது, காதலில் வாடியது எல்லாமே மனத்தில் அழிக்க இயலாத சித்திரங்களாக இருந்தன.

அந்தப் பரங்கியர் வந்ததும், அவள் தத்தளித்ததும் அறைகூவியதும் நினைவில் ஏதோ துர்ச்சம்பவம் போல் அமுங்கி இருந்தது.

இன்னும் கூட செஞ்சுகவை நினைத்தால் மனத்தில் பதற்றம் ஏற்பட்டது.

யோசித்தான்! ஒரு நாடகமா அவனை இந்தப் பாடு படுத்துகிறது.

சப்தம் சேட்டதும் திரும்பினான். சித்து அவனை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவன் எழுந்ததும் அமரச் சொன்னான்.

''ஏது வீரரே! இரவு ரொம்ப உணர்ச்சி வசம் ஆகி விட்டீரே!'' என்றான் சித்து.




''செஞ்சுலட்சுமி எப்படி இருக்கிறாள்? சௌக்கியமாக இருக்கிறாளா! அவளுக்குத் தீங்கு ஏதும் ஏற்படவில்லையே!'' என்று ஆதுரமுடன் வினவினான் அவன்.

அவன் குரலில் கூட கலக்கம் இருந்தது.

''ஏன்! பயந்து விட்டீரோ!'' என்றாள் சிந்து.

''ஆமாம் அம்மணி! மனத்தில் என்ன வேதனை ஏற்பட்டது. இன்னும் கூட அதன் வலி இருக்கிறது. நான் செஞ்சுவை மீண்டும் சகஜமான நிலையில் பார்த்தால் தவிர என் மனம் சமாதானமாகாது'' என்றான் அவன்.

அவள் ஆச்சரியமுடன் அவனைப் பார்த்தாள்.

''ஏன்? அப்படி அவள் மீது லயித்து விட்டீரோ?''

வர்மன் அவளைத் திரும்பிப் பார்த்தான். அவள் முகத்தில் சலனமில்லாமல் இருந்தாள்.

''நான் சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள்! அவள் செஞ்சு என்பதைக் காட்டிலும் ஏதோ ஒரு தேசத்து ராஜகுமாரியாக எனக்குத் தோன்றினாள். செஞ்சு என்று பிரித்துப் பார்ப்பதே கஷ்டமாக இருந்தது. அவளது சோகம் எனது சோகமாகப் பட்டது! அவளது கஷ்டம் என் கஷ்டமாகப் பட்டது! அது நாடகந்தான் என்று தெரியும். இருந்தும் என் மனத்தில் ஏற்பட்ட கலக்கத்தை இன்னும் என்னால் மாற்ற முடியவில்லை.''

கூறிய அவன், தன் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டான்.

---

**நமது வோட்டு சிரிப்புக்கே!**

''எலெக்ஷன் வந்தாலும் வந்தது. எங்க ஊர் விளையாட்டு மைதானம் பூராவும் நாசமாயிடுச்சு!''

''எப்படி?''

''போஸ்டர் ஒட்டறதுக்கு ஊர்லே சுவர்கள் பத்தலேன்னு சொல்லி, மைதானத்திலே அவனவன் நீள நீளமா சுவர்களைக் கட்டி, போஸ்டர் ஒட்டிட்டாங்கய்யா!''



அவன் கண்களில் ஈரம் பரவியிருந்தது. அதைச் சிந்துவிடம் காட்ட அவன் விருப்பப் படவில்லை.

பிறகு வேறு திசையைப் பார்த்துக் கொண்டே அவன் பேசினான். ''நீங்கள் கவனித்திருக்கிறீர்களா அம்மணி! யாராவது ஒரு கதை சொல்வார்கள். அது நம் மனத்தை உருக்கி விடும்! யாராவது ஒரு சம்பவத்தைச் சொல்லுவார்கள்! அது நம் உள்ளத்தை உலுக்கி விடும்! பல நாட்கள் வரை அந்தக் கதையோ சம்பவமோ மனத்தை அழுத்திக் கொண்டே இருக்கும். ஒருவேளை ஆயுசு வரை கூட அவை மனத்தில் ஒரு வடு போலவே தங்கி இருக்கும். நான் ஒரு உணர்ச்சிக்காரன்! ஊரில் என்னை எல்லோரும் அப்படித்தான் சொல்வார்கள்! பாவைக் கூடத்தில் மயானத்தில் சந்திரமதி புலம்புவதைப் பார்த்து விட்டு ஊரில் ஒரு மாதம் அழுது கொண்டிருந்தேன் நான்! என்னால் அதைப் பொறுக்க முடியவில்லை. ஒரு பெண்ணுக்கு அப்படி ஒரு கதி நேர்ந்ததைச் சகிக்க முடியவில்லை. பின்னால் சுவாமி பிரத்யட்சமாகி சந்திரமதியையும் அரிச்சந்திரனையும் சேர்த்து வைத்தால் கூட அது எனக்குச் சமாதானமாகவில்லை. அந்தப் பெண்மணிக்கு அப்படி ஒரு கஷ்டம் வந்ததே என்று அதை நினைத்துத்தான் மனம் அமைதி காணாமல் வெதும்பியது.

''கூடாது அம்மணி கூடாது! சந்திரமதிக்கு அந்தத் துக்கம் வந்திருக்கக் கூடாது! அது போல் செஞ்சுவுக்கும் அந்தத் துக்கம் வந்திருக்கக் கூடாது!

''அதை என் மனம் ஏற்கக் கஷ்டப்படுகிறது. என்னால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.''

வார்த்தைகளில் வந்த வேகம் அவனது நெஞ்சின் படபடப்பை எடுத்துக்காட்டியது. சிந்து அவனைத் இரக்கமாகப் பார்த்தாள்.


''உங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது வீரரே! நீங்கள் ஒரு புத்தர்!'' என்றாள்.

சட்டென்று திரும்பி ''அப்படித்தான் சமயத்தில் நான் நினைத்துக் கொள்வது வழக்கம்! நிச்சயம் அந்த மகானுக்கு நிகராக நான் இருக்க முடியாது. ஆனால் அவரது உணர்ச்சிகளின் ஏதோ ஒரு சிறு பகுதியான அம்சம் என்னிலும் இருப்பதாக நினைக்கிறேன். இல்லாவிடில் பிறர் கண்ணீரை நான் எனது கண்ணீராக ஏற்றுக் கொண்டிருக்க மாட்டேன்'' என்றான் அவன் உணர்ச்சிப் பெருக்கோடு.

சிந்து சிறிது நேரம் பேசவில்லை. நிசப்தமாக அவனைப் பார்த்திருந்தாள். வர்மன் தனது உத்தரீயத்தை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

''வீரரே!'' என்றாள் அவள். ''வெறும் நிழலைப் பார்த்தே இப்படி அவதிப்படுகிறீர்! நிஜத்தைப் பார்த்தாலோ...?''

''இன்னும் அவதிப்படுவேன் அம்மணி! செஞ்சுவுக்கு நிஜம் எதுவும் நிகழக் கூடாது! நிழலோடு நின்று விட்டால் போதும்!. இப்போது கூட அவளைத் திரும்பவும் பார்த்துச் சகஜமாக இருக்கிறாள் என்று


"வெள்ளைக்காரன் விருந்துக்கு கோட்,
சூட்டு போட்டுக்கிட்டுதான் வரணும்னு
அழைப்பிலே கண்டிஷன் போடுவான்.
இது புதுசா இல்லே இருக்கு. இந்த
விருந்துக்கு எல்லா பொம்பளைங்களும்
ராகமாலிகா புடவைதான்
கட்டிட்டு வரணும்னு சொல்றது"
UMA FEATURES

தெரிந்தால் தான் சமாதானம் ஏற்படும்'' என்றான் அவன்.

வார்த்தைகள் தாபமாகக் கீழே இறங்கி நின்றன.

அங்கு தோன்றிய நிசப்தமே கடினமாக இருந்தது. சிந்து பெருமூச்சு விட்டாள்.

'வீரரே!'' என்றாள். ''செங்குவைத் தானே பார்க்க வேண்டும்? பார்க்கலாம். புறப்படுங்கள்!''

''அம்மணி!'' என்றான் வர்மன் திரும்பி. ''என்னை ஏதாவது பிரமை பிடித்தவன் என்று நினைத்து விடாதீர்கள்!''

''இல்லை வீரரே! சில பிரமைகள் நமக்கே நன்மை தரும் பிரமைகள்!''

கார்வேட் ராஜாவின் மாளிகை பெரிதாக இருந்தது. அதன் உத்யானவனமோ அதை விடப் பெரிதாக இருந்தது.

சிந்து அவனை நீள அழைத்துப்போனாள்.

காலை வெய்யில் மெல்லிய தங்கத் தகடு போல் மின்னியது.

வனம் முழுவதும் புஷ்ப வனம்!

அரளி வகையிலிருந்து முல்லை, ஜாதி, அந்தி மந்தாரை, செம்பருத்தி, சங்குபுஷ்பம் என்று வர்ணக் கலவைகளாக எங்கும் பொழிந்திருந்தன.

அருமையான சரள் பாதை இடையே அவர்கள் நடந்தார்கள்.

ஒரு பெரிய தடாகம் இடையே குறுக்கிட்டது. இதழ் விரித் தாமரைகள் தீ விரித் தாற்போல் தகதகக்க, வண்டுகள் ரீங்கார இசையில் நீர்மேல் சக்கர வட்டமிட்டன.

ஒரு கணம் தயங்கி நின்று ''வீரரே!'' என்றாள் சிந்து.

''என்ன?'' என்று சொல்லி நின்றான் வர்மன்.

''செங்குவுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டாலும் காப்பாற்றுவீரா?''

அவன் புருவங்கள் மேலே வளைந்து சேர்ந்தன.

''நிச்சயமாக! உங்களை நான் காப்பாற்ற வில்லையா?''

சிந்து உடனே பேசவில்லை. வெறுமையாகத் தடாகத்தைப் பார்த்து நின்றாள். நீண்ட மூச்சு விட்டுவிட்டு ''செங்கு என்பவள் ஒரு சின்னம்!'' என்றாள்.

''சின்னம்?''

''ஆமாம்! நமது நாட்டின் சின்னம்! நாம் இருக்கும் நாட்டின் பிரதி பிம்பம்! நாட்டைத்தான் நடித்தாள் அவள்! வெறும் நிழலைக் காப்பாற்றி விட்டால் போதுமா வீரரே! நிஜத்தைக் காப்பாற்ற வேண்டாமா?''

மருட்சியுடன் பார்த்தான் அவன்.


''நிச்சயம் காப்பாற்ற வேண்டும் இளவரசி!''

''செங்கு அவதிப்பட்டால் நமது சொந்தக் காரியத்தைக் கூட விட்டு அவளைத் தானே காப்பாற்ற நினைப்போம் வீரரே!''

அவள் சொல்வதன் உட்பொருள் சற்றே தரிசனமாகத் திகைத்து நின்றான் அவன்.

(தொடரும்)

# ஆளப்பிறந்த என் கண்மணி



ம.வெ.சிவகுமார்

'...கல்யாண மண்டபத்தின் வாசலில் பேனர் கட்டியிருந்தார்கள். வங்கி ஊழியர் சங்கம் உங்களை வரவேற்கிறது.' ஏழெட்டு மோட்டார் சைக்கிள்கள் நின்றிருந்தன. மண்டபத்தின் வாசலில் டோக்கன் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். சாப்பாடு டோக்கன், டிபன் டோக்கன், டீ டோக்கன், காப்பி டோக்கன், பெட்டிக் கடையைத் தாண்டி ஹோட்டல் உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணா. ஜெனரல்பாடிக்கு வருகிறவர்கள் உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணாவில் டோக்கன்களை மாற்றிக் கொள்ளலாம்.

அரவக்குறிச்சி லால்குடி கிருஷ்ணகிரி. மாயவரம் உடுமலைப்பேட்டை காமய்ய கௌண்டன்பட்டி மற்றும் எல்லாக் கிளைகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். சிவப்பு ரிப்பனுடன் டெலிகேட் பேட்ஜ் அணிந்திருந்தார்கள். கையில் சூட்கேசுக்குள் ஒரு மாற்று உடை. இன்று இரவு ரயிலேறிக் கூடிய சீக்கிரம் வேலைக்குத் திரும்ப வேண்டும். யூனியன் கூட்டங்களுக்குச் செல்ல நிர்வாகம் விடுமுறை அளிப்பதில்லை. கூட்டத்திற்கு வந்து போகச் செலவு யூனியன் கொடுக்கும். உடன் பொருளாளரிடம் கறந்தாக வேண்டும். இன்றைய கூட்டம் எப்படி முடியுமென்று யாருக்கும் புரியவில்லை. யூனியன் ஒரு முக்கிய தேர்தலைத் தன் மதிய அமர்வில் எதிர்நோக்கியிருக்கிறது.

முந்தினநாளே கிருஷ்ணகுமார் ஜிப்பாவைத் தோய்த்து வைத்திருந்தான். ரொம்பவும் ராசியான ஜிப்பா. எப்படியும் தோழர் ராஜரத்தினத்தை இந்த முறை செயலாளராக்கிவிட வேண்டும். தோழர் ராஜரத்தினத்தின் தொழிற்சங்க நேர்மை சந்தேகத்திற்கப்பாற்பட்டது.

தோழர் பண்டாரே வந்தாயிற்று. செயலாளர். யூனியனை முப்பது வருடத்திற்கு முன் துவங்கியவர். தற்போது ஒரு கிளையின் அக்கவுண்டண்ட். நிர்வாகத்தின் அங்கம். கிருஷ்ணகுமார் அக்கவுண்டண்டுகள் யூனியனில் அங்கத்தினராய் இருக்கக்கூடாது என்கிற கோரிக்கையை இன்றைய ஜெனரல்பாடி கூட்டத்தில் வாதத்திற்கு வைக்கப்போகிறான். இதற்கு ஆதரவாக நூற்றி இருபத்தி ஆறு கையெழுத்துக்கள் வாங்கி இருக்கிறான். இது தோழர் பண்டாரேயைப் பொறுத்த வரை மிகவும் முக்கியமான தேர்தல். இது வரை யாரும் அவரை எதிர்த்து நின்றதேயில்லை. எதிர்ப்பே இல்லாமல் முப்பது வருடங்கள். ஆனால் இன்றைய தேர்தல் எளிதாக இருக்கப் போவதில்லை. புதியதாய் நிறைய இளைஞர்கள் சேர்ந்திருக்கிறார்கள். யோசிக்கக் கூடிய இளைஞர்கள். அவர்களுக்கு யூனியன் துவக்கம் தெரியாது. வரலாறு தெரியாது. பண்டாரே வயதானவன். வயதானவர்கள் செயல்பட முடியாது.

பண்டாரே உண்மையில் நல்ல தொழிற்சங்கவாதிதான். ஆனால் சமீப காலமாக அவர் நிறையப் பணம் பண்ணுகிறார். யூனியன் அவருக்கு உப தொழிலாக ஆகிவிட்டது.

பியூன் ஒருத்தன் மாலை வாங்கி வந்து மேடையோரம் வைத்தான். தோழர் பண்டாரேவுக்கான மாலை. மாலை வாங்கத் தோழர் பண்டாரே முப்பது ரூபாய் கொடுத்திருந்தார். மண்டபத்துக்குள் இன்னமும் கூட்டம் சேரவில்லை. வெளியே காம்ரேடுகள் காம்ரேடுகளுடன் அறிமுகப் பட்டுக் கொண்டிருந்தார்கள். பத்தரை மணிக்குக் கூட்டம் தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இன்றைய கூட்டத்தின் காலை அமர்வின் முன் கண்பார்வையற்ற இரண்டு குழந்தைகளுக்கு இரண்டு செட் யூனிபார்மும் சில விளையாட்டுச் சாமான்களும் வழங்கப்பட இருக்கின்றன. புரசைவாக்கம் கிளை முத்து குழந்தைகளை அழைத்து வந்திருந்தான். கடைநிலை ஊழியன். குடிசைப் பக்கத்தில் எந்த மாதிரி வேண்டுமானாலும் ஊனப்பட்ட குழந்தைகள் கிடைக்கும். குழந்தைகள் முத்துக்குமாரும் தமிழ்ச் செல்வியும் வெள்ளை விழிகளை



மலங்க விழித்தபடி 'ஹலோ ஹலோ' மைக் டெஸ்டிங்கையும் நாற்காலியை மரமேடையில் இழுத்துப் போடுகிற சப்தத்தையும் கேட்டுக் கொண்டிருந்தன.

**வா**சலில் திடீரென்று பரபரப்பு ஏற்பட்டது. அம்பாசிடர் காரில் மண்டல மேலாளர் இறங்கினார். தோழர் பண்டாரே விரைந்து சென்று வரவேற்றார். மேடையில் எல்லோரும் ஏறி அமர்கிற வரைக்கும் அந்த மரமேடை முரசம் கொட்டிக் கொண்டிருந்தது. தோழர் பண்டாரே மைக்கருகில் போய் நின்றார். யாரோ ஓடி வந்து உயரத்தைச் சரி செய்தார்கள். 'தோழர்களே, நமது யூனியனின் முப்பதாவது வருடாந்திர கூட்டம் இன்றைக்குச் சிறப்பாக நடைபெற இருக்கிறது. நமது அழைப்பை ஏற்று, தன் பல்வேறு அலுவல்களுக்கிடையே வருகை புரிந்திருக்கும் மண்டல மேலாளருக்கு நமது நன்றி உரித்தாகிறது. தொழிற்சங்கங்களின் நோக்கம் விரிவாகி வருகிற காலம் இது. இன்றைக்கு நல்லதொரு சமூகத் தொடர்பு நமது தொழிற்சங்கத்துக்கு அவசியமாகிறது. தொண்டுகள்மூலமே சமூகத் தொடர்புகள் வலுப்படும். இன்றைய கூட்டத்தில் நமது சங்கத்தின் சார்பாக இரண்டு பார்வையற்ற சிறுவர்களுக்கு இரண்டு செட் சீருடையும் சில விளையாட்டுப் பொருள்களையும் நமது மண்டல மேலாளர் வழங்குவார். நமது மண்டல மேலாளரைத் தற்போது உங்களுடன் பேச அழைக்கிறேன்.

மண்டலமேலாளர் வந்தார். மீண்டும் மைக்கின் உயரம் சரிப்படுத்தப்பட்டது. ''நண்பர்களே யூனியன்களை எதிரிகளாய் நிர்வாகம் நினைத்த காலம் போய் விட்டது. நல்ல பொறுப்பான யூனியன்கள் அற்புதங்களைச் சாதிக்க முடியும். உங்கள் யூனியன் காட்டுகிற சமுதாய அக்கறை என்னை வெகுவாய்க் கவர்ந்துள்ளது. அவசரமான சில அலுவல்



காரணமாக உங்களோடு அதிக நேரம் பேச முடியாதவனாக இருக்கிறேன்.''

தோழர் பண்டாரே மீண்டும் பேசுவதற்காக எழுந்தார். மண்டல மேலாளருக்கு மாலையிடும்படி தோழர் ராஜரத்தினத்தைக் கேட்டுக் கொண்டார் மாலையிடப்பட்டது. தொடர்ந்து தோழர் பண்டாரே மேலாளரின் நற்பண்புகள் பற்றிப் பேச ஆரம்பித்தார். கூட்டத்தில் இருந்து யாரோ கத்தினார்கள்.

''உட்காருடா டேய் கூஜா.''

''ஹூ ஈஸ் தட் பாஸ்டர்ட்?'' என்று பண்டாரே மேடையிலிருந்து கத்தினார். பிளட் பிரஷர். இப்போது வேறு சிலரும் கத்த ஆரம்பித்தார்கள்.

''உபயோகப்படுத்தின வார்த்தைக்கு மன்னிப்புக் கேள்.''

''நிர்வாகத்துக்கு வால் பிடிக்காதே.''

''பண்டாரே டௌன் டௌன்.''

கிருஷ்ணகுமார் சுறுசுறுப்படைந்தான். மனத்திற்குள் பண்டாரே மானம் போவது சந்தோஷமாயிருந்தது. ஆனால் இது தருணமல்ல. மண்டல மேலாளர் இன்னமும் மேடையில் இருக்கிறார். அதுவரை அமைதி அவசியம். அங்கத்தினரிடையே புகுந்து சமாதானப்படுத்த ஆரம்பித்தான். இதற்குள் மேலாளர் அந்த அவசரமான அலுவல் காரணமாகப் புறப்பட்டுப் போயிருந்தார். தோழர் ராஜரத்தினமும் இன்னும் சிலரும் மைக்கில் பேசி அமைதிப்படுத்தினார்கள். காலை அமர்வு துவங்கச் சற்று நேரம் இடைவெளி தரப்பட்டது.

முதலில் யூனியன் கணக்கு விவகாரங்கள். யானைக்கு அல்வா போட்ட வவுச்சர்கள். பெரும்பாலான செலவுகளுக்கு விவரங்கள் இல்லை. நாலாயிரத்துக்கும் மேல் சஸ்பென்ஸில் செயலாளர் பெயரில் இருந்தது.

கிருஷ்ணகுமார் அங்கத்தினர்கள் நடுவே புகுந்து செலவினங்களைப் பற்றிய கேள்விகளை எழுப்பும்படி கேட்டுக் கொண்டான். எல்லாத் திசைகளிலிருந்தும் குரல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. தோழர் பண்டாரே புரசைவாக்கக் கிளை முத்துவை மேடைக்கு வரும்படி சைகை செய்தார். அவன் எழுந்து நாற்காலிகளுக்குள் நடந்து மேடைக்குப் போனான்.

''என்ன தலைவரே?''

''பிரபு வைன்ஸ்லே சொல்லி வைச்சிருக்கேன், நம்ம பசங்களைக் கூட்டிக்கிட்டுப்போ. ஹமீதியாவிலே சாப்பிட்டுக்குங்க. நிறைய குடிச்சுக்கட்டும். ரெண்டு மணியிலே வரணும். கரெக்டா வந்துறணும்'' என்றார் தோழர் பண்டாரே. கற்றை நோட்டோடு முத்து சென்றான்.

பொருளாளரைக் கேள்வி கேட்டுத் துளைத்தார்கள்.

கடைசியில் நாலாயிரம் ரூபாய் சொத்தைப் பண்டாரே சட்டி விடுவதாக உணர்ச்சிகரமாகப் பேசி முடித்ததும் பொருளாளர் அறிக்கை ஏற்கப்பட்டதென அறிவிக்கப்பட்டது. அடுத்தது செயலாளர் பண்டாரேயின் அறிக்கை. பதினெட்டுப் பக்க அறிக்கையை பண்டாரே படிக்க ஆரம்பித்த போது சாப்பாட்டு டோக்கனுடன் அங்கத்தினர்கள் சாப்பிடப் போனார்கள். அறிக்கை படித்து முடிகிற நேரத்தில் புரசைவாக்கம் கிளை முத்துவும் இன்னும் பத்து கடைநிலை ஊழியர்களும் தள்ளாடியபடி மண்டபத்தில் நுழைந்தார்கள்.



''காம்ரேட் பண்டாரே'' என்றான் முத்து.

''வாழ்க'' என்றார்கள் மற்றவர்கள். ஒருத்தன் சட்டியிருந்த மாலையைக் கஷ்டப்பட்டு இலையிலிருந்து பிரித்து மேடையேறும் போது படிக்கட்டில் தடுக்கித் தோழர் பண்டாரே கழுத்தில் மாலையைப் போட்டுக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தான்.

''தொளிலாள எதிரிகள்'' என்றான் முத்து.

''ஒளிக'' என்றார்கள் மற்றவர்கள். கிருஷ்ணகுமார் மேடையில் ஏறித் தோழர் ராஜரத்தினத்திடம் போனான்.

''ராஜ் அடிதடி நடக்கப் போவுது.''

''அதெல்லாம் ஒண்ணும் ஆகாது'' என்றார் தோழர் ராஜரத்தினம்.

''உனக்குத் தெரியாது ராஜ். நீ சரின்னு சொல்லு. குடிச்சுக் கலாட்டா பண்றவங்களைக் கொத்தி எறிஞ்சுடறேன்.''

''அப்புறம் நமக்கும் பண்டாரேக்கும் என்ன வித்தியாசம்?'' என்றார் தோழர் ராஜரத்தினம். கீழே கூட்டம் சுறுசுறுப்படைந்திருந்தது. நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தவர்களை விட எழுந்து நின்றவர்கள் எண்ணிக்கை அதிகம் ஆயிற்று. கிருஷ்ணகுமார் முகம் சிவந்து இருந்தான். குடித்தவர்கள் நாராசங்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். கெட்ட வார்த்தைகள் புழக்கம் அதிகம் ஆயிற்று. கிருஷ்ணகுமார் கலாட்டா செய்கிறவர்கள் மேல் நாற்காலிகளைத் தூக்கிப் போட்டான். ஒரு தடவை கோபமாய்ப் பண்டாரேயிடம் போய் அடிக்கிற ஆவேசத்துடன் குழப்பம் விளைவிக்கிறவர்களை வெளியேற்றச் சொன்னான். தோழர் ராஜரத்தினம் மேடையின் நடுவில் நின்று அமைதி அமைதி என்று கத்திக் கொண்டிருந்தார்.

கிருஷ்ணகுமார் வெளி நடப்பு செய்ய ஆதரவு தேடிக் கொண்டிருந்தான். அக்கவுண்டண்ட்கள் யூனியன் உறுப்பினர்களாய் இருக்கக் கூடாது என்பதற்கு ஆதாரமாக அவன் சேகரித்திருந்த கையெழுத்துக்கள் செல்லாது; முறைப்படி அவைசமர்ப்பிக்கப்படவில்லை என்று காரணம் காட்டி அதன் மீது விவாதம் மறுக்கப்பட்டு விட்டது. அங்கத்தினர்கள் டீ டோக்கனை எடுத்துக் கொண்டு வெளியே போக ஆரம்பித்தார்கள். சில பேர் பயந்தும் வெறுத்தும் தேர்தலுக்கு முன்னரே கிளம்பிப் போனார்கள். கிருஷ்ணகுமாருக்கு எரிச்சல்.

# "காஸ் சிலிண்டரைக் கடன் வாங்குதல் கஷ்டத்தைக் கடன் வாங்குவதாகும்."



காஸ் சிலிண்டரைக் கடன் வாங்குதல் சட்டத்திற்கு விரோதமாகும். காரணம் காஸ் சிலிண்டர் கம்பெனிக்குச் சொந்தமாகும். அது உங்களுக்கு மட்டுமே குத்தகைக்கு (உபயோகத்துக்கு) கொடுத்துள்ளது. இரவல் வாங்கியவருக்கு ரீஃபில் செய்வதோ மெகானிக் ஸர்வீஸோ மறுக்கப்படமுடியும்.

ஆனால் முக்கியமான விபரம் என்னவென்றால், காஸ் சிலிண்டரைக் கடன் வாங்குவது ஆபத்தானதாகும். எல்லா ரெகுலேட்டர்களும் எல்லா சிலிண்டர்களுக்கும் பொருந்தாது. கடன் வாங்கிய சிலிண்டரிலிருந்து காஸ் கசிந்தால் உங்களுக்கு கஷ்டம்தான்.

பாதுகாப்பை முன்னிட்டு, சிலிண்டரை ஒருபோதும் கடன் வாங்குதலோ இரவல் வாங்குதலோ கூடாது.

ARTIC 4305

Bharatgas



**குக்கிங் காஸை உங்கள் சிறந்த நண்பனாக்கிக் கொள்ளவும்.**

பொதுமக்கள் நலனை முன்னிட்டு பாரத் பெட்ரோலியம் கார்ப்பொரேஷன் லிமிடெட்டால் வெளியிடப்பட்டுள்ளது.



மேடையிலிருந்து தலைவர்கள் எல்லோரும் கீழே இறங்கினார்கள். முன்னரே பெயர் குறிப்பிடப்பட்டிருந்த மூன்று பேர் தேர்தல் அதிகாரிகளாக உட்கார்ந்தார்கள்.

வாக்குப் பெட்டி மேஜையின் மேல் வைக்கப்பட்டது. வாக்குச் சீட்டுக்கள் விநியோகம் ஆயின. கோயம்புத்தூர் பாண்டிச்சேரி அரவக்குறிச்சி கிருஷ்ணகிரி தர்மபுரி பிரதிநிதிகள் வெளிப்படையாகத் தோழர் ராஜரத்தினத்துக்கு ஆதரவு தெரிவித்தார்கள். சென்னையும் அவர் வசம் இருந்தது. தோழர் பண்டாரே இப்போது உள்ளங்கால் வியர்த்து உட்கார்ந்திருந்தார். இடது தோளுக்குள் குடைகிற மாதிரியிருந்தது. யூனியன் செயலாளராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டாக வேண்டும். இந்த முப்பது வருடங்களில் தோழர் பண்டாரே நிறைய விரோதங்களைச் சம்பாதித்தாகி விட்டது. முக்கியமாய் நிர்வாகத்தில் பெரிய தலைகள். யூனியன் செயலாளராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டாக வேண்டும். பதவி இழந்தவனிடம் நிர்வாகம் பொட்டையாட்டம் ஆடும். தோழர் பண்டாரேக்கு பயமாக இருந்தது. பதவி என்பது புலி சவாரி. இறங்குதல் ஆகாது. விரோதங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. கல்யாண மண்டபத்தில் திடீரென்று பரபரப்பு ஏற்பட்டது. தோழர் பண்டாரே சற்றே வலுவான மாரடைப்புக்குள்ளாகியிருந்தார்.

இப்போது கூட்டத்தில் மீண்டும் கூச்சல் ஏற்பட்டது. தோழர் ராஜரத்தினம் கம்மிய குரலில் திரும்பவும் மைக்கில் கத்தினார். அமைதியும் ஆம்புலன்சும் வர கொஞ்சம் நேரம் ஆனது. தோழர் பண்டாரே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் பட்டார்.

அனுதாப அலைகள் வீசலாயின. தோழர் ராஜரத்தினத்தின் ஆதரவாளர்களுக்கு இப்போது தோழர் பண்டாரேயை எதிர்த்துப் பேச விஷயங்களற்றுப் போயின.

கிருஷ்ணகுமாருக்கு அசதியாய்இருந்தது. அவன் பட்ட கஷ்டங்கள் யாவும் வியர்த்தமாகிவிட்டது. காலியாய் இருந்த நாற்காலியொன்றில் போய் உட்கார்ந்தான்.


அவன் உட்கார்ந்திருந்த வரிசைக்குப் பின் வரிசையில் இரண்டு செட் யூனிபாரமும். விளையாட்டுச் சாமான்களும் பெறுவதற்காக இன்னமும்அந்தப் பார்வையற்ற குழந்தைகள் முத்துக்குமாரனும் தமிழ்ச் செல்வியும் காத்துக் கிடந்தன. இன்றைய அமளிகளில் அந்தக் குழந்தைகளுக்கு டோக்கன் தரப்படாமலே போய்விட்டது.

''செல்வி நமக்குச் சோறு எங்கே போடுவாங்க?'' என்றான் முத்துக்குமாரன்.

''தெரியல்லியே'' என்றாள் தமிழ்ச்செல்வி.

# கிரிக்கெட் கவிதை

போட்டி 34



பட்டுப்புடவை பரிசுத்திட்டம்

கிரிக்கெட்பற்றி ஒரு புதுக்கவிதை எழுதவேண்டும். அதைத் தாக்கியோ தாங்கியோ எழுதலாம். சமுதாயப் பிரச்னைகளுடன் தொடர்பு படுத்தி எழுதலாம். நேரடியாகவே — அல்லது அங்கத பாணியிலே அமைபலாம். பிரசுரமானால் பரிசு உண்டு. கீழே வெற்றிடத்தில் சுமார் 8-10 வரிகளுள் எழுதி இந்த அரைப்பக்கத்தைக் கத்தரித்து அனுப்பும்போது உறைமீது ''கிரிக்கெட் கவிதை'' என்று குறிப்பிடல் அவசியம். குலுக்கல் முறையில் ஒருவருக்குப் பட்டுப்புடவை.


முடிவு தேதி: **29-12-84**

**19 பட்டுப்புடவைகளுள் ஒன்றைப்பெற நிச்சயம் உங்களுக்கு வாய்ப்பு உள்ளது. வாரம் தவறாமல்போட்டியில்பங்குபெறவும்.**

என் பெயர் ..................


விலாசம்: ..................

..................



சேலம் கல்கி மங்கையர் மலர் கோகுலம் ஏஜெண்ட் ஸ்ரீ வி. சந்துரு அவர்களின் குமாரத்தி செல்வி இராஜேஸ்வரிக்கும் சென்னை ஸ்ரீ ஜி. பெருமாள் அவர் களின் குமாரன் செல்வன் பாலகிருஷ்ணனுக்கும் (JBA Printing Ink) சமீபத்தில் திருச்சி அருகே உள்ள சமயபுரத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்.

# குடும்பம்



## வெள்ளித்திரை

**வி**ஜயகாந்த்திற்கு மாறுதலான வேஷம் தரவேண்டும்தான். அதற்காக இப்படியா பென்ஷன் வாங்குபவர் மாதிரி ஒரு வேலையும் இல்லாமல் உட்கார்த்துவது? டைட்டாய் பாண்ட் போட்டு, கலர் கலராய் சட்டை போட்டுக் கொண்டு பாதி நேரம் வளவளவென்று ஜெய்சங்கரோடு வாய்ச்சண்டை போடுவதோடு சரி.

சுஜாதாவும் 'ஊருக்கு மாங்கொட்டை' கேஸ்தான். மாடியிலிருந்து சோகமாய் ஒவ்வொரு படியாய் இறங்கி வந்து ஜெய்சங்கரை மார்பில் குத்த வேண்டியது. 'குழந்தையைத் தேடாமலேயே என்னை ஏமாத்திட்டிருங்க' என்று புலம்ப வேண்டியது. தூணைக் கட்டிக் கொண்டு அழ வேண்டியது. ஆக்ஷன் ரீப்ளே மாதிரி இதே ரீதி டயலாக். இதே மாதிரி காட்சி. டைரக்டர் புதுசாய் ஒன்றும் செய்யாமல் இழோ இழோ என்று இழுக்கிறார்.

ஜெய்சங்கர் ஒரு ஐயோ பாவம். வெ.ஆ. மூர்த்தி பழமொழி ரம்பம். இத்தனை ஈர மத்தாப்புகளுக்கு நடுவில் அந்த இரண்டு குழந்தைகளும் தான் மெயின் இன்ஜின்கள்.

பெற்றோர்களுக்குள்ளே தகராறு. வீட்டின் நடுவில் ஒரு குறுக்கு சுவர். அந்த அடிதடியில் குழந்தைகள் இரண்டையும் பிரித்து விடுகிறார்கள். சேர்ந்தே சாப்பிட்டு சேர்ந்தே தூங்கிப் பழக்கமான இரண்டும் துணையில்லாமல்வாழப் பிடிக்காமல் தவிக்கின்றன. வாய்ப்பானை ஏற்படுத்திக் கொண்டு திருட்டுத்தனமாய் சந்திக்கின்றன. வீட்டை விட்டே ஓடி விடுகின்றன.

அப்புறம் ஈராத்தே போட்டு, ஷூ பாலீஷ் போடும் ஸ்ரீப்ரியா அறிமுகம். குழந்தைகள் அங்கே போய்ச் சேர வில்லன்கனால் வெளிநாட்டு ஆள் பத்துலட்சம் (எதற்கு அத்தனை பணம்?) தருகிறேன் என்று சொன்னதால் தேடப்படுகிறார்கள்.

கொஞ்சம் சண்டை. குழந்தைகள் பணயம் என்று சதை புதை சேற்றில் சிக்கி வெளியே வராமல் சுற்றோ சுற்று என்று சுற்றிச் சுற்றி... பெரியவர்களெல்லாம் ஒரு வழியாய் ஒன்று சேர்கிறார்கள்.

எறும்புப் புற்று மாதிரி செட்டிங் போட்டு விட்டு பயங்கரமான மலைக்குகை என்று நம்பச் சொல்கிறார்கள். போதாததற்கு வெடிகுண்டுகள் வைத்து வெடித்து வேறு காட்டுகிறார்கள். உடம்பில் நெருப்பைப் பற்றிக் கொண்டு போடும் சண்டைகள் மட்டும் பரவாயில்லை ரகம்.

சங்கர் கணேஷ் மாதிரியே மியூஸிக் போட கங்கை அமரன் கற்றுக் கொண்கிறார்.

என்னவோ போங்கள், சார்!

—ஜெயமன்மதன்

---

**நமது வோட்டு சிரிப்புக்கே!**

"எங்க தலைவர் டிக்கெட் கிடைச்ச உடனே ஒரு ஊர்வலம் விட்டார்... அப்புறம், மனு கொடுக்க ஒரு ஊர்வலம், மனு கரெக்டா இருக்குன்னு தெரிஞ்சதும் ஒரு ஊர்வலம், போஸ்டர் ஒட்ட ஆரம்பிச்சதுக்கு ஒரு ஊர்வலம், முதல் பிரசாரக் கூட்டத்துக்கு ஒரு ஊர்வலம், கொடியேற்று விழாவுக்குஒரு ஊர்வலம், கடைசி பிரசாரக் கூட்டத்துக்கு ஒரு ஊர்வலம் — இப்படி ஏழெட்டு ஊர்வலம் விட்டார்!"



"அது சரி, எவ்வளவு வோட்டு வித்தியாசத்திலே ஜெயிச்சார்?"

"ஜெயிக்கவாவது! இருந்த பணமெல்லாம் ஊர்வலத்துக்கே செலவழிஞ்சுட்டது... அதனாலே, பணம் கொடுத்து வோட்டு வாங்க முடியாம, தோத்துப் போயிட்டார்!"

# நெருப்பு மலர்

## இந்துமதி

### 21

#### ஜூன் 1

**ரா**ணுவ முகாமின் உயர் அதிகாரிகளுக்கே மேஜர் ஜெனரல் குல்தீப்சிங் பிராரை அடையாளம் தெரியவில்லை. அர்ஜுன் கூட ஒரு வினாடி 'ராணுவ முகாமிற்குள் நுழைந்திருக்கிற இந்தப் புதிய மனிதர் யார்...?' என்று ஆச்சர்யமாகப்பார்த்துப் பின்னரே புரிந்து கொண்டான். குல்தீப்சிங் பிரார் மிகக் கம்பீரமான — முகம் மழிக்கப்பட்ட — தாடியில்லாத சீக்கியர்களில் ஒருவர். புத்தி கூர்மைக்கும், செயல் திறமைக்கும் பெயர் போனவர். லெப்டினண்ட் ஜெனரல் கிருஷ்ணசாமி சுந்தர்ஜி (Goc-in-C Western Commend) நிறைய நம்பிக்கை வைத்திருக்கிற அனுபவசாலிகளில் குல்தீப்சிங் பிரார் முதன்மையானவர். மீரட் கண்டோன்மெண்டில் மனைவியுடன் மொரீஷியஸ் நிமித்தம் ஒரு சின்ன சுற்றுப் பிரயாணம் புறப்படத் தயாராக விமான டிக்கெட் எடுத்திருந்த பிராரை அவரே எதிர்பார்க்காத வகையில் லெப்டினண்ட் ஜெனரல் சுந்தர்ஜி கூப்பிட்டார்.

#### மே-28

"**மி**ஸ்டர் பிரார், உங்கள் பகுதிப் படைப் பிரிவுடன் மீரட்டை விட்டு உடனே அமிர்தசரஸ் புறப்பட்டு விடுங்கள்..."

சுந்தர்ஜியின் அந்தக் கட்டளை பிராரைச் சற்று ஆச்சரியப்படுத்திற்று. ஆனாலும் தம் ஆச்சரியத்தை வெளிக்காட்டாமல் கேட்டார் அவர்.

"சார்... எத்தனை நாட்களுக்கு நான் அமிர்தசரஸில் இருக்க வேண்டும்...?"

சுந்தர்ஜியின் பதிலில் லேசாய் ஒரு கவலையும், மிகுந்த பொறுப்பும் இழையோடிற்று.

"தெரியவில்லை பிரார். எத்தனை நாட்கள் நீங்கள் அங்கே தங்க நேரிடும் என்பதை என்னாலேயே கணிக்க முடியவில்லை. நாட்களா, மாதமா என்பதைக் கூட குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை..."

அந்தப் பதிலுக்குப் பின்னர் மேஜர் ஜெனரல் பிரார் மேலே கேள்விகள் எதுவும் கேட்கத் துணியவில்லை. ஆனால் அவருக்குள் நிறைய சந்தேகங்கள் ஓடின.

'திடீரென்று தன் பிரிவுப்படையுடன் அமிர்தசரஸ் போகச் சொல்கிற காரணமென்ன...? அங்கு தன் வேலை என்ன? அதுவும் தீவிரவாதிகள் பஞ்சாபைப் படுகளமாக்கிக் கொண்டிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில்...? ஒருவேளை அங்கு ராணுவநடவடிக்கை எடுக்கப்படுகிறதோ...? பிரதமரின் உத்தரவு இதற்குக் கிடைத்துவிட்டதோ..?.'

கொஞ்ச நாட்களாகப் பஞ்சாபில் ராணுவ நடவடிக்கை எடுக்கப்படலாம் என்பதுஅனைவராலும் அனுமானிக்கப்பட்ட ஒன்றுதான். இன்னும் சொல்லப் போனால் எப்போதோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும்— போலீஸ் அதிகாரி அத்வால் பொற்கோவிலினுள் தீவிரவாதிகளால் சுடப்பட்டு இறந்து போன உடனே நடவடிக்கை எடுக்கப்படும் என்பது நிறைய பேர்களின் கருத்தாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அமிர்தசரஸ் அனுப்பப்படுகிற காரணத்தைப் பிரார் ஒருவாறு ஊகித்தாலும் நிச்சயமாக அதுதானா என்பதை அவரால் சுந்தர்ஜியிடம் கேட்க முடியவில்லை. வேறு யாரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாது என்பதும் அவருக்குத் தெரியும். சுந்தர்ஜியைத் தவிர, ராணுவத் தளபதிக்கு அடுத்து உயர் பதவி வகிக்கிற லெப்டினண்ட் ஜெனரல் டி. எஸ். டயாய்க்குக்கூட இந்த ராணுவ நடவடிக்கையும், செயலாற்ற வேண்டிய முறைகளும் தெரிந்திருக்காது என்று தோன்றியதால் சுந்தர்ஜியிடம் பிரார் ஒரே ஒரு கேள்வி மட்டுமே கடைசியாகக் கேட்டார்.

"அமிர்தசரஸ் புறப்பட எனக்கு எவ்வளவு நேரமிருக்கிறது சார்...?"

சுந்தர்ஜி லேசாய்ச் சிரித்தார்.

"ஹெலிகாப்டரில் ஏறி அமிர்தசரஸில் இறங்குகிற நேரம் மட்டுமே இருக்கிறது..."

பிராருக்கு நிலைமையின் அவசரம் புரிந்தது. ஆனாலும் அவர் ஒருநாள் அவகாசம் தரும்படி சுந்தர்ஜியிடம் கேட்க சுந்தர்ஜி யோசித்தார்.

#### மே-25

**மி**க அவசரமாகப் புதுடில்லி மேலிடத்தில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. காஷ்மீரிலிருந்த ஜெனரல் ஏ. எஸ். வைத்தியா பயணத்தை முடித்துக் கொண்டு உடனே டில்லி வரக் கோரப்பட்டார். ஏ. எஸ். வைத்தியாவிடமும், சுந்தர்ஜியிடமும்ராணுவ நடவடிக்கை பற்றி விவாதம் செய்யப்பட்டு

முடிவில் பொறுப்பு முழுதும் சுந்தர்ஜியிடம் விடப்பட்டது. முழு ஆயத்தம் செய்ய மூன்று வார காலமாவது அவகாசம் தேவைப்படும் என்று சுந்தர்ஜி சொன்னதைக் கத்தரித்துச் சடாரென்று குறுக்கிட்டுச் சொன்னார் பிரதமர் இந்திராசாந்தி:

"இல்லை. ஜூன் மூன்றும் தேதி தொடங்கி, ஆறும் தேதிக்குள், ராணுவம் தன் வேலையைத் திறம்படச் செய்து முடித்துவிட வேண்டும்."

சுந்தர்ஜியால் பிரதமரிடம் மேலே ஒன்றும் பேச முடியவில்லை. அவருக்குக் கொடுக்கப்பட்ட அவகாசம் எண்ணி எட்டே நாட்கள் தான். அதற்குள் திட்டம் வகுத்து முறையாய் அத்தனை காரியங்களையும் செய்வது என்பது சாதாரணமில்லை.

ஆனால் பிரதமர் இந்திராசாந்தி அவ்வளவு அவசரமாக ஜூன் 3–ம் தேதியைத் தேர்ந்தெடுத்ததற்குப் பலமான காரணம் இருக்க வேண்டுமென்று நினைத்தார் சுந்தர்ஜி. அதற்குத் தகுந்த மாதிரி நிறையச் செய்திகளை அவரும் கேள்விப்பட நேர்ந்தது. ஜூன் 3-ம் தேதி நம் ராணுவம் முந்திக் கொள்ளவில்லை என்றால் ஜூன் 10–ம் தேதி அன்னிய ராணுவம் பஞ்சாபில் இறக்கித் தாக்குதல் நடத்தப் போவதாக ஒரு செய்தி அவர் காதிலும் விழுந்தது...

லண்டனில் இருக்கிற காலிஸ்தான் விடுதலை இயக்கத்தைச் சார்ந்த கங்காசிங் தில்லானும், ஜகஜித்சிங் சௌஹானும் (இந்த ஜகஜித்சிங் சௌஹான் தான் இந்திரா காந்தியின் தலையையோ, உடம்பையோ கொண்டு வருபவர்களுக்குப் பரிசளிக்கப்படும் என்று அறிவித்தவர். இந்திரா காந்தி கொடூரமாகச் சுடப்பட்டு இறந்த அன்று இனிப்பும், மதுபானமும் வழங்கிக் கொண்டாடியவர்.) அடிக்கடி எதிர் நாட்டு அதிபருடன் சந்தித்ததாக சொல்லப்படுகிறது.

இதைத் தவிர பொற்கோவிலில் இருக்கும் காலிஸ்தான் தீவிரவாதிகளின் தலைவரும், சீக்கிய மதத் தலைவருமான பிந்தரன்வாலே



யின் ஆட்கள் அன்னிய நாட்டிலிருந்து ஆயுதங்களைக் கடத்திக் கொண்டு வந்ததாகவும் — அன்னியச் சீமையில் சீக்கியத் தீவிரவாதிகளுக்கு ராணுவப் பயிற்சி கொடுக்கப் பட்டதாகவும் கருதப்பட்டது. எனவே ஜூன் 3—ம் தேதியைப் பிரதமர் மிக அவசரமாகத் தேர்ந்தெடுத்திருக்கவேண்டும் என்பதை உணர்ந்திருந்தார் சுந்தர்ஜி.

### மே-30

மேஜர் ஜெனரல் பிரார் தம் பட்டாளத்தை ரயிலிலும், விமானத்திலும் ராணுவ வண்டிகளிலும் அமிர்தசரஸ் அனுப்பிவிட்டு அது போல் டில்லியிலிருந்தும் பட்டாளங்கள் கிளம்பியிருக்கும் என்கிற எண்ணத்துடன் ஹெலிகாப்டரில் காப்டன் அர்ஜுனப்பாவை அழைத்துக் கொண்டு புறப்பட—

ஜெனரல் வைத்தியா சண்டிகாரில் லெஃப்டினண்ட் ஜெனரல் சுந்தர்ஜியுடனும், ரஞ்சித்சிங் தயாளுடனும் பஞ்சாப் ராணுவ இயக்கத்திற்கு 'ப்ளூஸ்டார்' என்று ரகசியப் பெயரிட்டு அது இயங்க வேண்டிய வழி, முறைகள் இவைகளைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார்...

### ஜூன்-1

மேஜர் ஜெனரல் பிரார் ஒரு சாதாரணக் கால்சட்டை, மேல் சட்டையுடன் பொற்கோவிலுக்குள் சென்று கொண்டிருந்த நூற்றுக்கணக்கான பக்தர்களில் ஒருவராய்— அடையாளம் கண்டுபிடிக்க முடியாதவராய் உள்ளே நுழைந்தார். மூன்றாம் தேதி ஐந்தாவது சீக்கிய குரு அர்ஜுன் தேவன் ஆண்டுவிழா ஆனதால் கூட்டம் நிறையவே இருந்தது. ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாய்க் குழுமிக் கிடந்தனர். அந்தக் கூட்டத்தில் ஒருவராய்ப் பார்வையைக் கூர்மையாக்கிக் கொண்டு அங்குலம், அங்குலமாய்க் கண்காணித்தபடி முன்னேறிய பிரார் மீது யாருக்கும் எந்தச் சந்தேகமும் ஏற்படவில்லை.

இதற்கு முன்னர் பிரார் அடிக்கடி பொற்கோவிலுக்கு வந்திருக்கிறார். அப்போதைய பொற்கோவிலுக்கும், இப்போதைய பொற்கோவிலுக்கும் நிறைய வித்தியாசங்கள் தென்பட்டன. சுவர்களில் ஆயுதப் புதைப்பிற்குச் சலவைக் கற்கள் உடைக்கப்பட்டிருப்பதும், அங்கங்கே குழிகள் செதுக்கி, கம்பங்கள் நடப்பட்டிருப்பதும் தெரிய வந்தன. எவ்வளவு துருவிப் பார்த்தாலும் அதற்கு மேல் அவரால் எதுவும் கண்டு பிடிக்க முடியவில்லை. கண்டுபிடிக்க நேரமும் இல்லை. எதிரிகளின் (யுத்தத்தின் போது யாரை எதிர்க்கிறோமோ அவர்களுக்குப் பயன்படுத்துகிற அதே எதிரிகள் என்ற வார்த்தையைத்தான் தீவிரவாதிகளுக்கும் பயன்படுத்த நேர்ந்தது.) பலம் என்ன, அவர்களின் ஆயுத பலம், படை பலம் எதுவும் தெரியவில்லை.

இந்த நிலைமையில் மேஜர் ஜெனரல் பிராரின் பொறுப்பு இன்னமும் அதிகமாயிற்று. பொற்கோவிலுக்குள் குறைந்த பட்சத் தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என்பதும், புனிதப் புத்தகமான குருகிரந்த சாஹிப் வைக்கப்பட்டுக் கிட்டத்தட்ட இருநூறு வருடங்களாக இடைவிடாமல் படிக்கப்பட்டு வருகிற ஹர் மந்திர் சாஹிப்பிற்கு ஒரு சேதமும் ஏற்படக் கூடாது என்பதும் பிரதமர் கட்டளை என்று சுந்தர்ஜி சொல்லி அனுப்பியிருந்தார். இதை எப்படி நிறைவேற்றப் போகிறோம் என்கிற பிரமிப்புடன் மேஜர் ஜெனரல் பிரார் ராணுவ முகாமிற்குத் திரும்பி வந்ததும் ஒரு சீக்கியனைப் போல் மாறு வேடமிட்டு உள்ளே போய்த் திரும்ப வந்த அர்ஜுன் தான் சேகரித்த தகவலைச் அவரிடம் சொன்னான்.


''சார்... கிட்டத்தட்ட 500—லிருந்து 800 மீட்டருக்குள் பொற்கோவிலைச் சுற்றிப் பதினேழு வீடுகள் இருக்கின்றன. இதில்தான் தீவிரவாதிகள் தங்கியிருக்கிறார்கள். பொற்கோவிலின் மேல் கட்டப்பட்டிருக்கும் தண்ணீர்த் தொட்டியைச்சுற்றியும் குருராம் தாஸ் சராய் பகுதியின் கிழக்கிலும் சமையலறைக்கு மேற்கில் இருக்கிற மாடங்களிலும் ஆயுதங்களோடு நிறைய பேர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள்...''

''அப்படியா...?'' என்று பிரார் தம் முன் நெற்றியைத் தடவியபடி யோசித்தார். பின் கண்கள் பளிச்சிடச் சொன்னார்.

''ஒரு தரம் நாம் ஹெலிகாப்டரில் போய்ப் பொற்கோவிலுக்கு மேலே சுற்றிக்

---

**நமது வோட்டு சிரிப்புக்கே!**



## பொங்கல் பூவிரிந்து,
## மங்கல மணம் வீசட்டும்!

ஹேண்ட்லூம் ஹவுஸ்
வழங்கும்
புத்தாண்டு-பொங்கல்
சிறப்புத் தள்ளுபடி!



அனைத்து ரகங்களுக்கும் விழாக்காலத் தள்ளுபடி **20%**

பிரிண்டட் சில்க், ஆர்கென்ஸா புடவைகள் மற்றும் சில ரகங்களுக்கு மேலும் **20%** சிறப்புத் தள்ளுபடி.

17.12.84 முதல் 16.1.85 வரை ஞாயிறு உட்பட எல்லா நாட்களிலும் விற்பனை உண்டு.

24.12.84 அன்று மட்டும் விடுமுறை.

வாருங்கள்:

**ஹேண்ட்லூம் ஹவுஸ்**

(மத்திய அரசு ஆதரவு பெற்றது)
7 ரத்தன் பஜார், சென்னை-3.

கோயம்புத்தூர்:
512, திவான் பகதூர் ரோடு,
இசையா ஆஸ்பத்திரி எதிரில்,
R.S. புரம், கோயம்புத்தூர்-2.

ADWAVE/HH/2795



கண்காணித்து விட்டு வரலாமே அர்ஜுன்...?''

''ஓ... எஸ். அப்படியே செய்யலாம் சார்...''

மிகச் சக்தி வாய்ந்த தொலைநோக்குக் கண்ணாடிகளுடனும் போட்டோக் கருவிகளுடனும் இருவரும் பொற்கோவிலுக்கு மேல் பறந்தனர். வராந்தா வளைவுகளிலும் வெய்யில் தாங்கிகளிலும் செங்கற்கள் கட்டப்பட்டு மூன்று பக்கமும் மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டு இயந்திரத் துப்பாக்கிகள் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது தெரியவர — பொற்கோவில் ஒரு பெரிய யுத்தத்திற்குத் தயாரான நிலையில் இருப்பது புரிந்தது. முகாமுக்குத் திரும்பி அர்ஜுனிடம் விவாதித்தார்.

''அர்ஜுன்! ஒரு புனிதமான வழிபாட்டு ஸ்தலத்தை இப்படி ஆயுதக் கிடங்காக மாற்றியிருப்பதை நினைத்தால் வருத்தமாகவும் வேதனையாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட இடத்தைத் தாக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு எதிரிகள் நம்மை ஆளாக்கி விட்டிருக்கிற ஹிம்சையில் தவிக்கிறேன். நான் ஒரு சீக்கியன் என்பது உனக்குத் தெரியும் அர்ஜுன். ஆனாலும் நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற வேண்டிய நிலைமையிலும் ஒரு ராணுவ அதிகாரியின் பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய கடமையிலும் இருக்கிறேன். என் படைப் பிரிவில் என்னைப் போல நிறையச் சீக்கியச் சிப்பாய்களும் அதிகாரிகளும் இருக்கிறார்கள். இந்த ராணுவத் தாக்குதல் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள நினைக்கிறேன் அர்ஜுன். அவர்களிடம் மனம் விட்டுப் பேச ஆசைப்படுகிறேன். இதற்கு உன்னால் ஏற்பாடு செய்ய முடியுமா...?''

''எஸ் சார். உடனேயே அதற்கு ஏற்பாடு செய்கிறேன் சார்...''

அர்ஜுன் மிக விரைப்பாக சல்யூட் அடித்து உள்ளே போன பத்தாவது நிமிடம் ராணுவக்கூட்டம்ஒன்றுகூட்டப்பட்டது. பிராரின் படைப் பிரிவினர் மட்டுமின்றி டில்லியிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் வந்திருந்த ஏராளமான சிப்பாய்களும் அதிகாரிகளும் குழுமியிருக்க பிரார் மிகக் கம்பீரமாக, நெஞ்சைத் தொடுகிற விதத்தில்பேச ஆரம்பித்தார்.

''நாட்டு ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவித்துப் பஞ்சாபைக் தனியாகப் பிரித்துக் கொண்டு போய் விட நினைப்பவர்களையும், கலகக்காரர்களையும், அப்பாவி மக்களின் உயிரைக் கொல்பவர்களையும் தடுத்து அடக்கி அமைதியை விளைவிப்பதற்காக நாம் இங்கே அனுப்பப்பட்டிருக்கிறோம். இதுவரை நம் எதிரிகள் அந்நிய நாட்டினராகத் தான் இருந்து வந்தனர். ஆனால் இப்போது தீவிரவாதிகள் நம் நாட்டையும், இனத்தையும் சேர்ந்த சீக்கியர்களாக, நமக்கும், தேசத்திற்கும் விரோதிகளாக மாறியிருப்பது மிகவும் வருந்தத் தக்க, அவமானப் படத் தக்க ஒரு விஷயம்தான். அதிலும் புனிதப் பொற்கோவிலைத் தங்கள் பாசறையாக வைத்துக் கொண்டு அதிலிருந்து தாக்குதல் நடத்துவது கண்டிக்க வேண்டியது மட்டுமின்றி உடனே, மிக உடனே எப்படியாவது நிறுத்தப்படவும் வேண்டும். அந்தப் பணியைச் செய்வதற்கே நாம் இங்கே வந்திருக்கிறோம். கடமையைத் தொடங்குவதற்கு முன் ஒரு சீக்கியன் என்ற முறையில் இங்கே சீக்கியர்களாக இருக்கக் கூடிய அதிகாரிகளிடமும், சிப்பாய்களிடமும் ஒரு விஷயத்தை மனம் விட்டுச் சொல்லிப் பகிர்ந்து கொள்ள நினைக்கிறேன்... உங்களின் எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுக்க ஆசைப்படுகிறேன். அதனாலேயே இப்போது கூட்டம் கூட்டிப் பேசுகிறேன்...''

''இந்த ராணுவத் தாக்குதலில் கலந்து கொள்ள யாருக்காவது தயக்கம் இருக்குமானால் — இதில் ஈடுபட வேண்டாம் என்று நினைத்தால் அவர்கள் தாராளமாக இச்சண்டையை விட்டு விலகி இருக்கலாம். ஈடுபடாமல் ஒதுங்கிப் போகலாம். அப்படி ஒதுங்குகிறவர்கள் மீது ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என்று உறுதியளிக்கிறேன். அதனால் சண்டையில் ஈடுபட மறுப்பவர்கள் லேசாய்த் தங்கள் கைகளை மட்டும் உயர்த்துங்கள் போதும்...''

கணீரென்ற குரலில் சொல்லி முடித்து அந்தப் பெரிய கூட்டத்தை ஒரு வினாடி மௌனமாகப் பார்த்தார் பிரார். கூட்டத்தினிடையே எந்தச் சலனமும் இல்லை; ஒரு சிறு அசைவில்லை; யார் கையும் உயரவும் இல்லை.

சட்டென்று உணர்ச்சிவசப்பட்டுப்போனார் பிரார். அவர்களின் ராணுவக் கட்டுப்பாடும் கண்ணியமும், கடமை உணர்ச்சியும், தேசப் பற்றும் நெஞ்சைத் தொட்டு உடம்பு முழுதும் சிலிர்ப்பாக ஓடிற்று. இன்னமும் நிமிர்ந்து நிற்கச் செய்தது. மனம் நிறைய சந்தோஷமும், குதூகலமும் எட்டிப் பார்க்க குரல் கரகரக்கச் சொன்னார் அவர்.

''நன்றி நண்பர்களே, மிக்க நன்றி...''

சொல்லி விட்டு பிரார் கீழே இறங்கப் படபடவென்று கைகள் தட்டப்பட்டன. அந்தக் காட்சியில் மெய் சிலிர்த்து, கண் கலங்க ஓர் ஓரமாக உணர்ச்சி வசப்பட்டவனாக நின்றிருந்த அர்ஜுனுக்கு உடனே இருத்திகாவின் ஞாபகம் வந்தது. அவளை அழைத்து வந்து காட்ட வேண்டும் போல் இருந்தது. 'இதுதான் ராணுவக்கட்டுப்பாடு. இதுதான் தேச பக்தி...' என்று சொல்ல வேண்டுமென்று தோன்றியது.

மேடையை விட்டு இறங்கிய மேஜர் ஜெனரல் பிரார் அவனைக் கடந்து போக—

அவரது அந்தப் பரந்த மனத்திற்கும், உயர்ந்த எண்ணங்களுக்கும் சேர்த்தே தலை வணங்கினான் அர்ஜுன்...

(தொடரும்)

---

**இந்தியாவின் இந்திரா—மாலன்**

கட்டுரை அடுத்த வாரம்

இடம் பெறும்

---



# அன்பு வேண்டுகோள்

1969லிருந்து 1971 ஆம் ஆண்டு வரை பிரதமர் இந்திரா காந்தியார் பெரும்பான்மையில்லாத சிறுபான்மை அரசினை (Minority Government) நடத்தி வந்தார். தி.மு. கழகம் ஆதரித்த காரணத்தால்தான் அவரது ஆட்சி நீடித்தது.

நாங்கள் ஆதரித்த காரணத்தால் தான் பதினான்கு வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டன.

மன்னர் மான்யம் ஒழிந்தது.

நாங்கள் ஆதரித்த காரணத்தால் தான், சுதந்திர இந்தியாவின் வரலாற்றிலேயே முதல் தடவையாகத் தடுப்புக் காவல் சட்டம் (Preventive Detention) இந்தியச் சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கப்பட்டது. சேலம் உருக்காலை அப்போது தான் அமைந்தது; அதன் காரணமாக ஆந்திரத்திற்கும், கர்நாடகத்திற்கும் கூட உருக்காலைகள் கிடைத்தன!

எப்படி?

தமிழக மக்கள் அப்போது தி.மு.க. சார்பாகத் தேர்ந்தெடுத்த 25 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்தி, உறவிற்குக் கை கொடுத்து, உரிமைக்குக் குரல் கொடுத்து, தமிழக மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் தேவையானவற்றைப் பெற்றுக் கொடுத்தது.

இன்றையச் சூழ்நிலையில் இது தி.மு.கழகத்தால் மட்டுமே முடியும்.

ஏனெனில் 'போடு தோப்புக் கரணம்' என்றால், 'இந்தா, எண்ணிக் கொள்' என்கிற நிலையில் நாங்கள் இல்லை; ஏனெனில் எங்கள் மடியில் கனம் இல்லை.

எனவே தமிழக வாக்காளப் பெரு மக்களே! நாங்கள் நாடாளுமன்றத்திற்கு தி.மு.கழக உறுப்பினர்களை அனுப்பி வைத்தால் அவர்கள் தமிழகத்தின் நலனுக்காக வாதாடும் வழக்கறிஞர்களாக இருப்பார்கள்; இந்தித் திணிப்பைத் தடுத்து நிறுத்தி இந்தி பேசாத மக்களுக்குப் பண்டித நேரு கொடுத்த வாக்குறுதியை அரசியல் சட்டத்தில் இடம் பெறச் செய்ய அரும்பாடுபடும் தூதுவர்களாக இருப்பார்கள்; தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல—தென்னகத்திற்காகவும் போராடும் ஒரு இராணுவ அணி வகுப்பாக இருப்பார்கள்!

திட்டமிட்டுச் செயலாற்றுதல் — திறமை மிக்க நிர்வாகம் — விரைந்து முடிவெடுத்துப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் பேராற்றல் - இவையனைத்தும் ஒன்பதாண்டு காலத்துக் கழக ஆட்சிக்கு மேதைகள் அளித்த நற்சான்று!

ஆனால் இன்று?

முடங்கிவிட்டது நிர்வாகம்!

எனவே — சூட்டிச் சுவராகி விட்ட தமிழக அரசின் நிர்வாகத்தை உடனடியாகச் சீர் செய்ய நிபுணர்கள் கொண்ட நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஒன்றை உடனடியாக அமைத்துச் செயல்படுத்துவோம்.

கழக ஆட்சியில், தொழில் துறையில் இந்தியாவிலேயே மூன்றாவதாக

இருந்த தமிழகம் இப்போது 13வது இடத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது.

இதை உடனடியாக மாற்றி, புதிதாகத் தொழில் தொடங்குவோர் ஒரே அலுவலகத்தை அணுகினால் போதும் (Single — window Scheme); அவர்களுக்குப் பதினைந்தே நாட்களில் தொழிற்சாலைக்கான நிலம்—மின்சாரம் முதலிய அனைத்தும் கிடைத்திட வழி செய்வோம்.

மாநகராட்சிகள் — நகராட்சிகள் — பஞ்சாயத்துகள் — கூட்டுறவு அமைப்புகள் — ஆகியவற்றிற்கு ஆறே மாதங்களில் தேர்தல் நடத்துவோம்.

காலையில் எழுந்ததும் பிள்ளைகள் சிலேட்டையும் புத்தகத்தையும் தேடுவதற்குப் பதிலாகப் பிளேட்டையும் குவளையையும் தேடுகிற நிலையைமாற்றி — படிப்பில் துடிப்புடன் கவனம் செலுத்திடும் வண்ணம், சத்துணவுத் திட்டம் செம்மைப் படுத்தப்படும் என்று உறுதி கூறுகிறோம்.

அரசு ஊழியர்களுக்கு நான்காவது சம்பளக் கமிஷன் அறிக்கை தருவதற்குள் உடனடியாக உகந்த இடைக்கால நிவாரணம் அளிப்போம்.

அரசு ஊழியர்களுக்கு ஆண்டுதோறும் போனஸ் வழங்குவோம்.

விவசாயிகளின் பம்ப் செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும்.

55 வயதடைந்த விவசாயத் தொழிலாளர்களுக்கும், கைவினைஞர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படும்.

கிராமங்களிலிருந்து நகரங்களுக்குக் கல்வி பயிலச் செல்லும் மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படும்.

குத்தகை சாகுபடியாளர்கள் மீது சுமந்துள்ள குத்தகை பாக்கிகள் ரத்து செய்யப்படும்.

இதுவரை சுமந்துள்ள பயிர்க்கடன் அனைத்தும் ரத்து செய்யப்படும்.

ஒவ்வொரு தாலுகாவிலும் கிராம வளர்ச்சி வங்கிகள் கிராமப்புற மக்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

மதுபானக்கடைகளைத் திறந்து இதன் காரணமாகக் கோடிக்கணக்கான ரூபாய்களை லஞ்சமாகப் பெற்று வருவதை நாட்டு மக்கள் நன்கறிவர்.

நாங்கள் இந்த நாற்றமெடுத்துக் கிடக்கும் சாராய சாம்ராஜ்யத்திற்கு முடிவு கட்டியே தீருவோம் என்று உறுதி கூறுகிறோம்.

கழக ஆட்சியிலே கடுகளவு தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டாலும், அவற்றைத் திருத்திக் கொள்ள நாங்கள் தவறியதே இல்லை.

இன்றோ கடல் அளவு தவறுகள்! அதில் கவிழ்ந்த படகாகத் தமிழகம் தத்தளிக்கிறது! தடுமாறுகிறது! அதனைக் கரை சேர்க்கும் வல்லமை கழகத்திற்கு உண்டென நம்புவீர்!


பொழுதுக்கொரு பொய்—வேளைக்கொரு புளுகு. இப்படித்தான் இங்குள்ள ஆட்சியாளர்கள் மக்களை ஏமாற்றுகிறார்கள்!

இனியும் ஏமாறத் தயாராக இருக்கிறதா தமிழ் இனம்? இதுதான் எங்கள் கேள்வி!

இந்த இயக்கத்தின் இலட்சியப் பயணத்தின் வெற்றி இலங்கைத் தமிழர் உள்ளிட்ட உலகமெங்கும் வாழுகிற தமிழர்களின் உள்ளத்துக்கு ஓர் மகிழ்ச்சி!

மற்றவர்களைப் போல உங்களிடம் நாங்கள் வெறும் அனுதாபத்தைக் கேட்கவில்லை.

யாரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தால் நாடு வாழும் – நலிவு தீரும் என்கிற நல்ல தீர்ப்பை வழங்குமாறு கேட்கிறோம்! உங்களுக்கு ஊழியம் புரியத்தான் உங்களிடம் உத்தரவு கேட்கிறோம்!



# ஆதரிப்பீர் உதயசூரியன்

வெளியீடு: தி. மு. கழகம், சென்னை,

# கமல் பதில்கள்



○ "சகலகலாவல்லவனை எடுத்தவர்கள் அறிவு ஜீவிகள்"

20. வி. ராமசாமி, புளியூர், இருக்கி.
உங்களது ஒரு பக்கம் சினிமாத் திரையை விலக்கிப் பார்த்து உங்களது மாரல், வால்யூஸுக்காக மகிழும் அறிவு ஜீவிகள். இன்னொரு பக்கம் 'டீ! கமல் டீ!' என்று கனவு காணும் பெண்கள். ஒரு நடிகனுகிய உங்களுக்கு எப்படி இந்த இரண்டும் சாத்தியமாயிற்று?

'டீ கமல் டீ' அப்படீன்னு சொல்வது என் அதிர்ஷ்டம். மற்றவர்கள், அறிவு ஜீவிகள் என்னை ரசிப்பது எப்படீன்னு தெரியலே. என்னு அறிவுக்கும் எனக்கும் ரொம்ப தூரம்...

ரமணன்: அதெப்படி ஒப்புக் கொள்ள முடியும்? உங்க அறிவுத் திறனும் பிலிம் மீடியத்திலே உங்களுக்கு இருக்கிற டெக்னிகல் ப்ரிலியன்ஸும் ராஜ பார்வை படத்திலே பளிச்சுன்னு தெரியுதே.

அதைவிடப் பளிச்சுன்னு என் கண்ணிலே பட்டது சகல கலா வல்லவன் படத்தின் கலெக்ஷன் ரிப்போர்ட்! ஆக, அறிவு ஜீவின்னு பார்க்கும் போது, அறிவுடன் ஜீவிப்பவர்கள் தான் அறிவு ஜீவிகள் என்று வைத்துக்கொண்டாலும் சகலகலாவல்லவனை எடுத்தவர்களே அறிவு ஜீவிகள்.

ரமணன்: ஆனு ராஜபார்வையை யாரும் ரசிக்கலேன்னு சொல்ல முடியாது. அதுக்கு உலகெங்கிலும் ரசிகர்கள் இருக்காங்க. அந்த மாதிரி படங்களை மறுபடி பார்க்கணும்கிறது தான் எங்களுக்கெல்லாம் ஆசை.

அது உங்க ஆசைங்கிற பட்சத்திலே நீங்க மைனரிட்டிங்கிறது தவிர வேற உங்களைப் பற்றிக் குறை சொல்ல எனக்குத் தோணலை.

21. நாகராஜன், சென்னை–2.
தமிழ் மரபுக் கவிதைகளோடு ஒப்பிடும் போது இன்றைய புதுக் கவிதைகள் இலக்கிய அந்தஸ்துக்கு உரியவைதானு?

இது கமலஹாசனுக்கு வந்த கேள்வி தானு? என்னு இது ஒரு கவிஞனுக்கு வந்த கேள்வி மாதிரி இருக்கு. இதைச் சொல்ல அருகதை இல்லேன்னுலும் நான் அருகதை இல்லாத பல விஷயங்களைச் பேசியிருக்கேன். எழுதியிருக்கேன். புதுக்கவிதையெல்லாங்கூட எழுதியிருக்கேன். புதுக்கவிதை எழுதக் காரணம் — மரபு இதெல்லாம் எனக்குத் தெரியாது. அதனுல புதுக்கவிதை எழுதினேன். அப்படிப் பார்க்கும் போது இரண்டுக்கும் இடையில் எனக்குத் தெரிகிற வித்தியாசம், மரபு கவிதைகள் கிண்டியில் ரேஸில் ஓடும் குதிரைகள் மாதிரி. எது வேகமாக ஓடுகிறதுன்னு பார்த்துக் கொண்டு இத்தனை வட்டத்துக்குள்ள இத்தனை நேரத்துக்குள்ள அந்த வின்னிங் போஸ்ட்டைரீச் பண்ணுதான் வெற்றிங்கற குதிக்கோனோட ஓடிய குதிரைகள். புதுக்கவிதைகள்ங்கிறது, சந்தோஷத்தில் பால் குடித்த கன்றுக்குட்டி இங்கும் அங்கும் துள்ளித் துள்ளி ஓடுவது போல் ஒரு வரம்பில்லாமல், வட்டமில்லாமல் சுற்றி ஓடும் கன்றுகள். இரண்டிலும் அழகிருக்கிறது. அதை மறுக்க முடியாது...

○ "ஃபிரெண்ட், ஃபிலாஸஃபர், கைட்."



22. ஆர். வி. எஸ். மணி, சென்னை–4.
தங்கள் நடிப்பையும் அந்தரங்க வாழ்க்கையையும், மிகவும் தரக் குறைவாக விமர்சிக்கும் நிருபரை நேரில் காண நேர்ந்தால் என்ன செய்வீர்கள்?

அவர் விமர்சனங்கள் தரங்குறையாமல் இருந்திருக்குமாயின் அதிலிருக்கும் நல்லது, கெட்டதுகளை ஆராயும் ஒரு கலைஞனின் பெருமிதம் எனக்கு உண்டு. தரம் குறை

## நேரம் நல்ல நேரம்

யுமேயானால் நான் மனிதனாகும் நிர்ப்பந்தத்தை அவர் உண்டாக்கி விடுவார். நடிகன்னு உசரமான மேடையில் அவனை வைத்துப் பார்க்கும் ரசிகர்களை நான் குறை கூற முடியாது. ஆனா அவனும் மனிதன் தான். அவனுக்குப் பின்னால் சூரிய வட்டம் இல்லே. அப்படி இருக்கும் போது அவனுக்கு ஆத்திரம் என்பது வரத்தான் செய்யும். அடிக்கடி நான் சொல்வேன், ஒரு டி. எஸ். பியோ டி. ஐ. ஜி.யோ போகும் போது 'டி. ஐ. ஜி. போறாண்டா'ன்னு சொல்லும் தைரியம் யாருக்கும் கிடையாது. ஆனா நடிகனிடம் மட்டும் ஓர் உதாசீனம், அதே சமயத்தில் ஒரு பாசமும் அதிகமாக வழங்கப் படுகிறது. இதை எப்படி ஒப்புக் கொள்வ துன்னு தெரியலே. திடீர் திடீர்னு நடிகனுக் குள்ளே இருக்கும் மனிதன் பீறிட்டு வந்து விடுவான். அவனைக் கொஞ்சம் கண்ட்ரோல் பண்ணி 'கமலஹாசா! அப்படியெல்லாம் இருக்கக் கூடாது'ன்னு நான் ஆறுதல் சொல்வதுண்டு.

ராமணன்: ரசிகர்களைப் பொறுத்த வரை 'போறான்'னு சொல்றது அன்பினால்தான் சொல்றாங்களே தவிர. அவமரியாதைன்னு சொல்ல முடியாது இல்லியா...?

அவமரியாதை இல்லை. அது எனக்குப் புரியுது. வெறுமனே போறான்னு சொல்லிட்டா பரவாயில்லே... சில தரக் குறைவான விமர்சனம்னு இருக்கிறது இல்லையா? அதுல சில எதுகை மோனைகளோட சொல்வாங்க. அப்படிச் சொல்லும் போது நிறுத்தி என்னதுன்னு கேட்கணும்னு சாதாரண மனிதன், பரமக்குடிக்காரன் வெளியே வந்து விடுவான்.

23. ஜி. விக்ரம், சென்னை—17.

எழுத்தாளர் இயக்குனர் திரு. ஆர். சி. சக்தி பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? அவர் இயக்கி நீங்கள் நடிக்க இனி வாய்ப்பு இருக்கிறதா?

கண்டிப்பாக வாய்ப்பு இருக்கிறது. ஆர். சி. சக்தி என்பவர் ஃப்ரெண்ட், ஃபிலாஸபர், கைட் என்று சொல்வாங்களே அந்த ஒரு ஸ்தானத்தில் இருந்தவர்; இருப்பவர். நான் பதினாறு வயசுப் பையனா இருக்கும் போது... வழக்கமா நீங்க பார்த்திருக்கலாம் பன்னிரண்டு பதின்மூன்று வயசுப் பசங்க பெரியவங்க பேசும்போது அதில் கலந்து கொண்டு தானும் ஒரு ஜோக் சொல்லணும், தனக்கு நடந்த ஒரு அனுபவத்தைச் சொல்லணும், பாலிடிக்ஸ் பற்றிப் பேசும் போது தன் கருத்தைக் கூறி அவர்கள் பேச்சில் கலந்துக்கணும்னு ஒரு ஆர்வத்திலே இருக்கும் போது 'நீ சும்மா இருடா, உனக்கு என்ன தெரியும்' அப்படீன்னு ஒதுக்கப்படும்போழுது ஏற்படும் உதாசீனம் இருக்கிறதே, அது அவன் வளர்ச்சிக்கு ஏற்படும் தடங்கலாக அமையும். அப்படி ஆகாம என்னைப் பாதுகாத்தவர் ஆர். சி. சக்தி. ஏன்னா, அந்த நேரத்திலே மீசை முளைக்காத நான் சினிமா பற்றி 'இப்படி ஷாட் எடுத்தா நல்லா இருக்கும்'னு சொன்னா, ...'ம்ம்... ரொம்ப கிழிச்சுட்டேரு நீரு; சும்மா இருடா' அப்படீன்னு சொல்லுவாங்க. அதான் வழக்கமா இந்த இண்டஸ்ட்ரிலே நடக்கக் கூடியது. நான் அஸிஸ்டண்ட்டா வேலை பண்ணிக்கிட்டிருக்கும் போது அஸோஸியேட் டைரக்டர் ஸ்தானத்திலே இருந்த பலர் கிட்ட 'இந்த ஷாட் எதுக்காகப் போடறது? அதுக்குப் பதிலா வண்டிச்சக்கரம் உள்ள டிராலியிலே வைச்சுக் காமிராவைத் தள்ளலாமே... இரண்டும் ஒண்ணுதானே' என்று சந்தேகத்தைக் கேட்கும்போது, 'இதெல்லாம் ஒரே நாள்ல தெரிஞ்சுக்கிடலாம்னா நாங்க ஏன்யா முப்பது வருஷம் வேலை செய்யறோம்? சும்மா இரு! முதல்ல கிளாப் கட்டை எடுத்து ஒழுங்கா நெம்பர் சொல்லி அடி! அப்புறம் அதெல்லாம் கத்துக்கலாம்' அப்படீன்னு சொல்லி என்னை உதாசீனப்படுத்திய ஒரு கூட்டத்தின் இடையில் ஆர். சி. சக்தி என்ற இந்த நபர், வயதில் என்னை விட மூத்தவர் என்னுடன் அமர்ந்து, 'அது எப்படி? நல்லாத்தானே இருக்கு நீ சொல்றது! எங்கே... எங்கே...?!' அப்படீன்னு சொல்லி... 'உணர்ச்சிகள்' என்ற படத்துக்கு அவர் கதை எழுதும் போது 'நீ கூட இருந்தா எனக்கு நல்ல ஐடியா வரும். நீவா. எனக்கு சொல்லு' அப்படீன்னு சொல்லி ''உணர்ச்சிகள்'' என்ற தலைப்பு நான் கொடுத்த போது ''இது பிரமாதமான டைட்டில்'' அப்படீன்னு என்னைப் பாராட்டி என்னைக் கண்கலங்கவே வைச்சிருக்கார். இப்போதும் சில நல்ல காரியம் நான் செய்தால், சலங்கை ஒலி அல்லது ராஜ பார்வை போன்ற படத்தில் நான் நடித்து விட்டால் ஒரு நல்ல ஐடியா சொன்னால் ஒரு சகோதர பாசத்துடன் கண்கலங்கும் நண்பர் அவர். அது ஆனந்தக்கண்ணீர். அவர் திறமையைப் பற்றி அவரே சொல்லட்டும்; அவர் படங்களே சொல்லட்டும். நான் சொல்லக் கூடாது. தற்பெருமையாகி விடும்!

24. பி. ராமன், தொட்டியம்.

தாங்கள் ஏதோ ஒரு காரணத்தினால் யாரிடமாவது கோபப்பட்டுப் பின்னர் அதற்காக வருந்தியதுண்டா?

ஓ! அதிகமாக் கோபப்பட்டிருக்கேன். 'கமலஹாசா! நீ இப்படி செஞ்சுப்புட்டியே! இது நியாயமா? முட்டாள்! முட்டாள்'னு திட்டிக்கிட்டு அதுக்கு அடுத்தபடி நான் செய்த காரியம் வெற்றியடையும் போது 'மன்னிச்சுக்க, ஏதோ கோபத்திலே சொல்லிட்டேன்'னு என் மனச்சாட்சிக்கு நானே ஆறுதல் சொல்லிக்கிறது. அதுஎன் விடமிருந்து ஆரம்பித்து என் நண்பர்கள் வரை செய்திருக்கிறேன் நான். கடுமையான ஒரு விமர்சனத்தைச் செய்து விட்டு அவர் செய்தது நல்லதுதான்னு நானே உணரும் போது என்னுடைய Contradictions —ஐப் பப்ளிக்கா நான் ஒப்புக் கொள்ளும் போது வருந்துகிறேன்னுதான் அர்த்தம். என்னுடைய காண்ட்ரடிக்ஷன்ஸைப் பார்த்து நான் பயந்தது கிடையாது. ஏன்னா, அதுதான் என்னுடைய வளர்ச்சிக்கான முழுமையான வித்துன்னு நினைக்கிறேன்.

## நான் விரும்பும் வேட்பாளர்

# நாடாள்வோருக்குத் தகுதி வேண்டாமா?

"அரசு தன் கடமைகளிலிருந்து தவறக் காரணம் ஆட்சியில் அறிவாளிகளும், உயர்ந்த எண்ணம் படைத்தவர்களும் தீர்க்கதரிசிகளும் தவிர்க்கப்படுவதே"


—யோகி அரவிந்தர்.

ஒரு நாட்டின் வளர்ச்சி அதன் வளங்களினால் மட்டும் உருவாக்கப்படுவதல்ல. அதன் தலைவர்களின் திறனைப் பொறுத்தே முன்னேற்றம் இருக்கும். எனவே ஏன் நான் விரும்பும் வேட்பாளராகிறார் திரு. நானி பல்கிவாலா

ஒரு பொறியாளர் ஐந்து ஆண்டுகள் கற்க வேண்டும். ஒரு மருத்துவர் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற வேண்டும். ஒரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் ஐ.ஏ.எஸ். தகுதி தேவை. ஆனால் 70கோடி மக்கள் நலனுக்காக சட்ட திட்டங்களை இயற்றும் நாடாள்வோருக்கு ஒரு தகுதியும் வேண்டாம். எந்தவித கல்வியறிவும் தேவையில்லை. விந்தையாக இல்லை! அதிகாரமற்றவர்களிடம் அறிவும், அறிவற்றவர்களிடம் அதிகாரமும் இருப்பதால் நம் நாட்டில் நடக்கும் அவலங்களை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அறிஞர்கள், நிபுணர்கள் ஆட்சியாளராக வேண்டும். என்னுடைய வேட்பாளர் பல்துறை அறிஞர்; மேலை நாடுகளும் போற்றும்பொருளாதார வல்லுநர்; அரசியல் சட்டமேதை; சிறந்த நிர்வாகி, நிபுணர். இவரின் சேவை நிச்சயமாக நாட்டுக்குத் தேவைதான். திரு. பல்கிவாலாவின் பெருமைகளை இப்புவனம் அறியாததல்ல. அவர் எழுதிய அரிய நூல்கள், இந்தியாவின் சார்பில் உலக அரங்கில் அவர் வாதிட்ட வழக்குகள்' அவர்வகித்த தலைமை ஏற்றுள்ள பெரும் பதவிகள், பம்பாய் பல்கலைக்கழகம் முதல் அமெரிக்க பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம் வரை பெற்ற பட்டங்கள் பற்றி பெரும் பட்டியலே தரலாம். அரசு பதவிகளால் அவருக்குப் புதிய பெருமை வந்து விடாது. அவரின் வருகையால் நாடாளுமன்றமே சிறப்புப் பெறும்.

மக்களை மாக்களாக்கும் இன்றைய அரசின் போக்கை மாற்ற இந்தத் தனிநபர் சுதந்திரக் காவலன் பாராளுமன்றத்தில் நுழைந்தேயாக வேண்டும். அரசியல் சாசனத்தின் அடிப்படையை அழிக்க அரசிற்கு உரிமையில்லை என அவசரநிலையின் போது உச்சநீதிமன்றத்தில் வாதாடிவெற்றி பெற்றவர். அன்று அரசின் நோக்கம் நிறைவேறியிருந்தால் காந்தியார் வாங்கித் தந்த உரிமைகள் பறி போயிருக்கும்.

மத்திய அரசின் சீர்திருத்தங்கள்(!)சட்டத்தை மீறிய போதெல்லாம் பாதிக்கப் பட்டவன் ஆண்டியாயினும் அரசனாயினும் நீதிக்காக வாதிட்டவர் பல்கிவாலா. இந்தியாவின் சார்பில் உலக நீதி மன்றத்தில் வாதாடி சரித்திரம் படைத்தவர், நாடாளுமன்றம் புகுந்து நீதியை நிலை நிறுத்தட்டும்!



நம் அரசின் தொடர்ந்தாற் பொருளாதாரக் கொள்கைகள் பற்றியும், பொதுத்துறை நிர்வாகச் சீர்கேடுகள் பற்றியும் விரிவாகப் பலதடவை எடுத்துக் கூறிய இந்தப் பொருளாதார நிபுணர் புதிய பொருளாதாரம் மலர, உழைப்பவர் உயர நாடாளுமன்றத்தில் பிரவேசிக்கட்டும்.

சீரிய சிந்தனையாளர், செயல்திறன் மிக்கவர், திரு. நானி பல்கிவாலா. அவர் போன்றவர்கள் நாடாள வாய்ப்பளித்தால் காந்தி விரும்பிய உண்மைச் சுதந்திரம் உருவாகும். மக்கள் வாட்டம் தீரும். வளர்ச்சி ஓங்கும்!

சென்னை—34.


**எம். ஆர். சுப்பிரமணியன்**

---

**நமது வோட்டு சிரிப்புக்கே!**

"இதென்ன! ஒரு விரல்லே இவ்வளவு பெரிய பேண்டேஜ் சுத்தியிருக்கிற மாதிரி படம் போட்டு, போஸ்டர் போட்டிருக்காங்க?"

"எங்க தலைவருக்கு நகசுத்தி வந்த போது எடுத்த படம் இது. ஜனங்களுக்கு அவர் மேலே அனுதாபம் ஏற்படறதுக்காக இப்படி ஒரு போஸ்டர் போட்டிருக்கோம்!"




கருத்து: நஜா

# சளியினால் ஏற்படும் இந்தத் தொல்லைகளில் எது உங்களை பாதிக்கிறது?




சளியை விரைவில் விரட்ட அதனால் உண்டாகும் எல்லாத் தொல்லைகளிலிருந்தும் விடுதலைபெற இரட்டிப்பு சக்திவாய்ந்த

# விக்ஸ் ஆக்ஷன்-500



சளி பிடித்ததோ சனி பிடித்ததோ என்பார்கள். சளியினால் ஏற்படும் துன்பங்கள் பல. உற்சாகமற்று நாளே பாழாகிறது. இரட்டிப்பு சக்திவாய்ந்த விக்ஸ் ஆக்ஷன் 500, சளியை போக்க வல்ல எல்லா மருந்துப் பொருள்களையும் ஒரே வில்லையில் கொண்டுள்ளது. சளியை போக்குவதுடன், நீங்கள் சுறுசுறுப்பாய் இருக்க உதவுகிறது. இரட்டிப்பு சக்திவாய்ந்த விக்ஸ் ஆக்ஷன் 500, நான்கு வழிகளில் செயல்படுகிறது. சளி மற்றும் அதன் உபாதைகள் அனைத்தையும் விரைவில் அகற்றி உடனடி நிவாரணம் அளிக்கிறது.

1. சளியினால் ஏற்படும் தலைவலியையும், உடல் வலியையும் போக்குகிறது.
2. மூக்கடைப்பை நீக்குகிறது.
3. சாதாரண தொண்டை கரகரப்பையும் வலியையும் குணப்படுத்துகிறது.
4. ஜுரத்தையும் ஃப்ளூவையும் கட்டுப் படுத்துகிறது.

**இரட்டிப்பு சக்திவாய்ந்த விக்ஸ் ஆக்ஷன்-500 சளியை விரட்டும்போதே உங்களை சுறுசுறுப்பாய் வைத்திடும்.**

CHAITRA B. RHL 42 TAM

# “ஹரண்டே புளுகு” என்று அலறினார்

○ ஆர். கே. லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்.

? கல்கியில் ஹைகூ கவிதைகள் வெளிவருமா?

! அடிக்கடி வெளிவராததற்குக் காரணத்தை மேத்தாதாசன் கூறக் கேளுங்கள்:

எழுதிய கவிதைகள்
தலை குனிந்து கொண்டன
மரத்தின் உச்சியில் பூ...

தகுதியான எதையும் நேயர்களுக்குத் தர கல்கி தயங்கியதில்லை. ஹைக்கூ கவிதை சுருக்கமாய் இருந்தால் போதாது. ரத்தினச் சுருக்கமாக இருக்க வேண்டும். அத்தகைய ரத்தினங்களை ஜப்பானில் மியூஸியத்தில் வைத்துப் பாதுகாக்கிறார்கள். மாதிரிக்கு ஒன்று:

கிளைக்குத் திரும்பும்
உதிர்ந்த மலரோ
பட்டுப் பூச்சி?

ஈழத்துக் கவிஞர் செல்வி சௌமினி:

கால்கள் மண்ணில்
துவள்கையிலே எண்ணம்
விண்ணைத் தொடுகிறது.

மீண்டும் மேத்தா தாசன்:

எலியைக் கௌவியபடி
எட்டிச் செல்லும் பூனை
பதவி வெறியர்களின் கையில் தேசம்.

○ ராஜீவ் நரசிம்மன், சென்னை-83.

? குற்றமற்றோர் ஆயிரக்கணக்கில் மடியும் (விஷ வாயுவால்) இந்நிலை ஐரோப்பாவிலோ, அமெரிக்காவிலோ நடந்திருந்தால்...?

! நடந்த பெருந் தவறுக்கு தார்மீகப் பொறுப்பைப் பகிர்ந்து கொள்ள வேண்டிய நிலையில் உள்ளவர்கள் தாங்கள் குற்றமற்றவர்கள் போல் நடிக்கமாட்டார்கள். தேர்தலை முன்னிட்டு கைது செய்தல் — விடுவித்தல் ஸ்டண்ட் அடிக்க மாட்டார்கள்.

○ பா. கிருஷ்ணதாஸ், கும்பகோணம்.

? மனைவியுடன் ஷாப்பிங் செல்வதால் ஏதாவது பயன் உண்டா?

! நிச்சயம் உண்டு, கடைக்காரர்களுக்கு.

○ க. பாண்டியன், பட்டிவீரன்பட்டி.

? வாஜ்பாய் மீது கல்லெறியப்பட்டது எதைக்காட்டுகிறது?

! இதுபோன்ற வன்முறைகள் பலவும் நாம் இன்னும் ஜனநாயகத்தைப் புரிந்து கொண்டு அதற்கு நம்மைத் தகுதி உடையவர்களாக்கிக் கொள்ளவில்லை என்பதைத்தான் உணர்த்துகின்றன.

○ லட்சுமி செங்குட்டுவன், வேலூர் (சேலம்).

? ஜனதா ஆட்சி செய்த இரண்டரை ஆண்டில் நாடு மிகவும் சீரழிந்து விட்டது என்று ராஜீவ் கூறுகிறாரே?

! அட, அம்மா மாதிரியே பிள்ளையும் பேச ஆரம்பித்து விட்டாரே, பலே!

○ எஸ். பிரபா, காரைக்குடி.

? விவேகானந்தர் பொன்மொழிகளில் தங்களைக் கவர்ந்தது?


! ''கீதை படிப்பதை விடவும் கால் பந்தாட்டம் ஆடுகிற போது சுவர்க்கம் உனக்கு மிக அருகில் இருக்கிறது'' என்று உடல் ஆரோக்கியம் பேணுவதை வலியுறுத்தும் விவேகானந்தரின் வாக்கு ஒரு கால் பந்தாட்ட மைதானத்தில் எழுதி வைக்கப்பட்டிருந்ததானது அண்மையில் கவனத்தைக் கவர்ந்தது. ஆனால் இதே கால் பந்தாட்ட மைதானத்தில் தான் கீதைப் பேருரைகளும் பல காலமாக நடந்து வருகின்றன என்பதை நினைக்கும் போது என்னவோ போல் இருக்கிறது.



○ அம்மா போலவே



○ ஜனநாயகத்துக்கு அடி



○ புளுகு?



○ பொருளாதார வாழ்வு...

○ கோ. பாஸ்கர், இளங்கார்குடி. ★

? நடிகர் ராமராவ், முதல்வர் ராமராவ், பதவி இழந்த ராமராவ், மீண்டும் முதல்வர் ராமராவ், இன்று தேசிய எதிர்க்கட்சிகளில் செல்வாக்குப் பெற்ற ராமராவ்— ஒப்பிடுக.

! ராமன் எத்தனை ராமனடி என்று அவர் வாழ்க்கையைத் திரைக்கதையாக்கி அகெ

# கூறுங்களேன்?

டமி, ஆஸ்கார் பரிசுகள் பெறுகிற மாதிரி திறம்படப் படம் பிடிக்கிறதாசவைத்துக் கொண்டால் பதவி இழந்த ராமராவ் ஸீன்கள் மனத்தில் என்றும் பசுமையாக நிற்கிற மாதிரி மற்ற காட்சிகள் நீடித்து நிலைக்காது. ராமராவ் என்ற மனிதனின் விசுவரூப தரிசனம் நமக்குக் கிட்டிய நாட்கள் அவை.

○ ஏ. சுகுமார், காஞ்சிபுரம்.
? நல்லவனுக்கு நல்லவன் படத்தைத் தொடர்ந்து

○ எத்தனை ராமனடி?　○ அறுவை









○ பொன்மொழி

ஒன்பது காட்சிகள் பார்த்தேன். என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
! கண் ஜாக்கிரதை என்று.

○ என். உலகநாதன், லால்குடி.
? டிக்கெட் கிடைக்காவிட்டால் தனிக்கட்சி ஆரம்பித்து விடுகிறார்களே, ஏன்?
! அதைவிட இது சுலபம் என்பதால்! யாருக்குமே இரண்டு தடவைகளுக்கு மேல் போட்டியிடக் கட்சி சார்பில் அனுமதி இல்லை என்ற எழுதப்படாத விதி அனைவருக்கும்பொதுவாக அமைத்துக் கொண்டால் மனப்புகைச்சலும் கசப்பும் இராது. இரண்டாவது அணித் தலைவர்கள் உருவாகவும் வாய்ப்பு வசதி ஏற்படும். ஜனநாயகம் கட்சியிலும், ஆட்சியிலும் தழைத்து வலுப்பெறும்.

○ வண்ணை கணேசன், சென்னை—11.
? உமக்கு யாருடைய அறுவை பிடிக்கும்? காம்பியர் கூற முடியுமா?
! அறுவை என்பது சாதாரண நகைச்சுவை தான். என்றாலும் சமய சந்தர்ப்பம். அப்போதைய நம் மனநிலையைப் பொறுத்து சூபீர் சிரிப்பு வரத்தான் செய்கிறது. நண்பனிடம் பாடப் புத்தகம் கடன் வாங்கிக் கொண்டு திரும்பும் மகனிடம் ''நல்லவேளை பரீட்சை சமயத்தில் எங்கேயோ சினிமாக்குப்போயிட்டயாக்கும்னு நினைச்சேன்'' என்னும் போது, ''காயப் போடு'' என்று அவன் பதில் சொன்னால் உற்சாகமாகச் சிரிக்கவே தோன்றுகிறது! சிரிக்கிற 'மூட்' உருவாக்கி விடுவதில் எஸ். வி. சேகர் சமர்த்தர். அவர் வந்து நிற்கிற பாங்கு, முக பாவம், இவற்றிலே இறுக்கத்தைத் தளர்த்தி விடுகிறார். பிறகு,

''சால்வ அணி.''

''அப்படியா, காலண்டர் தரேன் மாட்டிக்கோ'' என்றால் கூட அவுட்டுச் சிரிப்பு ரசிகர்களிடம் எழத்தான் செய்கிறது.

○ பி. எம். ஜெயா, கோவை.
? குழந்தைவேலுவும், பஞ்சாயத்துத் தேர்தலும் நாடகம் நடத்தத் திட்டம். தலைமை தாங்க வருவீரா?
! குறிப்பிட்ட தேதியில், நேரத்தில் ஆரம்பிப்பீரா?

○ கி. சுப்பு, தொழுதூர்.
? ஹனிமூன் புளுகு என்று கலைஞர் கூறியது பற்றி?
! எம். ஜி. ஆர். உடல்நிலை தேறி வருகிறார் என்பது நூற்றுக்கு நூறு மெய்தான். ஆனால் பழைய எம். ஜி. ஆராகவே இருப்பாரா, இருக்க முடியுமா என்று யோசிக்கும் போது தான் அண்டப்புளுகு

## நீங்கள் கேட்டவை
## –தராசு

ஆகாசப் புளுகு பிரச்னைகள் தோன்றுகின்றன.

○ வேதா, திருவாரூர்.
? ஒரு கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டவர்கள் தங்களது பொருளாதார வாழ்வைச் செழிக்க வைக்க முயற்சிசெய்தல் பாவ காரியமல்ல என்று நாஞ்சில் மனோகரன் கூறியுள்ளாரே?
! அதுசரி, ஆனால் எந்த விதமாக அந்த முயற்சி நடக்கிறது என்பதிலேதான் தார்மீகப் பிரச்னை, பாவ புண்ணியம் எல்லாம் வந்து சேர்கிறது.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:

கோ. பாஸ்கர்,
இளங்கார்குடி (போஸ்டு),
கபிஸ்தலம் (வழி), 614 203.

தேர்தல் புறக்கணிப்பு

# வராதே வராதே ஓட்டு கேட்க வராதே



✖ ''இது எங்க ஊர் டிரங் ரோடு''

**விருத்தாசலத்துக்குப் பக்கத்தில் கீழ்க் குறிச்சி, மேலக் குறிச்சி, மாளிகை மேடு, முதலான ஆறு கிராமங்கள் தேர்தலில் ஓட்டுப் போடப் போவதில்லை என்று செய்தி தெரிந்து விருத்தாசலத்துக்குப் போய் வழி விசாரித்தேன்.**

அங்கிருந்து வேப்பூர் சென்று ஒரு சைக்கிளை வாடகைக்கு எடுத்துக்கொண்டு ஏழு கிலோ மீட்டர் சேறு சகதியில் பயணப்பட்டு (சில இடங்களில் சைக்கிளை தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு நடந்து) கிராமத்தை அடைந்தால்...

'வராதே! வராதே! ஓட்டுக் கேட்க வராதே!'' ''தேர்தலைப் புறக்கணிக்கிறோம்!'' என்றெல்லாம் சுவர் வாசகங்கள் கண்ணில் பட்டன.

கலியமூர்த்தி என்பவரைப் பார்த்த போது சொன்னார்: ''ஊருக்கு எலெக்ஷன் சமயத்துல மட்டும் தான் அரசியல்வாதிங்க வருவாங்க. அப்புறம் இந்தப் பக்கம் தலை வெச்சுக் கூடப் படுக்க மாட்டாங்க. போன எலெக்ஷன்ல தி.மு.க. வுல நின்னு, ஜெயிச்சதும், எங்க ஊரு எம். எல். ஏ. ஆளுங்கட்சியில சேர்ந்துட்டாரு. எங்க ஊருக்குக் கைகூப்பி, ஓட்டுக் கேட்க வந்தவரை, கட்சி மாறினப்புறம் ஊருக்கு வசதி செய்யணும்னு கேட்கப் போனப்ப, 'உங்க ஊரு நம்ம தொகுதிங்களா?' என்று கேட்டாரே பார்க்கலாம்!

'என்ன என்னவோ பண்ணி, யார், யாரையோ பார்த்து, கடைசில ஒரு சின்ன பாலம் கட்டறதுக்கு சாங்க்ஷன் ஆச்சு. கட்டின ஒரு வருஷத்துக்குள்ள, விழுந்துடுச்சு... அதேபோல இன்னொரு இடத்துல பாலம் கட்டறோம்னு சொல்லி, ஜல்லி எல்லாம் கொண்டு வந்து கொட்டினாங்க. சில மாசங்கள் வேலை நடக்காம இருந்து கடைசில, அந்த ஜல்லியையும் திரும்ப வாரிக்கிட்டுப்போயிட்டாங்க.'' மனமனவெனப் பொரிந்து தள்ளினார் கலியமூர்த்தி.


மாணிக்கம் சொன்னார்: ''அஞ்சாங் கிளாஸ் வரைக்கும் பள்ளிக்கூடம் இருக்கு. அதுக்குமேல படிக்கணும்னு, தினம் எட்டும், எட்டும் 16 கி. மீ. போய் வரணும். செத்தவங்களுக்குத் தந்தி குடுத்தா, இந்த ஊர்க்காரங்க பத்தாநாள் காரியத்துக்குத்தாங்க போக முடியும். ஒரு தபா, நெருப்பு புடிச்சுக்கிச்சு. ஆறு ஃபயர் சர்வீஸ்காரங்களுக்குத் தகவல் சொல்லி அவங்க வரத்துக்குள்ளாற, ஏகமா நாசமடைஞ்சுப் போச்சு. பாதை இப்படி இருந்தா ஃபயர் சர்வீஸ் என்ன செய்யும்?''

''அறுவடை காலத்துல, நெல் வாங்க வியாபாரிங்க இங்க வர மாட்டாங்க. நாங்க மூட்டைக்கு எட்டு, பத்து செலவு செஞ்சு நெல்லை, மெயின் ரோட்டுல கொண்டு வந்து கொடுக்கணும். எங்களுக்கு அடிப்படைத் தேவை ஒரு நல்ல ரோடுங்க'' என்றார் விவசாயி சட்டி முத்து.


மாளிகைமேடு கிராமத்து முன்னாள் தலைவர் சுருப்புடையார், ''இங்க எல்லா கிராமத்துக்கும், கரண்ட் லைன் போட்டிருக்காங்கன்னு தான் பேரு. மொத்தத்துல ஏழெட்டுப் பம்பு செட்டு ஓட்டத்தான் கரண்ட் சரியாயிருக்கும். மத்தவங்கெல்லாம் டீசல் எஞ்சின் வைச்சுத்தான் தண்ணி இறைக்கறோம். அந்த டீசல் வாங்கக் கூட வேப்பூர்தாங்க போகணும்'' என்றார்.

கட்டுரை படங்கள்: எஸ். சந்திரமௌலி


✖ சட்டிமுத்து




✖ மாணிக்கம்



✖ கலியமூர்த்தி




✖ கருப்புடையார்



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran

## வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர். பற்சிதைவை எதிர்த்திடுவீர்.



# கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர் !

தவறாமல் கோல்கேட் உபயோகிப்பதால்,
உங்கள் குடும்பத்தினரின் பற்களுக்கு ஆரோக்கியம், வலிமை, புத்துணர்ச்சி
தரும் தூய சுவாசம் கிடைக்கிறது.
இதுவே கோல்கேட்டின் பாதுகாப்பு வளையம்.

நீங்கள் பல் துலக்கும் ஒவ்வொரு முறையும்
கோல்கேட்டின் சமபலமான ஃபார்முலா
செயல்படுவது எப்படி என்றால்...



உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே
சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும்,
பற்சிதைவையும் உண்டாக்கும்
பாக்டீரியாக்கள் வளருகின்றன.




கோல்கேட்டின் ஒப்பற்ற செயல்புரியும்
நுரை ஆழ ஊடுருவிச் சென்று,
துர்நாற்றத்தை ஏற்படுத்தும் உணவுத்
துணுக்குகளையும் சிதைவு ஏற்படுத்தும்
பாக்டீரியாக்களையும் அகற்றுகிறது.



முறையாக கோல்கேட் கொண்டு பல்
துலக்குவதால் புத்துணர்ச்சி தரும்
தூய சுவாசமும், வலிமை மிகுந்த
ஆரோக்கியமும் தருகிறது.

ஒவ்வொரு முறையும் சாப்பிட்ட உடன்,
உங்கள் குடும்பத்தினர் தவறாமல் கோல்கேட்
கொண்டு பல் துலக்கட்டும்.
வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர்.
கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர்.




GK&E.B84.55 Tam

*கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும்*
*பெப்பர்மென்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது !*

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka